THE SUDAROLI

# சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

விலை : ரூபா 25 பக்கங்கள் 28 வார மலர்

ஜூன் 03 - ஜூன் 09 , 2012

June 03 - June 09, 2012



## இனமுறுகலை நோக்கிய எரிப்புகளும்..! இடிப்புகளும்...!!


ஜோதிடம் வென்றது

மீண்டும் கார் பந்தயத்தில் அஜித்...?

விமோசனம் கிடைக்குமா...

## ஒரு மாதத்தில்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆய்வாளர்களின்... எச்சரிக்கை

## வாரத்தில் 40 மணி நேரத்திற்கு மேல் பணிபுரிபவர்களுக்கு 'மூளைப் பாதிப்பு'

வாரத்தில் 40 மணி நேரத்திற்கும் மேல் உழைப்பவர்களுக்கு மூளை பாதிப்பு ஏற்படும் என்று எச்சரிக்கை மணி அடிக்கின்றனர் நிபுணர்கள். பணம் சம்பாதிப்பதற்காக இன்றைக்கு அதிக நேரம் உழைக்கும் இளைய தலைமுறையினர் 40 வயதை கடந்த பின்னர் மனரீதியான, உடல்ரீதியான சிக்கல்களைச் சந்திக்க நேரிடும் என்றும் அவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

அதிக நேரம் வேலை பார்க்கும் பணியாளர்களுக்கு 'டிமென்சியா' நோய் வரும் என்று ஏற்கனவே ஆய்வு முடிவு எச்சரித்துள்ளது. இந்த நிலையில் புதிதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் வாரத்தில் நாற்பது மணிநேரத்திற்கு மேல் வேலை பார்ப்பவர்களுக்கு படிப்படியாக மூளை சுறு சுறுப்பை இழந்து விடும் என்று தெரிய வந்துள்ளது. உடல் உழைப்போ, மூளை தொடர்பான உழைப்போ இரண்டிற்குமே இது பொருந்தும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

சொந்தமாக தொழில் செய்பவர்களாக இருந்தாலும் சரி அடுத்தவர்களிடம் வேலை பார்ப்பவர்களாக இருந்தாலும் சரி குறிப்பிட்ட அளவில்தான் உழைக்க வேண்டும். எப்பொழுது பார்த்தாலும் தொழிலில் ஈடுபடுபவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கிறார்கள் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஒரு வாரத்திற்கு 40 மணி நேரம்தான் உழைப்புக்கு செல விட வேண்டும். உடல் உழைப்பை வெளிப்படுத்தி செய் யும் வேலையாக இருந்தாலும், சிந்தித்து செய்யும் வேலையாக இருந்தாலும் இந்தக் கால அளவை தாண்டி ஒருவர் வேலை செய்வது அவருக்கு நல்லதல்ல என்கிறது இந்த ஆய்வு.

வாரத்திற்கு 40 மணி நேரத்தையும் தாண்டி வேலை செய்தால், அதனால் ஏற்படும் பாதிப்பு உடனே தெரியாது என்றும், நடுத்தர வயதை கடந்த பின்பு தான் இந்த பாதிப்பு தெரிய வரும் என்றும், குறிப்பாக, மூளையின் சுறுசுறுப்பு குறைய ஆரம்பிக்கும் என்றும் எச்சரிக்கிறார்கள் ஆராய்சியாளர்கள்.

இதுகுறித்து மேலும் கருத்துவெளியிடும் ஆய்வாளர்கள், மென்பொருள் நிறுவனங்களில் வாரத்திற்கு 5 நாட்கள் வேலை செய்பவர்கள் தினமும் 10 மணி நேரத்துக்குக் குறையாமல் வேலை செய்கின்றனர். இதனால் தான் இவர்கள் எளிதில் சோர்வடைகின்றனர், மன அழுத்தத்துக்கும் ஆளாகின்றனர். அதில் இருந்து விடுபடத்தான் விடுமுறை நாட்களை ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்று கழிக்கின்றனர் என்றனர்.

உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக பணியாட்களை அதிக வேலை பார்க்க வைக்கும் நிறுவனங்கள் இறுதியில் தரம் குறைவான பணியை மட்டுமே அவர்களிடம் இருந்து பெறமுடியும். இதற்குக் காரணம் அவர்களின் உடலும், மனமும் சோர்வடைந்து விடுவதே என்கின்றனர் நிபுணர்கள்.

### சுடர்ஒளி வாரமலர் விலையில் மாற்றம்

உங்கள் சுடர்ஒளி வாரமலரின் விலையை அடுத்த இதழிலிருந்து 5 ரூபாவால் அதிகரிக்கவுள்ளோம். வண்ணங்களுடன், 28 பக்கங்களில் வெளிவரும் சுடர்ஒளி வாரமலரின் விலை அடுத்த வார இதழிலிருந்து 30 ரூபாவாக இருக்கும். உலகச் சந்தையில் பத்திரிகைத் தாள்களின் விலை அடிக்கடி அதிகரிக்கப்பட்டு வரும் நிலையில், இச்சிறிய விலை அதிகரிப்பை வாசகர்கள் புரிந்து கொண்டு, தொடர்ந்தும் சுடர்ஒளி வாரமலருடன் இணைந்திருப்பீர்கள் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

நிர்வாகம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இன்று அவ்வெதிர்ப்புணர்வைத் திசை திருப்ப இலங்கை அரசும் அதன் அடிவருடிகளும் இனக் குரோதங்களை வளர்ப்பதில் திட்டமிட்டு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவை இன்று இரு முனைகளில் முன்னெடுக்கப்படுகின்றன. ஒன்று சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே இன விரோதத்தை வளர்த்தல், மற்றது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் மோதலை உருவாக்கல்.

# இனமுறுகலை நோக்கிய எரிப்புகளும் இடிப்புகளும்

இலங்கையில் இன ஒடுக்குமுறை என்பது அரசியலில் வலிமை வாய்ந்த சக்தியாகப் பயன்படுத்தப்பட்டு வருவதை நாம் அறிவோம். இந்த இன ஒடுக்குமுறை அரசியலை முன்னெடுப்பதற்கு இனங்களுக்கிடையேயான கசப்புணர்வு திட்டமிட்ட வகையில் ஆட்சியாளர்களாலும், மேலாதிக்க சக்திகளாலும் உருவாக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் முதல் முதலாக 1915ம் ஆண்டு முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனக்கலவரம் அரங்கேற்றப் பட்டது. அது கண்டியில் இருந்த ஒரு பள்ளிவாசலுக்கு முன்பாகக் கொண்டு செல்லப்பட்ட ஒரு மரண ஊர்வலத்தில் மேளம் அடிப்பதை நிறுத்த மறுத்தமையால் ஏற்பட்ட முறுகல் காரணமாகவே அந்தக் கலவரம் இடம் பெற்றதாகக் கூறப்பட்டது. ஆனால் உண்மை அதுவல்ல.

அக்கால கட்டத்தில் கொழும்பு, கண்டி ஆகிய பிரதான நகரங்களின் வர்த்தக ஆதிக்கம் முஸ்லிம்கள் வசமே இருந்தன. ஆங்கிலேயர் ஆட்சியில் தமது மேலாதிக்கத்தை இழந்த சிங்கள நிலப்பிரபுக்கள் பிரதான வர்த்தக மையங்களைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். அநகாரிக தர்மபாலாவினால் முன்வைக்கப்பட்ட சிங்கள பௌத்த மேலாண்மை வாதம் முஸ்லிம்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் முஸ்லிம்களுக்கு எதிரான இனவிரோதக் கருத்துருவாக்கம் வலுப்படுத்தப்பட்டது. அந்த அடிப்படையில் நடத்தப்பட்ட இனக் கலவரம் காரணமாக கொழும்பு, கண்டி ஆகிய நகரங்களின் ஏற்றுமதி, இறக்குமதி உட்பட்ட முஸ்லிம்களின் வர்த்தக ஆதிக்கம் சிங்களவரால் கைப்பற்றப்பட்டது.

இவ்வாறே 1958ல் பண்டா செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தாகிய போது ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் காரணமாக அது கிழித்தெறியப்பட்டது. அதே போன்று 1977ல் தேர்தலில் தமிழ் மக்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆணை வழங்கிய போது ஒரு பெரும் இன அழிப்பு இடம் பெற்றது. போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம் எனச்சவால் விடப்பட்டு பல்லாயிரம் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இவ்வாறே 1983ல் திருநெல்வேலியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்ட போது நாடு முழுவதுமே ஒரு பெரும் தமிழ் இன அழிப்பு கட்டவிழ்த்துவிடப்பட்டது. வெலிக்கடைச் சிறைக்குள்ளேயே 53 தமிழ்க் கைதிகளைக் கொடூரமான முறையில் கொலை செய்து இலங்கையின் ஆட்சியாளர்கள் தங்கள் அநாகரிகத்தை உலகுக்கு வெளிக்காட்டினர்.

இன்று இலங்கை அரசு சர்வதேச அழுத்தங்கள் காரணமாக பல நெருக்கடிகளைச் சந்திக்கிறது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வேலையின்மை, வறுமை போன்றவை காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு எதிரான வெறுப்புணர்வு கூடி வருகிறது.

இன்று அவ்வெதிர்ப்புணர்வைத் திசை திருப்ப இலங்கை அரசும் அதன் அடிவருடிகளும் இனக் குரோதங்களை வளர்ப்பதில் திட்டமிட்டு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவை இன்று இரு முனைகளில் முன்னெடுக்கப்படுகின்றன. ஒன்று சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே இன விரோதத்தை வளர்த்தல், மற்றது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் மோதலை உருவாக்கல்.

அண்மையில் தமிழரசுக்கட்சியின் மாநாடு நடக்கவிருந்த மண்டபம் சில விஷமிகளால் எரியூட்டப்பட்டது. இது முஸ்லிம்களாலேயே மேற்கொள்ளப்பட்டது என வதந்தி பரப்பப்பட்டது. தமிழ் மக்கள் இதை எவர் செய்திருப்பார்கள் என்பதைத் தெளிவாகவே புரிந்திருந்த காரணத்தால் அந்த வதந்தி எடுபடவில்லை. அடுத்த நாளில் காத்தான் குடியில் முஸ்லிம் காங்கிரஸ் காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்டது. இது தேவநாயகம் மண்டபம் எரிக்கப்பட்டமைக்கான பழிவாங்கல் என்ற வதந்தியைப் பரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அது எடுபடவில்லை.

தமிழ் மக்களுகும் முஸ்லிம் மக்களும் விழிப்பாக இருந்த காரணத்தால் ஒரு நிலை மோதல் தவிர்க்கப் பட்டது. இது போன்று மட்டக்களப்பில் இரு தடவைகளில் மாகாத்மாகாந்தி, விவேகானந்தர், விபுலானந்தர், புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளை, பேடன் பவல் போன்றோரின் சிலைகள் உடைக்கப்பட்டன. இவற்றுக்கு முஸ்லிம்கள் மேல் பழி போட எடுக்கப்பட்ட முயற்சிகளும் பலிக்கவில்லை.

மன்னாரில் மீள் குடியேற்றம் என்ற பேரில் முஸ்லிம் மக்களை தமிழ் மக்களின் இடத்தில் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் மேற்கொண்ட நடவடிக்கையை மன்னார் ஆயர் ராயப்பு யோசப் ஆண்டகை அவர்கள் கண்டித்திருந்தார். மன்னாரில் ஐக்கியமாக வாழும் முஸ்லிம்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே முரண்பாடுகளை உருவாக்கும் முகமாகவே அமைச்சர் அந்த நடவடிக்கையை மேற்கொண்டார். அது மட்டுமின்றி தம்புல்லவில் புத்த பிக்குகள் நடந்து கொண்டமை போன்றே ஆயரும் செயற்படுகிறார் என நாடாளுமன்றத்திலும் உரை நிகழ்த்தி இலங்கை எங்கும் உள்ள முஸ்லிம்கள், கத்தோலிக்க மக்களை எதிர்க்கத் தூண்டினார்.

ஆனால் அவரின் நாடாளுமன்ற உரைக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தில் பெருமளவு முஸ்லிம்களும் கலந்து கொண்டதன் மூலம் அவரின் தீய நோக்கம் முறியடிக்கப்பட்டது.

ஆனால், தம்புல்ல பள்ளிவாசல் புத்த பிக்குகளால் சேதப்படுத்தப்பட்டதையடுத்து முஸ்லிம்கள் பொங்கியெழுந்த போது முஸ்லிம்களை, அமைதிகாக்கும் படி கோரி சிங்கள இனவாதிகளின் கவசமாக அமைச்சர் செயற்பட்டதை நாம் மறந்து விட முடியாது.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே முரண்பாடுகளை உருவாக்கும் விதத்தில் பேசியும் செயற்பட்டும் வரும் இவரும், இவரைப் போன்றவர்களும் சிங்கள இனவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராக நடவடிக்கைகளில் இறங்கும்போது இன ஐக்கியம் பற்றியும் நாட்டின் அமைதி பற்றியும் பேச ஆரம்பித்து விடுகின்றனர்.

500 ஆண்டுகள் பழமைவாய்ந்த முஸ்லிம் தர்கா அனுராதபுரத்தில் புத்த பிக்குகளின் தலைமையில் வந்த ஒரு குழுவினரால் இடிக்கப்பட்டது. அரசில் எத்தனையோ முஸ்லிம் அமைச்சர்கள் பங்காளிகளாக, இருந்த போதும் அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதைப் புனர்நிர்மாணம் செய்ய தம்புள்ளவில் 60 ஆண்டுகள் பழமைவாய்ந்த பள்ளிவாசல் புத்த பிக்குகளால் இடிக்கப்பட்டது. அப்போது முஸ்லிம் காங்கிரஸ், ஏனைய முஸ்லிம் மத அமைப்புகள் என்பன கடும் கண்டனங்களைத் தெரிவித்ததுடன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாகவும் அறிவித்தன. அந்த நேரத்தில் அரசில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்கள் இன நல்லிணக்கத்தைக் குலைக்கும் வகையில் நடக்கக் கூடாது எனக் கேட்டுக் கொண்டனர். அடிப்படையில் பள்ளிவாசலை இடிப்பதா? அல்லது இடிப்பதைக் கண்டிப்பதா? இன நல்லிணக்கத்தைக் குலைக்கும் செயல் என்பதே இப்போது எழும் கேள்வியாகும். அது மட்டுமின்றி அந்த மசூதி அமைந்துள்ள இடம் தற்சமயம் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு விட்டது. இது நகர அபிவிருத்தி என்ற பேரில் அப்பள்ளிவாசலை அவ்விடத்திலிருந்து அகற்றும் ஒரு நடவடிக்கைக்கு ஏற்ற வகையில் மேற் கொள்ளப்பட்ட ஒரு முன்னேற்பாடு என்றே கருதப்படுகின்றது.

இந்நடவடிக்கை தொடர்பாக இதுவரை எந்த ஒரு முஸ்லிம் அமைச்சரும் தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கவில்லை.

எதிர்காலத்தில் சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் வாழும் பகுதிகளில் உள்ள சகல முஸ்லிம் பள்ளிவாசல்களும் அகற்றப்பட்டு விடுமோ என்ற அச்சம் முஸ்லிம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அப்படியான அச்சம் எழுவது கூடத் தவிர்க்கப்பட முடியாதது மட்டுமின்றி அப்படி நடந்தால் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒரே நாடு ஒரே மக்கள் என்ற கொள்கையின் படி தேசிய இனங்களின் தனித்துவங்களை அழிப்பது ஒரு முக்கிய இலக்காகும். அவ்வகையில் தமிழ் மக்களினதும், முஸ்லிம் மக்களினதும், இனத் தனித்துவங்கள் அழிக்கப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பள்ளிவாசல்கள் இடிக்கப்படுவது, தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் புத்தர் சிலைகளை நிறுவுவது, தொன்மை வாய்ந்த இந்து ஆலயங்கள் விகாரைகளை இடித்துக் கட்டப்பட்டவை எனப் பொய்ப் பிரசாரம் மேற்கொள்வது என்பனவும் இந்நோக்கத்தின் அடிப்படையில் எழுபவையே.


எதிர்காலத்தில் இந்து ஆலயங்களும், இடிக்கப்படுவதற்கான முன்னறிவித்தலாகவும் இவை இருக்கலாம். இதன் காரணமாகவே இன்றைய அரசும் அதன் அடிவருடிகளும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்த முயல்கின்றனர்.

இப்பணியின் நாயகர்களாகச் சில முஸ்லிம் அமைச்சர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் உண்மையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக அல்லது சிங்கள இனவாதிகளின் பிரதி நிதிகளா என்பது தான் இப்போ எழும் கேள்வி.

எனவே தொடரப்போகும் இடிப்புகள், எரிப்புகள் தொடர்பாக தமிழ் முஸ்லிம் மக்கள் எச்சரிக்கையாக இருப்பதுடன் ஐக்கியப்பட்டு எதிர்ப்புக் குரல் எழுப்ப வேண்டும்.


**சந்திரசேகர ஆசாத்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீண்டும் மீண்டும்

நெடுந்தீவு மகேஷ்



இன்று அந்தப் பாடசாலையில் ஒரே ஆரவாரம். பாடசாலையின் முன் வாசலிலிருந்து பாடசாலை மண்டபம் வரைக்குமான நீண்ட தூரம் வண்ணச் சோடனைகளால் அலங்கரிக்கப்பட்டன. மண்டபம் முழுவதும் கதிரைகளால் நிறைந்தன. பாடசாலைச் செயற்பாடுகளுக்குப் புறம்பான இணைப்பாடச் செயற்பாடுகளுக்கும் மேலான சமூகத் தொடர்பு நிகழ்வாகவும் இது பலராலும் பார்க்கப்பட்டது. ஆனால், என்னவோ பாலைவனத் திருப்திப்படுத்தும் வகையில் உணர்வு குறுங்கிய ஒப்பாசார நிகழ்வாகவும் அது தோற்றமளித்தது.

அடுத்து நடைபெறப்போகும் அமைச்சர் வருகைக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றன. அதிபரும், ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும் ஒருவரோடொருவர் ஏதேதோ ஆயத்தங்களை எல்லாம் செய்து கொண்டிருந்தனர். இத்தனை நாட்களும் இல்லாத ஒரு பரபரப்பு அங்கே புதுமையைப் புகுத்தின. பாடசாலை செயற்கை அலங்காரங்களால் புதிய மாற்றம் பெற்றுக் கொண்டிருந்தது. பாண்ட் வாத்திய வேலைகளுக்கும் மாலை மரியாதைகளுக்கும் ஆயத்தங்கள் ஏற்பாடுகள் அருந்தும்.

இன்று கற்றல், கற்பித்தல் நிகழப் போவதில்லை. அதற்கான சந்தர்ப்பம் இருக்காது. ஏனெனில் அமைச்சரின் வருகையே இன்றைய அந்தப் பாடசாலையின் நிகழ்ச்சி நிரலில் பெரிதாகத் தெரிந்தது. பாடசாலை வளாகத்தின் முன் முற்றலில் ஓர் ஓரத்தில் கூடிய அதிபரும் சில ஆசிரியர்களும் அங்குமிங்குமாக நடந்து அவ்விடத்தில் எதையோ தேடினார்கள். எப்போதும் அமைச்சரின் வருகையின் சிறப்பை நினைவிருத்தும் நோக்கில் ஒரு மரக்கன்றை நாட்டுவதற்குப் பொருத்தமான நிலைத்தை அவர்கள் தேடினார்கள். பல மணிநேரம் முயன்றும் அதற்கான நிலைப்பத்தை அவர்களால் குறிப்பிட்டு இனங்காண இயலவில்லை.

ஒருவர் காட்டும் இடம் மற்றவருக்குப் பொருத்தமற்றதாகத் தோன்ற அடுத்தவர் காட்டும் இடத்தை எவரும் ஏற்றுக் கொள்ளாத நிலையில் தவித்தனர். அதிபர் சுட்டும் இடத்திலும் மரக்கன்றை நாட்டும் மனத் திருப்தி காணாத ஆசிரியர் குழுவினரே அங்கு இருந்தனர்.

அவர்களின் இத்தனை தேடல்களையும் அவதானித்து கொண்டிருந்த பெற்றோரில் ஒருவர், முதிய வயதினர் அப்பிரதேசத்தையும் பாடசாலைச் செயற்பாடுகளையும் அவதானித்து வருபவர், உடனேயே அவர்களைப் பார்த்து அவர் முன்பிருந்தே அறிந்திருந்ததும், பலமுறை குழிதோண்டித் தூர்ந்துபோய் இருந்ததுமான ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினார். "இதுதான் நீங்கள் மரக்கன்றொன்றை நாட்டப் பொருத்தமான இடம். ஏனென்றால் இங்கு வந்த பலரும் ஒவ்வொரு முறையும் மரம் நாட்டிப் பழக்கப்பட்ட இடம் இதுதான். இங்கேயே குழிவெட்டித் தோண்டி மரத்தை நாட்டுங்கள்" என்றார். அதைக் கேட்ட அதிபரும் ஆசிரியர்களும் அவரை ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

உண்மையும் அதுதான். ஒவ்வொரு முறையும் அந்தக் குழியில் நாட்டப்படும் மரத்துக்காக விழா எடுக்கும் சமூகம் அந்த மரத்தின் வளர்ச்சியில் பராமரிப்பில் கவனம் செலுத்துவதே இல்லை. நடப்படும் மரங்கள் அனைத்தும் கவனிப்பாரின்றிப் பட்டழிந்து போக, மீண்டும் மீண்டும் மரம் நடுவதே விழாவாகிப் போகிறது.

ஒரு மரத்தினை நட்டுவது மாத்திரமல்ல ஒரு கட்டடம் கட்டுதல், புதிய நிலையம் ஒன்றை நிர்மாணித்தல், திறந்து வைத்தல் என்பவை போன்ற எல்லாவற்றுக்குமே பெரியவர்கள் என அழைக்கப்படும் அமைச்சர்களும், ஆள்பவரும் பல சந்தர்ப்பங்களில் அடிக்கல் இடுவதோடு நின்று விடுவதே வழக்கம். மீண்டும் மீண்டும் நடப்படும் அடிக்கற்களும் மீண்டும் மீண்டும் திறக்கப்படும் பொது நிலைய விழாக்களும் மக்களை மாயைக்குள்ளேயே என்றும் நடத்துகின்றன.

மீண்டும் மீண்டும் ஒரே இடத்தில் நாட்டப்படும் மரக்கன்றுகள் ஒவ்வொன்றையும் நடும்போது மரத்தின் உடன் குறித்து கரை நிகழ்ந்திட படம் எடுத்துப் பத்திரிகையில் போடுகின்ற கொண்டாட்ட நிகழ்வோடு அது நின்றி வாடி மறைந்து போவதே இன்றைய நாட்களின் வழமையாகி விட்டது. அதனை பார்த்தெடுக்கும் பணிக்கு மீண்டும் அவரே வரவேண்டுமோ என்னவோ! உற்சாகமும் உறுதியும் இல்லாத கிரியைகளுக்குள் நாம் சிக்குண்டு மௌனிக்க; எங்கள் அபிவிருத்தி உறக்கம் கொள்வதும் "அதைப் பல்லக்கு தம்பி கால்நடை" என்ற வழமையே தொடர எமது சரிநிலையாகப் பேசப்படும் பொய்மையைச் சுற்றி நாம் உலவுவதும் நீள்வதால் அச்சமே எம்மை வாட்டுகிறது. சற்றே சிந்திப்போம்.

# அநாதரட்சகனின் நிமிர்வு

வைதேகி தேவராஜா

சிறுகதைகள் பொதுமக்களால் விரும்பி வாசிக்கப்படும் இலக்கிய வடிவமாகும். மனித வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளையும், முரண்பாடுகளையும் சமகால சந்தர்ப்ப விளைவுகளின் காட்சிகளாகவும் சிந்தனைக் கருப்பொருட்களாகவும் வெளிப்படுத்தும் சிறுகதைகளோடு "நிமிர்வு" எனும் நூலை ஆக்கி வெளியிட்டுள்ளார் அநாதரட்சகன்.

யதார்த்தம், முற்போக்கு என்ற அடைமொழிகளைப் பெற்றுள்ள சிறுகதைகளை ஆக்கி வடித்துள்ள அவர் இடதுசாரிகளின் இலக்கியப் போராட்டக் களத்துக்குள்ளே பயணிக்கிறார் என்பது தெரியவருகிறது. ஓரிரு சொற்களையே தலைப்புக்களாகக் கொண்டுள்ள கதைகளில் சொல்லவந்த கருப்பொருளின் கனதியை நடை மொழி வளத்தால் வாசிப்பவர் மனதில் அழுத்தி உலவவிடுகின்றார்.

மனித அவலத்தின் உறுத்தல்களையும், மனித மனத்தின் உயர்வுப் பெருமைகளையும் அவற்றால் விளையும் விளைவுகளையும் வெளிப்படுத்தும் சமூகச் சிந்தனைகளையும் உள்வாங்கும் வார்த்தைகளால் விரித்துரைத்துள்ள அநாதரட்சகன் ஓர் எழுத்தாளர் மாத்திரமல்லர், மனித நேயமிக்க சிறந்த கல்வியியலாளர்.

அல்லாய் வடக்கில் பிறந்து யாழ்ப்பாணம் நல்லூரில் வாழ்ந்துவரும் மு.இராசநாயகம், யாழ்ப்பாண வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றுகிறார். அவரது சிறுகதை ஆக்கங்கள் யாழ்த்தின் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. தற்பொழுது வெளிவந்து கொண்டும் இருக்கின்றன. சிறந்த ஒரு சிறுகதை எழுத்தாளரான அவரின் "நிமிர்வு" எனும் முதலாவது சிறுகதைத் தொகுப்பினை எஸ்.கொடகே சகோதரர்கள் வெளியிட்டுள்ளனர்.

சிறுகதை மாத்திரம் அல்லாது கட்டுரை, விமர்சனம் போன்ற துறை சார்ந்த ஆக்கங்களிலும் ஈடுபாடுடைய அநாதரட்சகன் சமூகத்தின் மக்களின் பிரச்சினைகளை முன்கொணரும் ஆளுமைமிக்க எழுத்தாளர் ஆவார். ஓவியம், கவிதை ஆகியவற்றின் மீதும் நாட்டம் மிக்க அவரது நிமிர்வு இலக்கிய பொட்டகைக்குள் வாசகரை இணைக்கிறது. தீமைகண்டு அஞ்சாது அதை எதிர்த்துநிற்கும் துணிவுகொண்ட அவரது எழுத்துகளுக்கும் நிமிர்வு பலம் சேர்க்கின்றது.

அவரது சிறுகதை இலக்கியத் திறன் மிளிரத் தொகுப்பிலுள்ள நிமிர்வு, சபலம், இழப்பு, தவிப்பு போன்ற கதைகள் பலவும் அவரை வல்லதோர் எழுத்தாளராக இனங் காட்டுகின்றன. எளிமையான உரையாடல்கள் மூலம் கதையை நகர்த்தும் பண்பு உணர்வைத் தொடுகின்றன. பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பாக வெளிவந்துள்ள "நிமிர்வு" வாசகர் எண்ணங்களையும் செயல்களையும் நல்லன நோக்கி நிமிர்த்தும் எனலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
THE SUDAROLI
வாரமலர்

03 ஜூன் - 09 ஜூன் 2012

85, ஜெயந்தி மல்லிகாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115798005
பக்ஸ்: 0115577944 - 5
E-mail: editorial@sudaroli.com

## திரிபுபடுத்தப்படும் வரலாறு

ஒரே நாளிற்குள் மக்கள் இருப்பதும் ஒவ்வொரு இனத் திற்குமான பிரதேசமோ நிலமோ இல்லை என்னும் கருத்திலிருந்து மாறிப்போய் வாழ்ந்து வரும் நிலைமையில் மக்களின் சிந்தனைகள் மாற விரும்புவதில் வியப்பு இல்லை.

இவ்வாறான கருத்துக்கள் ஆளும் தரப்பிலிருந்து தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றன. போர் முடிவுக்கு வந்த நாளிலிருந்து இக்கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதோடு இவற்றுக்கு ஏதுவான வேலைத்திட்டங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தாபய ராஜபக்ஷ ஊடகமொன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையில் வடக்கு தமிழர்கள் வாழும் பிரதேசமாகக் கருத முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

அரசதரப்பிலிருந்து வெளியிடப்படும் இவ்வாறான கருத்துக்கள் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதைப் பாதிக்கும் என்பதுடன் நாட்டின் முன்னேற்றம் மற்றும் தீர்வு முயற்சிகளையும் பாதிக்கும் எனவும் எதிர்க்கட்சியினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த நாட்டின் தமிழ் மக்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளாமல்தான் இவ்வாறெல்லாம் கருத்துக்களை வெளியிடுகின்றார்கள் என்று யாரும் நினைக்கக் கூடாது. பல நூற்றாண்டுகளாக இலங்கையின் வடக்கு கிழக்கில் தனித்துவமாக தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். போர்த்துக்கீசர், ஒல்லாந்தரை அடுத்து வந்த ஆங்கிலேயர்கள் தங்களின் வசதி கருதி வடக்கையும் தெற்கையும் இணைத்து நிர்வாகத்தை நடத்தி, வெளியேறும் போது நாட்டில் பெரும்பான்மையாகவிருந்த சிங்களவர்களிடம் நாட்டை ஒப்படைத்து விட்டுச் சென்றமையும் எல்லோருக்கும் தெரிந்த சுருக்கமான வரலாறு ஆகும்.

இது ஆளும் தரப்பினருக்குத் தெரியாத விடயமல்ல. அவர்கள் தெரிந்து கொண்டு பேசுகிறார்கள் என்பது தான் உண்மை. தமிழர்களின் வரலாற்றைத் திரிபுபடுத்துவதும், அவ்வரலாற்றை மாற்றியமைப்பதுவும் இன்று ஆளும் தரப்பினர் தீவிரமான நிகழ்ச்சிநிரலை அமைத்துள்ளது. இதனடிப்படையிலேயே இவ்வாறான கருத்துக்கள் சிங்கள மக்களின் மனங்களிலும் விதைக்கப்பட்டு வருகின்றன.

தெற்கில் சிங்களவர்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மக்கள் வாழ முடியுமானால் அப்பகுதியில் அவர்களின் கோவில்கள் ஆலயங்கள் இருக்க முடியுமானால் ஏன் சிங்கள மக்கள் வடக்கு கிழக்கில் குடியேறி வாழமுடியாது? பௌத்த விகாரைகளை அமைத்து வழிபட முடியாது? என்கிற வாதம் பொதுவான சிங்கள மக்களுக்கு ஏற்புடையதாகவே இருக்கும். இதற்கு மாற்றுக் கருத்துக்களை முன்வைக்கும் தமிழர்களை அவர்கள் எதிரிகளாகவே எண்ணுவர்.

ஒரு நாட்டின் பெரும்பான்மையினரல்ல, அதுவும் ஆட்சி அதிகாரத்திலுள்ள இனத்துடன் கலந்து அவர்கள் வாழும் பிரதேசங்களில் சிறுபான்மை இன மக்கள் வாழ்வது என்பது ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கை அல்ல. ஆனால், சிறுபான்மையினர் பூர்வீகமாக வாழும் பிரதேசங்களில் பெரும்பான்மையினர் திட்டமிட்டு குடியேற்றப்படுவது என்பது ஆக்கிரமிப்பின் நோக்கத்தின்பாற்பட்டதே.

சிங்களப்பகுதிகளில் எங்குமே தமிழர்களுக்கான குடியேற்றத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அங்கு தமிழர்கள் தொழில் நிமித்தம் தற்காலிகமாகவோ, அல்லது சொந்தமாக காணி, வீடுகளை கொள்வனவு செய்தோ தான் குடியிருக்கின்றார்கள். எனவே, சாதாரண நடைமுறையைக் கடைப்பிடித்து தமிழர்கள் தென்பகுதிகளில் வாழ்வதற்கும் வடபகுதிகளில் நடைபெறும் திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளுக்கும் பாரிய வேறுபாடு உள்ளது. இதனை சாதாரண சிங்கள மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவுபடுத்த வேண்டும். அப்போது தான் இனங்களுக்கிடையிலான உறவைக் கட்டியெழுப்பவும் அவர்கள் புரிந்து கொண்டு சிறுபான்மை இனத்துடன் பகைமையின்றி வாழும் நிலைக்கு வரமுடியும்.

# வட்டுக்கோட்டை மாநாடும்! மட்டக்களப்பு மாநாடும்!!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 14வது தேசிய மாநாடு மே மாதம் 27ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் இந்த தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தமை இந்த மாநாட்டின் தனித்துவமான சிறப்பம்சம் ஆகும். ஏற்கனவே மாநாடு நடைபெறுவதற்கு திட்டமிட்டிருந்த மட்டக்களப்பிலுள்ள தேவநாயகம் மண்டபம் மாநாடு இடம்பெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாக விஷமிகளால் தீ வைக்கப்பட்டது. தேசிய மாநாட்டை குழப்ப வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இத்தகைய நாசகார செயலை விரோதசக்திகள் மேற்கொண்டுள்ளன. இந்த மாநாடு இடம்பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை குழப்பும் நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டிருந்ததாக செய்திகள் வெளியாகின. இருந்த போதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன், செல்வராசா, யோகேஸ்வரன் ஆகியோர்களது சாதுரியமான செயற்பாடுகளால் அனைத்தும் முறியடிக்கப்பட்டுவிட்டது. தமிழரசுக் கட்சி உறுப்பினர்களை வசை பாடி தேசிய மாநாட்டை சிறுமைப்படுத்தி கொச்சைப்படுத்தியதான துண்டுப்பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்திருந்தனர். ஆனாலும் அந்த துண்டுப் பிரசுரங்களையெல்லாம் உதாசீனம் செய்ததுபோல பெருமளவு மக்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டது குழப்பவாதிகளுக்கு சாட்டை அடியாக அமைந்திருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

தேசிய மாநாடு நடைபெறவிருந்த தேவநாயகம் மண்டபம் தீக்கிரையாக்கப்பட்டதுடன், மாநாடு நடைபெறும் இடமாக மட்டக்களப்பு - கல்லடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை மண்டபமே தெரிவு செய்யப்பட்டு மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படுத்தப்படாமல் திட்டமிட்டபடி கோலாகலமாக மாநாடு இடம்பெற்று இனிதே நிறைவேறியிருக்கின்றமையும் எதிர்சக்திகளுக்குச் சரியான முடிவாக மூன்றாகவே அமைந்திருந்தது எனலாம். மாநாடு நடைபெற்ற தினத்தன்று தமிழரசுக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவர்கள் நிகழ்வில் விசேட உரையினை நிகழ்த்திக் கொண்டிருந்த சமயத்தில் மாநாட்டு மண்டபத்திற்குள் பிரவேசித்த ஒருவர் சம்பந்தனது உரையை குழப்ப முயன்றிருக்கின்றார். அந்த நேரத்தில் சபையிலிருந்த பொதுமக்கள் குழப்பம் விளைவித்தவருக்கு நல்ல அடிகளும் கொடுத்து மண்டபத்திற்கு வெளியே விரட்டிவிட்டனர்.

தமிழரசுக் கட்சியின் தேசியமாநாடு மெதடிஸ்த மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் தமது வாகனத்தில் மாநாட்டு மண்டபத்தினையும் அங்கு திரண்டிருந்த பொது மக்களையும் நோட்டமிட்டவாறு பல தடவைகள் அந்தப் பாதையால் சென்று வந்ததை பொதுமக்கள் அவதானித்திருக்கின்றார்கள். சில மாதங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினரும் தமது கட்சியின் தேசிய மாநாட்டை மட்டக்களப்பில் நடத்தியிருந்ததுவும் குறிப்பிடத்தக்கதாகும்.

1976 ஆம் ஆண்டில் அப்போதைய தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் கூட்டாக இணைந்து யாழ்.வட்டுக்கோட்டையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய மாநாடு ஒன்றை நடத்தியிருந்தார்கள். இந்த மாநாட்டிலேயே வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்கள் தங்களது சுயநிர்ணய உரிமையுடனும் சகல அரசியல் அதிகாரங்களுடனும் வாழ வேண்டுமாயின் அதற்கு இறுதித்தீர்வாக தமிழீழம் தான் அமைய வேண்டும் என்ற தீர்மானத்தை மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து தமிழ் தலைவர்களும் இணைந்து ஒருமித்த தீர்மானமாக அன்று முன்மொழிந்திருந்தார்கள். வட்டுக்கோட்டை மாநாட்டில் முன்மொழியப்பட்ட தனித் தமிழீழம் என்ற தீர்மானம் தமிழ் மக்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றிருந்தது. இதன் பிரதிபலிப்புக்களாகவே 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமோகமான வெற்றியை ஈட்டியது. தமிழர்களின் முப்பது ஆண்டுகால ஆயுதப் போராட்டம் பெரும்பான்மை அரசினால் அழிக்கப்பட்டாலும் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இன்றும் ஒவ்வொரு தமிழ் மக்களினுடைய மனங்களிலும் பசு மரத்தாணி போல பதிவாகியுள்ளன. அதை எந்த சக்திகளாலும் அழித்துவிட முடியாது.



அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சி மாநாடு சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழரசுக்கட்சியுடன் ஏனைய நான்கு தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக பரிணமித்திருக்கின்ற சமகாலத்தில் ஏனைய பங்காளிக் கட்சிகளை ஓரம் கட்டிவிட்டு தமிழரசுக் கட்சியை மட்டும் பலப்படுத்தும் செயற்திட்டங்களில் அதன் தலைமைத்துவம் முழுமூச்சுடன் செயற்படுவது தமிழ் மக்களினுடைய அரசியல் எதிர்பார்ப்பிற்கு அவ்வளவு ஏற்புடையதாக அமையவில்லை என்பது பல தரப்பினரதும் கருத்துக்கணிப்பு ஆகும். 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் கூட்டப்பட்ட தேசிய மாநாட்டுடன் 2012 ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியினரால் கூட்டப்பட்ட மாநாட்டை ஒப்பிடும் போது தமிழரசுக் கட்சியின் மாநாடு முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்வதற்கில்லை.

மட்டக்களப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாக தீர்க்கமுள்ள அரசியல் அதிகாரப்பகிர்வு, மீள் குடியேற்றம் புனர்வாழ்வு, அரசியல் கைதிகள் காணாமல் போனோர் தொடர்பாக ஆராய்தல் உள்ளிட்ட எட்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

ரிசிக்கேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் பின்னரான மூன்று வருடங்களில்..!



சண்டே லீடர் பத்திரிகையில் உவிந்து குருகுலசூரிய எழுதிய கட்டுரை
தமிழில் : ஜெஸ்ரின்

யுத்தம் முடிவடைந்து மூன்றாண்டுகள் முடிவுற்ற நிலையிலும் சமூகங்களுக்கும், அரச காவற்துறையினருக்கும் இடையில் மேலும் புரிந்துணர்வு உருவாகுவதிலும் பார்க்க அவர்கள் மத்தியில் அச்சம், சந்தேகம், அவநம்பிக்கை என்பனவே ஆழமாக வேரூன்றுகின்றன.

தெற்கில் வெளிவரும் செய்திப் பத்திரிகையான 'லங்காதீப'வின் ஞாயிறு வாரப் பிரசுரத்தில் தொடர்ச்சியாக சில வாரங்கள் வெளிவந்த 'இளவரசன்' எனும் தலைப்பின் கீழ் நிக்கொலோ மக்கியவெல்லியினால் எழுதப்பட்ட கட்டுரையில் கூறப்பட்டவைகளைச் சற்று உற்று நோக்குவோம்.

அதில் "ரோமானிய மன்னர்கள் தமது படைவலிமையால் வேற்றுநாடுகள் சிலவற்றை முழுமையாகவும், பகுதிகளாகவும் கைப்பற்றித் தமது ஆட்சியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து ஆட்சி புரிந்தனர். அவ்வேளைகளில் அவர்களின் ஆதிக்கத்தின் கீழிருந்த பகுதிகளில் அவர்களது நடவடிக்கைகளை மிக நெருக்கமாக அவதானிக்கப்பட்டன. அவர்கள் தம் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் குடிமக்களுடன் இணைந்து வாழ்வதற்கெனப் பல்வேறு பகுதிக் குடிமக்களையும் வந்தேறு குடிகளாக அனுப்பிக் குடியமரச் செய்தனர். அவர்களின் கீழுள்ள குறிப்பிடத்தக்க பலமாம் குறைந்த சிற்றரசர்களுடனும், அவர்களது படைப் பலத்தை அதிகரிக்க விடாது வண்ணம் நட்புறவைப் பேணி வந்தனர். அதுமட்டுமன்றி, தமது ஆதிக்கத்தின் கீழுள்ள பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு எந்த ஒரு அந்நிய நாட்டினதோ அல்லது சக்திகளோ அவ்விடங்களில் பலம்படியாக அவற்றின் செல்வாக்கினை அதிகரிப்பதற்கோ அல்லது பெருக்குவதற்கோ இடங்கொடாத வண்ணமும் பார்த்துக் கொண்டனர்" எனக் கூறப்பட்டுள்ளது.

நிக்கொலோ மக்கியவெல்லியால் எழுதப்பட்ட அக்கட்டுரையின் சிங்கள மொழிபெயர்ப்பினை ஜனாதிபதி ராஜபக்ஷ வாசித்தாரா என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆம். அவர் அதனை வாசித்திருப்பார்.

போரின் மூலமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை முழுமையாகக் கைப்பற்றி மூன்று வருடங்களாகிய பின்னரும் கூட ராஜபக்ஷ இவ்வாறும் மக்கியவெல்லியின் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளையே பின்பற்றுவதை நாங்கள் நன்கு காணக் கூடியதாக இருக்கின்றது.

யுத்தத்தின் பின்பு மீள் நல்லிணக்கம் தொடர்பில் ராஜபக்ஷவுடன் முக்கியம் வாய்ந்த வெளிப்பாடாகவே இக்கட்டுரையை நான் முன்னிலைப்படுத்தியுள்ளேன்.

அவரது கட்டுரையில் நல்லதும், கெட்டதும் கலந்த கோட்பாடுகள் தொடர்பில் மக்கியவெல்லி கூறுகையில் "நாடுகளைக் கைப்பற்றிப் பெறும் போது, ஒரு நாட்டில் மாறுபட்ட மொழிகள், சமூகப் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் அல்லது சட்டவிதிகள் என அங்கே பல சிக்கலான நெருக்கடிகள் உள்ளன. அத்துடன் அவற்றினைத் தன்னகத்தே தக்கவைத்துக் கொள்வதற்கு நல்ல அதிர்ஷ்டமும், பெரும் ஆற்றலும் தேவைப்படுகின்றன. அத்துடன் அவற்றினைப் பெற்றுக் கொண்டவர் அங்கு போய் வசிப்பது மிகவும் உறுதியாக இருக்கும். அதுமட்டுமன்றி, அவ்வாறான ஒன்றோ அல்லது இரண்டோ இடங்களில் இணைந்து வாழ்வதற்குக் குடும்பங்களை அனுப்புதல் வேண்டும். இது அரசுக்கு அவ்விடங்களைத் தக்கவைக்க உதவியாக இருக்கலாம். இல்லாதவிடத்தில் அவ்விடங்களில் பெரும் எண்ணிக்கையிலான காலாட்படை மற்றும் ஊர்திப்படை என்பவற்றை வைத்துக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

இளவரசன் வந்தேறு குடிகளுக்கு அவர்கள் அங்கு சென்று வசிப்பதற்கு அவ்வளவு ஒன்றும் அதிகமாகச் செலவு செய்யமாட்டான். சிறிய அல்லது ஓரளவான அல்லது எதுவித செலவுமின்றியே அவர்களை அங்கு அவனால் குடியமர்த்த முடியும்.

குடிமக்களில் சிறுபான்மையினரே தவிரவே அவன் மனம் நோகச் செய்வான். புதிதாகக் குடியமர்ந்தவர்களுக்கு வழங்குவதற்காக சிறுபான்மையானவர்களிடமிருந்து நிலங்களையும் மற்றும் வீடுகளையும் எடுப்பான். இதனால் மனம் புண்பட்டுப் பாதிப்படைபவர்கள் ஏழைகளாகவும் அத்துடன் சிதறுண்டு வாழ்பவர்களாகவும் எஞ்சியிருப்பர்.

அதேவேளையில் எதுவித பாதிப்புமின்றிச் சுமுகமாகக் குடியேறியவர்கள் மௌனமாக இருந்துவிடுவர். அதே சமயத்தில் மற்றவர்களிடம் வசித்து பெற்றது போல் தங்களிடத்திலும் அதுபோன்ற தவறு நடக்குமோவென்ற அச்சத்திலும் இருப்பார்கள். இவ்வாறான குடியேற்றங்கள் யாவும் நேரம், உழைப்பு என்பவையற்ற விரயமாக்காமலே கிடைக்கப் பெற்றவை. அதன் அவர்களுக்கு அதிகம் நம்பிக்கையுண்டு. எனினும், அவர்கள் எந்நேரமும் பழிவாங்கப்படலாம் என்ற அச்சவுணர்வுடனேயே இருந்தாக வேண்டும். ஆயினும், ஆயுதம் தரித்த குழுக்களை வைத்துப் பராமரிப்பதில் அதிகம் செலவழிக்க வேண்டும். நாட்டில் வரும் வருமானம் அத்தனையையும் நகர, கிராமப்பகுதிகளில் கட்டடங்களில் தங்கியிருந்த காவலில் ஈடுபட்டவருக்கும் காவற்படையினருக்குச் செலவு செய்ய வேண்டியிருக்கும். படையினர் மந்திரிலும் அவர்களை இங்கும் அங்குமாக நகர்த்துவதும் ஓர் வாழ்க்கைப் பிரச்சினையாகிவிட்டது. நாடு பூராவிலுமே மக்களுக்கும் இது ஓர் எரிச்சலையூட்டிக் கடுகடுப்பிற்குள்ளாக்கிவிட்டது" என்கிறார்.

இதனையே, தற்போது ராஜபக்ஷ செய்து கொண்டிருக்கின்றார். கிளிநொச்சியில் உள்ள இரணைமடுக் குளத்திற்குக் கிட்டவாக ஒரு ஜனாதிபதி மாளிகையைக் கட்டியெழுப்புகின்றார்கள். எது அரசர் அங்கு சென்று வசிக்க மாட்டார்.

ஆனால், நிக்கொலோ மக்கியவெல்லியின் கோட்பாடுகளின் பிரகாரம் பரிந்துரைக்கப்பட்ட இரண்டாவது தந்திரோபாயமான செயற்திட்டத்தினை மிகவும் அதிகாரத்துடன் தயார் நிலையில் வைத்துள்ளார். அது வேறொன்றுமல்ல. வடக்கு, கிழக்கில் திட்டமிட்டபடியான சிங்கள மயமாக்கலே அதுவாகும்! சிங்களக் குடியிருப்புப் பகுதிகளில் புத்தர் சிலைகளைக் கட்டியெழுப்புவது முற்றிலுமான ஓர் உதாரணமாகும். இவற்றுள் திட்டமிட்ட குடியிருப்புக்கள், நிலங்களை அபகரித்தல், இராணுவத் தலையீடுகள், மாவட்ட, பிரதேச எல்லைக்கோடுகளின் மாற்றங்கள் மற்றும் கிராமங்களுக்கு மீளப் பெயரிடுதல் என்பவை அடங்கும்.

குடிமக்களின் வாழ்க்கையின் பல அம்சங்களில் தொடர்ச்சியான இராணுவப்பிரசன்னம் என்பது சிங்கள மயமாக்கலின் செயல்முறையில் மிக முக்கியமான மூலக்கூறுகளில் ஒன்றாகும்.

சிறீலங்கா அரசாங்கம் 2012ஆம் ஆண்டிற்கான தனது வரவு - செலவுத்திட்ட மதிப்பீட்டினைக் கடந்த வருடம் ஐப்பசி மாதம் 18ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்தது. அப்பொழுதே அதன் மூலம் இராணுவச் செலவீனத்தில் கிட்டத்தட்ட 07 வீதமான அதிகரிப்பினை மக்களுக்கு வெளிப்படுத்தியிருந்தது.

இப்பொழுது உள்ளதன்படி வடக்கில் மக்களுக்கும் படையினருக்குமான விகிதாசாரம் வன்னியில் 4 : 1 விகிதமாகவும், யாழ்ப்பாணத்தில் 6 : 1 என்ற விகிதமாகவும் உள்ளது.

யுத்தம் முடிவடைந்து மூன்றாண்டுகள் முடிவுற்ற நிலையிலும் சமூகங்களுக்கும், அரச காவற்துறையினருக்கும் இடையில் மேலும் புரிந்துணர்வு உருவாகுவதிலும் பார்க்க அவர்கள் மத்தியில் அச்சம், சந்தேகம், அவநம்பிக்கை என்பனவே ஆழமாக வேரூன்றுகின்றன.

இனங்களுக்கிடையேயான உள் உறவு முறிந்த நிலை. மக்களிடையே நிலவுவதுடன் மேலும் எதிரெதிரான கருத்துகளைக் கொண்ட இரு குழுக்களாகப் பிரிவினைப்படுத்தப்படுகின்றனர். ஆனால், துரதிஷ்டவசமாக ராஜபக்ஷக்கள் மக்களிடையேயான நல்லிணக்கம் குறித்து ஒரு எண்ணமும் கூடக் கொண்டிருப்பதாகத் தென்படவேயில்லை.

சர்வதேசத்தின் அழுத்தத்தின் வெளிப்பாடுகளே கற்றுக் கொண்ட பாடங்களும் மற்றும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு நிறுவப்பட்டமை, மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை அறிக்கையினை அமுலாக்குவதாகக் கூறுதல், அத்துடன் சரத் பொன்சேகாவை விடுதலை செய்தமை என்பனவாகும்.

இப்பொழுது ஒன்று மட்டும் மிகவும் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. எந்தவொரு சர்வதேசத்தின் அழுத்தமும் இன்றி ராஜபக்ஷக்கள் கட்டுரையில் உள்ளது போலப் பல மக்கியவெல்லியின் கோட்பாடுகளைக் கடைசிவரைக்கும் கைவிட விரும்பமாட்டார்கள் என்பதே அதுவாகும்!

இருந்தும், ராஜபக்ஷ குடும்பத்தினர் நாட்டின் "இறையாண்மை" பற்றி உரத்துக் குரலெழுப்பிக் கதைத்தபோதிலும் அவர்களே அந்நிய நாடுகளின் தலையீடுகளை அனுமதிக்கின்றனர். ஏனெனில் அவர்கள் தங்களுக்குரிய பணிகளைச் செய்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பல் பரமசிவம்



ஆ... போனகிழமை தருமலிங்கம் மாஸ்டர் வீட்டுப் படலையடியில றெயின் நிண்டகதை சொன்னனான் கண்டியளோ!...

பரமேஸ்வரா றோட் றெயில்வே ரோடியால பக்கத்தில இருக்கிற ஆத்தியடி - அந்தக் கேயிலையடியில தான் சிக்னல். சிக்னலடியில எஞ்சின் நிக்க, கடைசி காட் பெட்டி தருமலிங்கம் மாஸ்டர் வீட்டடியில நிக்கும் எண்டு சொன்னனான்...

'காட்' பெட்டி எண்டு ஏன் பேர் வந்தது [illegible]மோ? அதுக்குள்ளை றெயின் 'காட்' ஐயா நிக்கிறதால தான் அதுக்குக் 'காட்' பெட்டி எண்டு பேர் வந்தது.... அவருக்கு ஏன் 'காட்' ஐயா எண்டு பேர் வந்தது தெரியுமோ? றெயினை நிக்கச் சொல்லி 'சிவப்பு லைற்' காட்டுவார். வெளிக்கிடச் சொல்லி 'பச்சை லைற்' காட்டுவார். இப்படி 'லைற்' காட்டுறபடியால் தான் அவரை காட் - காட் ஐயா எண்டு சொல்லுறவை.

சின்ன வயதில, தருமலிங்கம் மாஸ்டர் வீட்டடியில காட் பெட்டி நிண்டதெண்டால் நாங்கள் காட் ஐயா காட் ஐயா எண்டு துள்ளிக் குதிப்பம். காட் ஐயா காட் ஐயா எண்டு நாங்கள் காட்டுக் கூச்சல் போட என்னத்தைக் காட்டுறதெண்டு?.... எங்களை காட் ஐயா தொல்லை தாங்கேலாமல் ஏசிக் கலைப்பார். பிறகு சிக்னல் கிடைச்சு - காட் ஐயா 'பச்சை லைற்' காட்ட றெயின் பாம்பாம் எண்டு வெளிக்கிடும். அப்பதான் காட் ஐயாவுக்கு நிம்மதி வரும்.

றெயின் கதை சொன்ன போலத் தான் பொன்னையாண்ணை ஆம்பி கொண்டு வந்த கதை ஞாபகம் வருகுது. அதுவும் றெயினில தான். காலமை கொழும்பில இருந்து காங்கேசன்துறைக்கு ஒரு றெயின் வாறது கண்டியளோ. அது கடுகதி றெயின். சாமான் கோச்... அது நிற்பாட்டாத ஸ்ரேசனில்லை. எல்லா ஸ்ரேசனிலயும் நிண்டு - சாமான்களையும், சனத்தையும் ஏத்திக் கொண்டு வரும்.

கொழும்பில இருந்து மத்தியானம் வாற 'உத்தரதேவி' கூட காலேல வெளிக்கிட்ட அந்த சாமான் கோச்சை கொடிகாமம் சாவகச்சேரிக்கிடையில் முந்திக் கொண்டு வந்துவிடும்.

பொன்னையாண்ணை - அவரும் ஆத்தியடி வீதியில இருக்கிறவர். உத்தியோகம் குருநாகலில. அப்ப அவருக்கு மூத்த பிள்ளை பிறந்திருந்தது. மனுசிக்கு அரைச்ச கறி குடுக்கிறதுக்கு மாமியார் பக்கத்து வீட்டு அம்மியில தான் போய் அரைக்கிறவ..

ஒவ்வொரு நாளும் உது சரிவராது எண்டிட்டு -

குருநாகல் பக்கத்தில எங்கேயோ ஒரு இடத்தில, நல்ல அம்மி பொழியிறவை - சாக்கில கட்டி குருநாகலுக்குப் பக்கத்தில இருக்கிற ஒரு சின்ன றெயில்வே ஸ்ரேசனில அம்மியையும் ஏற்றி பொன்னையாண்ணையையும் ஏற்றி விட்டவை அந்த சாமான் கோச்சில தான்.

றெயில்றோட் ஆத்தியடி வீதியோடைதான் பொன்னையாண்ணை வீடு. ரெண்டு மூண்டு நாளைக்கு முன்னமே வீட்டுக்குக் கடிதம் போட்டிட்டார். றெயினிலை வரேக்கை அம்மியை வீட்டடியில இறக்கி விடுகிறதெண்டு.

இல்லாட்டி கொக்குவில் ஸ்ரேசனில இறங்கி நிக்கேலா அல்லது வண்டில் பிடிச்சு பிறகு வீதியால வந்து கலட்டிச் சந்தியால வந்து ஆத்தியடிக்கு வரவேணும். அம்பட்டம் ஏத்துறதெண்டால் ரெண்டு ரூபா கூடக் கொடுக்க வேணும் அப்ப றெயின் வரேக்கை படலையடியில அம்மியை இறக்கி விட்டால் சுகம் எண்டு றெயினில 'கொம்பாட்மெண்ட்' வாசல்ல அம்மி சாக்குப் பொதியை வைச்சுக் கொண்டு பொன்னையாண்ணை 'ரெடியா' நிண்டார். யாழ்ப்பாணத்தால றெயின் வெளிக்கிட இரவு ஏழுமணியாய் போச்சுது.

பொன்னையாண்ணை யோசிச்சார்.. முன்னமே கடிதம் போட்ட படியால் 'கேற்' வாத்தி முனுசாமியோடை கதைச்சு சிக்னல் போடாமலிருக்க ஏற்பாடு செய்திருப்பினம்...

றெயின் வந்து கனக்காய் தங்கடை வீட்டடியில நிக்கும் எண்டு நினைச்சார். ஆனால் றெயில் அவர் எதிர்பார்த்த மாதிரி வீட்டடியில நிக்கயில்லை. றெயின் ஓடிக் கொண்டிருக்க தங்கடை வீட்டுக்கு எதிரிலை அம்மி மூட்டையைத் தள்ளி விட்டார். தான் போய், கொக்குவில் ஸ்ரேசனில இறங்கி இஞ்ச வந்து பார்த்தால் அம்மி ரெண்டு துண்டா உடைஞ்சு. ரெண்டு அம்மியாய்க் கிடந்தது. மாமிக்கு சரக்கு அரைக்க வாங்கி வந்த அம்மி ரெண்டு பேபி அம்மியாய்க் கிடந்தது...

பொன்னையாண்ணைக்கு சோகம் எண்ட சோகம்.

றெயில் கேற் வாத்திறவேனோடை கோபம் எண்ட கோபம்.

ஒரு போத்தில் கள்ளு வாங்கிக் குடுத்து முனுசாமியோடை கதைச்சுக் கொண்டு நிண்டால், கொஞ்சம் 'டிலே' பண்ணி கேற்றை மூடிபிக்க அந்த 'சிக்னல்' அடியில றெயின் எப்படியும் நிக்கும்...

அதில் இறங்க வேண்டிய ஆக்கள் இறங்கி விடுவினம். அப்பிடி ஒரு செற் அப்'

இனி றெயின் ஓட என்னமாதிரியோ தெரியேல்லை...

# மரபணு செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நவீன தொழில்நுட்பம்

ஒரு விலங்கு அல்லது அதன் உயிரணுவைத் தொடாமலேயே அந்த விலங்கின் உயிரணுக்களையும், அவற்றின் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்த முடியுமா? என்றால் ஆம், கட்டுப்படுத்தலாமே என்று கோரசாக சொல்கிறார்கள் உயிரியல் விஞ்ஞானிகள்.

எப்படி என்று கேட்டால், 'ரிமோட் கண்ட்ரோல் வைத்துத்தான்' என்கிறார்கள் கூலாக. ரிமோட் கன்ட்ரோல் வைத்து டிவி, கார் போன்ற மின்சாதனங்களை இயக்க முடியும். ஆனால் உயிரணுக்களை எப்படி இயக்க முடியும்?

உண்மைதான். ரிமோட் கண்ட்ரோல் போல செயல்படும் ரேடியோ அலைகளை, எலி போன்ற விலங்குகளின் உடலிலுள்ள உயிரணுக்களின் மீது செலுத்தி, அதன் மரபணு செயல்பாடுகளை நம் தேவைக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ள முடியும் என்பதுதான் உயிர்தொழில்நுட்பவியல் உலகில் உலவி வரும் சமீபத்திய சுவையான செய்தி. இன்னும் வெளிப்படையாக, ரேடியோ அலைகளைக் கொண்டு உயிரணுக்களின் சில பகுதிகளை உஷ்ணப்படுத்தி, ஒரு குறிப்பிட்ட மரபணுவை தூண்டுவதன் மூலம் இன்சுலின் உற்பத்தியைத் தூண்ட முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள் அமெரிக்காவின் ராக்பெல்லர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள்.

ஆச்சரியமான, ஆனால் அட்டகாசமான இந்த ஆய்வைத் தலைமையேற்று நடத்தி இருப்பவர் ராக்பெல்லர் பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு மரபியலாளர் ஜெப்ரி ப்ரைட்மேன்.

இந்த ஆய்வில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பிரத்யேகமான உயிரணுக்கள் எலியின் உடலுக்குள் ஊசி மூலம் செலுத்தப்பட்டன. இந்த உயிரணுக்களில், உஷ்ணமடையும்போது திறந்துகொள்ளும் தன்மை கொண்ட துளையும், கல்சியம் கிடைத்தால் இன்சுலின் உற்பத்தி செய்யும் மரபணு ஆழியும் வடிவமைக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட இந்த உயிரணுக்களின் மீது முதலில் ரேடியோ அலைகள் செலுத்தப்பட்டன. இதனால் உண்டான வெப்பத்தால் உயிரணுக்களின் உள்ளே இருக்கும் துளைகள் திறந்து கொண்டன. பின்னர், இந்த துளை வழியாக பாயும் கல்சியம் அயன்கள் இன்சுலின் உற்பத்தி செய்யும் மரபணு ஆழியை இயங்கச் செய்கின்றன. இதனால் இன்சுலின் உற்பத்தி தொடங்குகிறது.

இப்படித்தான், மரபணு செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் ஒரு ரிமோட் கண்ட்ரோலாக ரேடியோ அலைகள் செயல்படுகின்றன என்கிறார் ஆய்வாளர் ஜெப்ரி ப்ரைட்மேன்.

ஓர் உயிரணுவை தொடாமலேயே, ஒளி மற்றும் அல்ட்ரா சவுண்ட் கதிர்களை வைத்து அதன் செயல்பாடுகளை கட்டுப்படுத்த முடியும் என்பது பழைய செய்தி.

ஆனால், உயிரணுக்களின் உள்ளே இருக்கும் மரபணுவின் செயல்பாடுகளை ரேடியோ அலைகளைக் கொண்டு கட்டுப்படுத்த முடியும் என்பது விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டு இருப்பது, உலகில் இதுவே முதல் முறை என்கிறார் ஆய்வாளர் ப்ரைட்மேன்.

அது சரி, உயிரணுக்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்த ஒளியும், அல்ட்ரா சவுண்டு கதிர்களும் இருக்கும்போது ரேடியோ அலைகள் எதற்கு?

ஏனென்றால், ஒளி மற்றும் அல்ட்ரா சவுண்டில் இல்லாத பல வசதிகள் ரேடியோ அலைகளில் உண்டு என்பதால்தான்.

உதாரணமாக இந்த ஆய்வில், ரேடியோ அலைகள் ஒரு திசுவையோ அல்லது ஒரு உயிரணுவையோ உஷ்ணப்படுத்தாமல், உயிரணுக்களின் உள்ளே இருக்கும் துளைகளை மட்டும் உஷ்ணப்படுத்துகின்றன.

ஆனால், அல்ட்ரா ஒலிக் கதிர்கள் ஒரு திசு மொத்தத்தையும் சுமார் 42 டிகிரி செல்சியஸ் வரை உஷ்ணப்படுத்துகின்றன. இதனால் உயிரணுக்கள் சேதப்படலாம். அல்லது வேறு விதமான பாதிப்புகள் ஏற்படலாம்.

அதேபோல, ஒளிக் கதிர்களால் ஒரு தசையினுள் ஒரு குறிப்பிட்ட ஆழம் வரைதான் ஊடுருவிச் செல்ல முடியும். ஆனால், ரேடியோ கதிர்களால் ஒளியை விட பல மடங்கு அதிகமாக ஊடுருவிச் செல்ல முடியும்.

எதிர்காலத்தில் மருத்துவ தொழில்நுட்பங்களில், ரேடியோ அலைகளைப் பயன்படுத்தி மரபணுக்களை தூண்டக் கூடிய ஒரு பிரகாசமான வாய்ப்பு இருப்பது இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இணையத் தளங்களை முடக்கச் சதி


உலகின் அனைத்து கணினிகளையும் கட்டுப்படுத்தும் வகையில், புதிய வைரசை ஹேக்கர்கள் பரப்பியுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கிறது. இந்த புதிய வைரஸ்களால் வரும் ஜூலை மாதம் இணையதளங்கள் முடக்கப்படுவதற்கான வாய்ப்பிருப்பதாக கூறும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வைரஸால் பாதிக்கப்பட்ட கணினிகளை சரிசெய்து தருவதாக, ஹேக்கர்கள் மூலம் சர்வதேச அளவில் வெளியிடப் பட்ட ஒரு விளம்பரத்தினால் இந்த கணினி வைரஸ் பாதிப்பு ஏற்பட்டதாக தகவல் அம்பலமாகி உள்ளது.

இந்த வைரஸ் பாதிப்பினால் இது வரை 3 லட்சத்து 50 ஆயிரம் கணினிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமாக அமெரிக்க புலனாய்வு அமைப்பு (எப்பிஐ), வைரஸ் பாதிப்பிலிருந்து கணினிகளை பாதுகாக்கும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டது.

கணினி வைரசால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறியவும், அப்படி பாதிக்கப்பட்டிருந்தால் அதை சரி செய்யும் வழிவகைகளையும், அமெரிக்க புலனாய்வு அமைப்பு ஏற்படுத்திய இணையதளத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.



ஆனால், சிக்கன நடவடிக்கை காரணமாக இந்தப் பாதுகாப்பு இணையத்தை மூடுவதற்கு எப்பிஐ முடிவு செய்துள்ளது.

இதனால் புதிய வைரசால் இணையதளங்கள் முடக்கப்படும் அபாயம் இருப்பதாக கூறும் எச்சரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி முனையில்



ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள தனியார் வங்கியின் கிளை அலுவலகம் அது. அதில் அண்மையில் தான் நான் கணக்கு கிளிதராகப் பணிபுரிய புதிதாகச் சேர்ந்திருந்தேன்.

கிளை அலுவலகத்தில் டணிபுரிவதில் ஒரு வசதி இருக்கிறது. பகல் உணவு வேளைக்காக வங்கியை மூடிவிடலாம். இது எங்களுக்கு ஓய்வெடுக்கத் தகுந்த நேரம் என்பது மாத்திரமல்ல, காலையில் நடந்த வங்கிக் கொடுக்கல், வாங்கல்களைக் கணக்கிட்டுச் சரிசெய்து கொள்ளவும் முடியும்.

அன்று செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி, காலையில் எங்களுக்கு அதிகமான வேலையாகவிருந்தது. பெரிய காசாளர் திருமதி. ஜன்ட்ருவுக்கு உதவி செய்ய ஷீலா அழைக்கப்பட்டாள்.

> எப்படியோ என் கை அசைவதைத் துப்பாக்கியை நீட்டிக் கொண்டிருந்தவன் கண்டு விட்டான். அவன் என்ன நினைத்தானோ, தெரியவில்லை. "அசையாதே சுட்டுப் பொசுக்கிவிடுவேன்" என்று எச்சரித்தான்.

வங்கியின் சுவர்க்கடிகாரம் பகல் 12.20 என்பதைக் காட்டிற்று. பகல் உணவு வேளைக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. உணவு உண்ண இடைவேளை வரலாம், போகலாம். ஆனால் அன்றைய தினம் நடந்த சம்பவத்தை மாத்திரம் என் வாழ்நாளில் மறக்கவே மாட்டேன்.

ஷீலா, பணம் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்கும் பலகையை எடுத்து முன்னால் வங்கிக்கு வருபவர்களின் பார்வையில் படும்படியாக வைத்தாள். பண நோட்டுகளை எண்ணத் தொடங்கினாள்.

நான் என் நாற்காலியில் இருந்து எழுந்து நின்றேன். எனது கையில் கனமான கணக்குப் புத்தகம் இருந்தது. அதே சமயம் வாயில் கதவு திறந்து கொண்டது. இருவர் வேகமாக உள்ளே வந்தனர்.

வழக்கம் போல வங்கியின் சில வாடிக்கைக்காரர்கள் நேரம் கழித்தும் வருவதுண்டு. அன்றும், அவர்களைப் போன்றவர்கள்தான் இவர்கள் என்று நாங்கள் எண்ணினோம்.

உள்ளே வந்த இருவரையும் பார்த்தேன். ஒருவன் பிளாஸ்டிக்கால் தயாரிக்கப்பட்ட கொரில்லா போன்ற முகமூடியை அணிந்திருந்தான். மற்றொருவன் கண்களைத் தவிர முகத்தின் ஏனைய பாகத்தைக் கறுப்புத் துணியால் மூடியிருந்தான்.

முதலில் அவர்கள் எங்களைப் பயமுறுத்தத்தான் இப்படிச் செய்கிறார்களோ என்று எண்ணினேன். உண்மையில் அப்படி இல்லை.

கொரில்லா முகமூடி அணிந்தவன், காஷியரின் இடத்திற்கு முன்னால் போய் நின்றான். ஜன்ட்ரு அவனைப் பார்த்ததுமே திகைத்துப் போய் பேச்சு மூச்சின்றி விக்கித்த நிலையில் நின்றிருந்தாள். வந்தவன் ஒரு பச்சைப் பையை அவள் முன் நீட்டி அதட்டும் குரலில் "பணத்தையெல்லாம் இதில் போடு. ம்! சீக்கிரம்" என்று கூறினான்.

நான் முகமூடி அணிந்திருந்த மற்றொருவனைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் கையில் துப்பாக்கியிருந்தது. அவன் திடீரென என் பக்கம் திரும்பித் துப்பாக்கியை நீட்டியபடி "கைகளை மேலே தூக்கு" என்று கட்டளையிட்டான்.



உண்மைச் சம்பவம்

கையிலிருந்த கணக்குப் புத்தகத்துடனேயே கைகளைத் தூக்கினேன். கனத்த புத்தகத்தைத் தூக்க முடியாமல் தவித்தேன். கீழே போட்டிருக்க வேண்டும், ஏனோ தெரியவில்லை, சமயோசிதத்தினாலோ அச்சமயத்தில் அப்படிச் செய்யத் தோன்றவில்லை.

அவன், கனத்த புத்தகத்துடன் கைகளை மேலே தூக்கியவாறு நின்றிருந்த என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'கனத்த புத்தகத்தை மேலே தூக்கி வைத்திருக்கிறானே, அதை என்ன செய்யப் போகிறான்' என்று அவன் தனக்குள் கற்பனை செய்தானோ! அல்லது என்முகத்தில் பிரதிபலித்த பயத்தினை மனதிற்குள் ஏளனமாக நினைத்தானோ! தெரியவில்லை.

நடந்த சம்பவங்களைப் பின்னால் சிந்தித்துப் பார்த்தபோது, வங்கிக் கொள்ளை நடந்துகொண்டிருக்கும்போது நான் கனத்த கணக்குப் புத்தகத்துடன் கைகளை மேலே தூக்கியவாறு நின்றதுதான் விசித்திரமானது.

உண்மையான கொள்ளையாக நான் அந்நேரத்தில் கருதாதபோது இந்தக் காட்சிகள் ரெலிவிஷனில் பார்க்கும் ஒரு சம்பவமாகவே எனக்குத் தோன்றிற்று.

முகமூடி அணிந்தவன் ஜன்ட்ருவை பையில் பணத்தைப் போட்டு நிரப்பும் ஓர் இயந்திரமாகக் கருதினானே தவிர அவளை ஒரு மனித இனமாகக் கருதவில்லை. அவன் தனது தாழ்ந்திருந்த கையை கவுண்டருக்கு மேலே தூக்கினான். அப்போதுதான், அவனது கையில் இயந்திரத் துப்பாக்கி இருப்பது எனக்குத் தென்பட்டது. என் உடல் நடுங்கிற்று. அவன் பொறுமையிழந்த நிலையில் கவுண்டர் பலகையில் ஓங்கித் தட்டினான். "சீக்கிரம்! சீக்கிரம்! எடுத்துப்போடு. இல்லாவிட்டால்....." என்று உரத்த குரலில் கத்தினான்.

அப்போதுதான் இது ரெலிவிஷன் காட்சியில்லை. உண்மையாகவே கொள்ளை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தேன். மறுகணம் என்னையறியாமலே என் உடல் முழுவதும் நடுங்கிற்று. உயிர் போய்விட்டது போலத் தோன்றிற்று.

என்னுள் ஆத்திரம் பொங்கி வழிந்தது. என்னை நோக்கித் துப்பாக்கியைக் குறிவைத்து நீட்டிக் கொண்டிருந்தவனை வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பிரமை பிடித்தவன் போல அசையாமல் நின்று கொண்டிருந்தேன்.

கணக்குப்புத்தகத்தைத் தலைக்கு மேலே தூக்கியபடி நின்று கொண்டிருந்ததால் கைகளிரண்டிலும் வலி எடுத்தது. கனத்த புத்தகத்தைக் கையிலிருந்து தோளின் மேல் அல்லது தலையின் மீது வைக்க எண்ணினேன்.

எப்படியோ என் கை அசைவதைத் துப்பாக்கியை நீட்டிக் கொண்டிருந்தவன் கண்டுவிட்டான். அவன் என்ன நினைத்தானோ, தெரியவில்லை. "அசையாதே சுட்டுப்பொசுக்கிவிடுவேன்" என்று எச்சரித்தான்.

அவன் கையிலிருந்த இயந்திரத் துப்பாக்கியின் முன்துவாரத்தைப் பார்த்தேன். நிச்சயமாக அதனூடாக வெளிவரும் துப்பாக்கிச் சன்னம் என்னை இடத்தில் தாக்கும்? என் கணக்குப்படி நெற்றியில் சன்னம் பாயலாம். அச்சத்தால் என் நா வரண்டுவிட்டது.

வாயில் கதவு இன்னமும் திறந்தே இருந்தது. 12.25 மணிதான். இப்போதும் யாராவது வங்கிக்கு வரலாம். தப்பித்தவறி யாராவது வந்தால் என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பும் என் மனதில் இழையோடியது. பகல் உணவு வேளைக்கு இன்னமும் ஐந்தே ஐந்து நிமிடங்களே இருந்தன.

தெய்வத்தின் கருணையோ என்னவோ! கொரில்லா முகமூடி அணிந்தவன் அங்கிருந்த பதினெட்டாயிரம் பவுண்ட் நோட்டுகளை வாரிப் பைக்குள் போட்டுக் கொண்டான். மறுகணம் எங்களைப் பின்புறமாகத் திரும்பி நிற்கும்படி கட்டளையிட்டான்.

நாங்கள் ஒன்று சேர்ந்ததும் நான் கணக்குப் புத்தகத்தை மேசையின்மீது வைத்தேன். ஷீலாவின் தோளில் கையைப் போட்டு அவளை அணைத்துக் கொண்டேன். வாயிலில் கார் புறப்படும் சத்தம் கேட்டது. கொள்ளைக்காரர்கள் போய்விட்டார்கள்.

எங்களில் தலைமைக் கிளார்க்தான் முதலில் செயல்படத் தொடங்கினார். அருகிலிருந்த அபாய அறிவிப்பு மணியின் பொத்தானை அமுத்தினார்.

எங்களுக்கோ இன்னும் கொள்ளைக்காரர்கள் அங்கே இருப்பது போன்ற பிரமை. நான் பயத்துடன் திரும்பாமல் நின்றிருந்தேன். தலைமைக் கிளார்க் மீண்டும் அபாய அறிவிப்பு மணியின் பொத்தானை அமுத்தினார்.

ஷீலாவும் மற்றொரு பணிப்பெண்ணான யூலியும் அழத் தொடங்கினர். எனக்குத் தெரிந்தவரையில் இப்போதுதான் முதல் முறையாக எங்கள் மனேஜர் டொனால்டும், உதவி மனேஜர் ஜிம்மும் விக்கித்துப் போய் ஏதும் செய்ய முடியாத நிலையில் அசைவற்றிருந்ததைப் பார்த்தேன்.

அபாய மணியின் நிமித்தம் எச்சரிக்கையடைந்த பொலிசார் உடனடியாகத் தாமதமின்றி எடுத்த நடவடிக்கையின் பலனாகக் கொள்ளைக்காரர்கள் இருவரும் சில நிமிடங்களிலேயே கைது செய்யப்பட்டனர். கொள்ளையடித்த பணமும் கைப்பற்றப்பட்டது. அவர்களுக்குப் பணத்தைக் கைமாற்றவோ, ஒளித்து வைக்கவோ அவகாசத்தை பொலிசார் வழங்கவில்லை.

குற்றத்தை ஒப்புக்கொண்டனர் கொள்ளையர். அவர்கள் செய்த குற்றத்திற்குப் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைத்தது.

நீங்கள் மீண்டும் வங்கிக் கொள்ளை பற்றிய செய்தியைக் கேட்க நேரிடின் வங்கி ஊழியர்கள் மனம் எப்படியிருக்கும் என்பதைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள். அது ஒரு பயங்கரமான அனுபவம்!

**தமிழில் - ஜெகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்து விட்ட கண்ணாடி போல பளிச்சென்று இருந்த வானத்தில் பூரணசந்திரன் உலாவந்து கொண்டிருந்தான். அவன் அழகை இரசிப்பது போல நட்சத்திரக் கூட்டங்கள் கண்களைச் சிமிட்டி சிரித்தபடி சூழ்ந்து நின்றன. இந்த அழகுக் காட்சியை இரசித்தபடி மோகன் அந்தக் கூட்டுறவுக் கடை வாசலில் வானத்தைப் பார்த்த படியே மெய்மறந்து நின்றான். இந்தச் சந்தோசம் அதிக நேரம் நீடிக்கவில்லை. வடக்கே இருந்து வந்த குளிர்காற்று சிறிது நேரம் வீசியது. உடனே எங்கிருந்தோ கரிய முகில்கள் வானத்தை மூடிக்கொண்டன. அழகிய நிலாவும், அல்லிப் பூக்கள் போன்று கண்களைச் சிமிட்டிக் கொண்டிருந்த நட்சத்திரக் கூட்டங்களும் மறைந்து போயின. "வாழ்க்கை இப்படிப்பட்டது தான்" என்று தன்னுள் எண்ணிய

# பேராண்மை

படியே மோகன் கடையினுள்ளே சென்றான். அவனுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த முன் அறையில் சென்று அங்கு இரவுக் காவலாளிக்கென்று போடப்பட்டிருந்த வாங்கில் அமர்ந்து கொண்டான்.

இருண்டிருந்த மேகத்தில் 'பளிச் பளிச்' என்று கண்களைக் குருடாக்கும் ஒளியுடன் மின்னல் மின்னியது. குளிர் காற்று வேகமாக வீசியது. சற்று நேரத்தில் மழை சோவென பெய்யத் தொடங்கியது. மின்னல் ஒரு புறம் குளிர் காற்று மறுபுறம் மோகன் குளிர் தாங்க முடியாது அறையின் ஜன்னல்களை அடித்துச் சாத்தி விட்டு விளக்கைக் கொளுத்தி கம்பியில் தூக்கிய பின், தன் போர்வையை விரித்து வாங்கில் படுத்துக்கொண்டான். மோகன் படுத்திருந்தபடியே தன் வாழ்க்கை என்ற புத்தகத்தை முன்னோக்கிப் புரட்டினான்.

மோகன் ஏதோ! கணக்கப் படித்துக் கிழித்தவன் அல்ல. க.பொ.த சாதாரணதரம் மட்டும் சாட்டுக்குப் போய்வந்தான். கணிதபாடம் அவன் மண்டைக்குள் ஏற மாட்டேன் என்று அடம்பிடித்தது. "கணக்கு செய்ய மாட்டாத நீ எங்கே சோதனை பாஸ் செய்யப்போகிறாய். கடைசியில் மாடு தான் மேய்ப்பாய்." என்று அவனைக் கணித ஆசிரியர் சபித்தார். அது போல மோகனும் க.பொ.த சோதனை பாஸ் செய்யமுடியாது போகவே, லோகிதன் அண்ணனைக் கெஞ்சி மன்றாடி அவர் கடையில் விற்பனை உதவியாளனாகச் சேர்ந்து கொண்டான். லோகிதன் கொடுத்த மூவாயிரம் ரூபா இந்த நாளையில் எந்த மூலைக்கு? பக்கத்து வீதியில் இருந்த சங்கக் கடையில் இரவுக் காவலாளி ஒருவர் தேவையென்ற விளம்பரத்தை வாசித்து விட்டு 'போட்' அங்கத்தவர் மணியண்ணையைக் கெஞ்சி மன்றாடி அந்த வேலையையும் எடுத்துக் கொண்டான். இப்போது மோகனுக்கு இரண்டு வேலை. லோகிதன் கடையில் பகலில் விற்பனை உதவியாளன் இரவில் சங்கக்கடையில் காவலாளி.

இரண்டு வேலை இப்போது மோகனுக்கு மாத வருமானம், பரவாயில்லை. தாய் மாமன் சும்மா விடுவாரா? மோகன் வீடு தேடி வந்து விட்டார். கல்யாணம் பேசி "இன்னும் எத்தனை நாளைக்கு நான் பிள்ளையை வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பது. எப்ப கல்யாணத்தை வைப்பம்" என்று தன் சகோதரியை உரிமையுடன் கேட்டார். "ஏன் வளர்ந்த பிள்ளைதனை வீடுக வைத்திருப்பான். இந்த ஆண்டே செய்து விடுவம்" என்று சம்மதம் தெரிவித்து விட்டாள் மோகனின் அம்மா. திருமணம் முடிந்தது.

முதல் இரவு மனைவியை அன்புடன் மோகன் அணுகிய போது அவள் கேட்டாள். "அத்தான் இது வரையில் நீங்கள் எந்தப் பெண்ணையும் காதலிக்க வில்லையா?"

"ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"இல்லை எனது கணவர் என்னுடையவராக இருக்க வேண்டும். வேறு எவரையும் மனதால் கூட விரும்பியவராக இருக்கக் கூடாது என்பது எனது ஆசை" என்றாள்.

நியாயமான ஆசைதான். எந்தச் சராசரிப் பெண்ணின் மனசிலும் ஏற்படும் ஆசைதான். "அழகியாகிய நீ முறைப் பெண்ணாக இருக்கும் போது வேறு பெண்களை ஏன் பார்த்து ஆசைப்படுகிறேன். உன்னை அடைய வேண்டும் என்றே நான் காத்திருந்தேன்" என்றான் மோகன். "உண்மையாகவா?"

"சத்தியமாக சொல் கிறேன் இதுவரை வேறு எந்தப் பெண்ணையும் நான் மன தால் கூட நினைத்ததில்லை. இனி மேலும் உன்னைத் தவிர வேறு எந்தப் பெண் மீதும் ஆசை வைத்துக் கொள்ள மாட்டேன்." மோகனின் மனைவி இதைக் கேட்டுப் பூரித்துப்போனாள். அன்று தொட்டு அவர்கள் இல்லறம் இனிதாக நடைபெற்று வந்தது. ஆனால் மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் நிலையானது அல்லவே. எங்கிருந்தோ ஓடி வந்த ஒரு விசர்நாய் ராதாவைக் கடித்து விட்டோடியது. அதைப் பொருட்படுத்தாது விட்டதால் வந்தது வினை. நாய் கடித்து ஒரு கிழமையால் ஏற்புவலி ஏற்பட்ட மோகனின் மனைவி தன் கணவனைத் தவிக்கவிட்டுச் சரிந்தாள். வாழும் வயதில் தன் அழகு மனைவியை இழந்து நடைப்பிணமாக வாழத் தொடங்கினான் மோகன்.



சிறுகதை

கதவில் யாரோ தட்டும் ஓசை கேட்டது. மோகனின் சிந்தனை ஓட்டம் கலைந்தது. தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். சரியாக இரவு பத்துமணி. இந்த நேரத்தில் யாராக இருக்கக் கூடும்? என்று எண்ணியபடியே சென்று அறைக் கதவைத் திறந்தான். அழகிய இளம்பெண் ஒருத்தி மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தாள். தலையில் இருந்து நீர் வடிந்து கொண்டே இருந்தது. ஆடையெல்லாம் நனைந்து அவள் உடல் அழகைப் படம் பிடித்துக் காட்டியது.

"யார் நீ இந்தக் கொட்டும் மழையில் எங்கு வந்தாய்?" என்று மோகன் கடுமையான தொனியில் கேட்டான். "நான் பக்கத்து ஊர். வீட்டில் கோவித்துக் கொண்டு வந்து விட்டேன். மழையோ கொட்டுகிறது. எங்கே போவது என்று தெரியவில்லை" என்று கூறிக் கொண்டே மோகனின் அனுமதிக்குக் கூட காத்திராமல் வீட்டிற்குள் அவள் நுழைந்து விட்டாள். பாவம் மோகனின்பாடு தர்மசங்கடமாகப் போய்விட்டது. நேரமோ இரவு. மழை இரைச்சலுடன் பெய்கிறது. அவளை வெளியே பிடித்துத் தள்ளிவிடவும் முடியாது. அவள் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தாள். பாவமாக இருந்தது. தன் சால்வையை அவளிடம் நீட்டினான். அவள் அதைப் பெற்றுத் தன் சரத்தை துடைத்துக் கொண்டாள். பின் தனக்கென்று வீட்டிலிருந்து கொண்டு வந்த தேநீரை ஒரு சில்வர் பேணியில் ஊற்றிக் கொடுத்தான். அதனைக் குடித்தபின் அவள் நடுக்கம் நின்றது. ஆனால் மோகனின் மனநடுக்கம் தொடங்கியது!!

அவளின் உடல் அழகை நனைந்த ஆடை வெளிக் காட்டியது. மனைவி மறைந்து இரண்டு ஆண்டு காலம் அவன் அடக்கி வைத்திருந்த உணர்ச்சி அவனைச் சுட்டெரித்தது. அவன் அவளை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்றான். அவளோ நாணத்தை மறந்து தன் உடல் ஈரத்தை துடைத்துக் கொண்டிருந்தாள். இடையிடையே அவனைப் பார்த்து புன்சிரிப்பை வீசினாள். இது அவன் ஆசைக்கு நெய் ஊற்றியது போலிருந்தது. இரவு நேரம் யாருமே அற்ற தனிமை!! கன்னிப் பெண் அருகிலே!! யாரும் கண்டு கொள்வார்களோ? என்ற பயமற்ற சூழ்நிலை எல்லாமாகச் சேர்ந்து மோகனின் உடல் கொதித்தது. அவள் புன்னகைத்தபடியே நின்றாள். "அத்தான்" என்ற குரல் அவனுள் இருந்து ஒலித்தது. அது அவனது அன்பு மனைவி ராதாவின் குரல்தான். அந்தக் குரல் அவன் இதயத்தின் அடியில் இருந்து கேட்டது. "அத்தான் எனக்கு அளித்த வாக்குறுதியை மறந்து விட்டீர்களா? உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் தீண்டமாட்டேன். என்று சத்தியம் தந்தீர்களே மறந்து விட்டீர்களா? அந்தச் சத்தியவாக்கு என்னாச்சு?" என்று ராதாவின் குரல் அவன் உள்ளே இருந்து ஒலித்தது. மோகனின் மண்டையில் யாரோ சம்மட்டியால் ஓங்கி அடிப்பது போலிருந்தது. மோகன் முன்வைத்த காலைப் பின்வைத்தான். அவனுள் உருவாகிய மிருக உணர்ச்சி மறைய அவன் அறையை விட்டு வெளியே வந்து நின்றான். அதி காலை அவள் விடைபெற்றுச் சென்றாள். மோகன் 'பிறமனை நோக்கா' வீரனாக பேராண்மையுடன் தன் வீடு நோக்கிச் சென்றான்.

—நீர்வை இரதி—



# ஆசை

முனிவர் ஒருவரின் தவத்தை மெச்சி கடவுள் அவருக்குக் காட்சி கொடுத்து தனது கேள்வியைக் [illegible].

"உனது தவத்தை மெச்சினேன். என்ன வரம் வேண்டும்?"

"பிரபோ!! தங்கள் தரிசனமே எனது தவத்தின் நோக்கம் வேறொன்றும் வேண்டாம்!"

"நீ மாறவேயில்லை" என்று சிரித்துவிட்டு, கடவுள். "பக்தா நான் உனக்கு ஒரு விருப்பத்தை வரமாகத் தருகிறேன். கற்பக விருட்சம் மாதிரி. இதனிடம் [illegible] வேண்டாம். அதனடியில் நின்று கொண்டு என்ன நினைத்தாலும் அது உடனே நடக்கும்" என்று அருளிக் கையை அசைத்தார். அந்த மந்திர மரம் அங்கே தோன்றியது. கடவுள் ஆசீர்வாதம் அளித்துக் கையசைத்துக் கொண்டே மறைந்தார்.

மரத்தை வணங்கிக் கொண்டு "என்ன [illegible]. இது நமக்கு ஆசையை வளர்த்து நம்மைப் பாவம் செய்ய வைக்கும்" என்று சிந்தித்து முனிவர் அங்கிருந்து ஓடி விட்டார்.

மறைந்தும் போது கடவுள் வார்த்தைகளில் ஒரு பிசகு செய்து விட்டார். அதனடியில் நின்று கொண்டு என்ன நினைத்தாலும் அது [illegible] நமக்கும் என்று சொன்னாரே தவிர முனிவர் நினைத்தால் என்று சொல்லவில்லை. அந்த மரமும் அந்தக் காட்டில் யாராவது தனக்கடியில் வந்து நின்று நினைப்பார்களா? என்று காத்திருந்தது.

ஒரு நாள் அந்த வழியே ஆடு மேய்த்துக் கொண்டு ஒரு இளைஞன் வந்தான். அந்த மரத்து நிழலில் கொஞ்சம் படுத்து ஓய்வு எடுக்கலாம் என நினைத்தான்.

படுத்துக் கொண்டே யோசித்தான். "இது என்ன பிழைப்பு. தினம் தினம் இத்தனை தூரம் இத்தனை ஆடுகளை மேய்த்துக் கொண்டு பத்திரமாகக் கொண்டு போய், ச்சே!! ஒரு நல்ல சாப்பாடு கூடச் சாப்பிட்டதில்லை. இந்த ராஜா ராணியெல்லாம் அரண்மனையில் சாப்பிடற விருந்து மாதிரி சாப்பாடு ஒருதடவை கிடைத்தால் எவ்வளவு நல்லம்."

மந்திர மரம் தன்னுடைய முதல் அனுக்கிரகத்தைத் தாமதம் இல்லாமல் செய்தது. அவன் கண் முன்னே ஒரு ராஜோபசார விருந்து. அவன் பயந்தே போய் விட்டான். இது ஏதோ பிசாசு வேலை என்று அந்த மரத்தை சுற்றிச் சுற்றி வந்து [illegible] தெளிந்து அந்த விருந்தை ஒரு பிடி பிடித்தான்.

மீண்டும் யோசித்தான். "இப்படி வயிறு முட்டச் சாப்பிட்டு விட்டு ராஜா ராணியெல்லாம் விலை உயர்ந்த கட்டிலில் பஞ்சு மெத்தையில் காற்று வீசித் தூங்குவார்கள். எனக்கும் அப்படிக் கிடைச்சால் [illegible]."

மரம் இந்தத் தடவையும் வேகமாய், வரத்தைக் கொடுத்தது.

மீண்டும் யோசித்தான், "நாம் நடுக்காட்டில் இப்படிப் படுத்திருக்கிறோமே. புலி வந்து அடிச்சா..." மரம் வழக்கத்தைப் போல வேகமாய் அதையும் செய்தது. ஆசை ஒன்றைத் தொடர்ந்து ஒன்று தீயாய் எரிந்து நம்மை அழித்துவிடும் என்று சொல்லிராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்ன கதை இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

24

நா.யோகேந்திரநாதன்

அன்று அதிகாலை சொர்ணம் பற்களைத் தீட்டிக் கொண்டு கிணற்றடியை நோக்கிப் போன போது இளையவன் வந்து கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் மகிழ்ச்சி பொங்க "என்ன பிள்ளை சோதினையிலை வலு திறமாய் பாஸ் பண்ணியிருக்கிறியளாம்" என அவன் கேட்டான்.

அவள் அவனை ஒரு முறை எவ்வித உணர்ச்சியுமில்லாமல் பார்த்து விட்டு "ம்" என்றாள். வழமையாக இளையவனைக் கண்டதும் அவளின் முகத்தில் பரவும் மகிழ்ச்சி கூட அன்று எங்கோ ஓடிப் போய்விட்டிருந்தது.

அவன் ஆச்சரியத்துடன் "என்ன பிள்ளை ஒரு மாதிரி இருக்கிறியள்?" எனக் கேட்டான்.

தன் நெஞ்சுக்குள் குமுறிக் கொண்டிருக்கும் கவலைகளை அவனிடம் கொட்டி "ஓ"வென்று கதறியழ வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. ஏனோ அவளால் அப்படிச் செய்ய முடியவில்லை. அவனின் முகத்தைத் தொடர்ந்து பார்க்க முடியாமல் தனது பார்வையை வேறு பக்கம் திருப்பியவாறு "அப்படி ஒன்றும் இல்லை...?" என்று விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

முதல் நாள் மாலை சித்தெவிட்டாட்டி தொடர்ந்து சொர்ணம் படித்துப் மருந்து குடிக்கட்டும் எனவதாகச் சீறியதும், விதானையார் எதுவுமே பேசாமல் அவ்விடத்தை விட்டு எழுந்து சென்றதும் எல்லோரும் சேர்ந்து அவளின் "டொக்டர்" கனவை சிதைத்து விட்டதாகவே அவளை உணர வைத்தது. அவள் ஓடிப் போய் கட்டிலில் விழுந்து அழ ஆரம்பித்தாள். கனகத்தால் அவளைச் சமாதானப்படுத்தவோ, சாப்பிட வைக்கவோ முடியவில்லை.

விதானையார் சின்னனிடம் கள்ளுக்குடித்து விட்டுச் சாப்பிடத் தயாரான போது, கனகம் சொர்ணம் சாப்பிடாமல் அழுது கொண்டு படுத்திருக்கும் விஷயத்தைத் தயக்கத்துடன் அவரிடம் தெரிவித்தாள்.

அவர் கனகத்தை நிமிர்ந்து பார்த்து விட்டு "அவளைக் கூப்பிடு" என்றார்.

கனகம் போய் மெல்ல சொர்ணத்தின் முதுகை வருடியவாறே,

"பிள்ளை... ஐயா... வரட்டாம்... வா...!" என்றாள்.

விதானையாரின் அழைப்பை நிராகரிக்குமளவுக்கு சொர்ணத்துக்கும் துணிவில்லை.

சொர்ணம் கண்களைத் துடைத்தவாறு எழுந்து சமையலறைக்குள் வந்தாள்.

"கனகம் இரண்டு பேருக்கும் சாப்பாட்டைப் போடு" என்றார் விதானையார்.

சொர்ணம் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

"இப்ப ஏன் அழுறாய்..?" விதானையார் என்றுமில்லாதவாறு பரிவுடன் கேட்டார்.

சொர்ணம் தயங்கியவாறே அழுகையுடன் "நான் படிக்க வேணும்...!" என்றாள். விதானையார் இப்போ விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டார். சொர்ணம் படித்து ஒரு மருத்துவராக வருவதை அவரும் உள்ளூர விரும்பினார். ஆனால் சித்தெவிட்டாட்டியின் பிடிவாதத்தைப் பற்றி அவர் சிறுவயதிலிருந்தே அறிந்து வைத்திருக்கிறார். அவளின் சொல்லை மீறினால் அவள் பொலிடோல் குடிக்கத் தயங்க மாட்டாள் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

தன்னிடம் என்றுமே எதையுமே வேண்டிக் கேட்காத தனது மகள் முதல் முதலாக "நான் படிக்கப் போறன்" எனக் கேட்டதை அவரால் மறுக்கவும் முடியவில்லை. அவர் எந்த நெருக்கடி வரும் போதும் அதை ஒத்தி வைத்து அதன் வீரியத்தைக் குறைக்க முடியும் என்பதை அனுபவத்தில் அறிந்து வைத்திருந்தார்.

"அதைப்பற்றிப் பிறகு யோசிப்பம்.. இப்ப சாப்பிடு" என்று விட்டு கனகத்தைச் சாப்பாட்டைப் போடும்படி கூறினார்.

சொர்ணம் சாட்டுக்கு நாலு வாய் விழுங்கப்பட்டுச் சாப்பிட்டு விட்டு கோப்பையைக் கழுவியதை அவர் அவதானிக்கத் தவறவில்லை. அந்தப் பிரச்சினையை இப்போது அப்படியே விட்டுவிட்டு சில நாட்கள் செல்ல ஏதாவது ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும் என முடிவு செய்து கொண்டார் விதானையார்.

முதல் நாள் மாலையும் இரவும் விதானையார் தனக்குச் சாதகமாக எந்த ஒரு பதிலையும் சொல்லாதது சொர்ணத்தின் நம்பிக்கையை ஆட்டம் காண வைத்து விட்டது.

அன்று பாடசாலை செல்லவே மனம் வரவில்லை. எனினும் அதிபர் தகப்பனையும் கூட்டிக் கொண்டு வரும்படி கூறியதை அவளால் தட்டிக் கழிக்க முடியவில்லை. விதானையாரிடம் அதிபர் கதைக்கும் போது சில சில சமயங்களில் மனமாற்றம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும் என்ற ஒரு நம்பிக்கையும் அவளிடம் இருக்கத்தான் செய்தது.

சிந்தனையில் மூழ்கி தான் நெடுநேரம் பல்லுத் தீட்டிக் கொண்டிருந்ததை உணர்ந்தவளாக அவசரமாகக் குளிக்க ஆரம்பித்தாள்.

விதானையாரும் சொர்ணமும் காரில் போய் இறங்கிய போது பாடசாலைப் பியோன் செல்லத்துரை கேற்றடியில் நின்று வரவேற்று அவர்களை அதிபரின் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஏற்கனவே தங்கவேலும் அவனின் தகப்பன் சுந்தரமூர்த்தியும் வந்து அமர்ந்திருந்தனர். அவர் ஒரு வன இலாகா அதிகாரி. அவரின் நிமிர்ந்த உயர்ந்த தோற்றமும் பெரிய மீசையும் சொர்ணத்துக்கு அவர் மீது ஒரு பயம் கலந்த மரியாதையை ஏற்படுத்தியது.

அவர் எழுந்து விதானையாரை நோக்கிக் கையை நீட்டியவாறு,

"குட் மோனிங், பொறெஸ்ட் ஒவ்விசர் சுந்தரமூர்த்தி, தங்கவேலின் தகப்பன்" என்றார். விதானையாரும் அவரின் கையைப் பிடித்துக் குலுக்கியவாறு "வில்லேஜ் ஹெட்மன் தம்பிப்பிள்ளை, சொர்ணத்தின்ரை தகப்பன்" எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அவர்கள் கை குலுக்கிய அதே சந்தர்ப்பத்தில் உட்புகுந்த அதிபர் ஜோன் மாஸ்ரர் "நான் அறிமுகப்படுத்த வேண்டிய தேவையே இல்லாமல் போச்சுது. நல்லது இருங்கோ.. கதைப்பம்" என்று விட்டு அவர் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.



அதிபர் மெல்ல பேச ஆரம்பித்தார். "உங்கடை பிள்ளையள் எங்கடை பள்ளிக்கூட வரலாற்றிலேயே பெரும் சாதனை செய்திருக்கினம். அந்த இன்னடைக்கு அசெம்பிளியிலை பாராட்டிக் கௌரவிக்கப் போறம். அதிலை பங்கு கொள்ளத்தான் உங்களைக் கூப்பிட்டனான்"

"இதிலை சேர் உண்மையாய் பாராட்டப்பட வேண்டியவை இவையை படிப்பிச்ச ரீச்சர்மாரும் அவையை வழிநடத்தின நீங்களும் தான் சேர்" என்றார் சுந்தரமூர்த்தி.

பெரிதாகச் சிரித்த அவர் "நோ... நோ... ரீச்சர்மாருக்குப் பங்கு இருக்குது எண்டது உண்மைதான். ஆனால் பெற்றார் பிள்ளையளுக்கு ஏற்படுத்திக் குடுக்கிற சூழ்நிலையும், உண்டாக்கிற ஆர்வமும் முக்கியமானவை" என்றார்.

விதானையார் ஒரு முறை தனக்குள் சிரித்துக் கொண்டார். அவர் ஒரு நாள் கூட சொர்ணத்தின் படிப்பைப்பற்றி அக்கறைப்பட்டதாக அவருக்கு ஞாபகமில்லை. எனினும் அவர் எதுவுமே பேசாமல் மெல்லிய புன்னகையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் பக்கம் திரும்பிய அதிபர் "ஜி.எஸ்.சேர். சொர்ணவதியை எந்தப் பள்ளிக்கூடத்திலை சேர்க்க யோசிக்கிறியள்" எனக் கேட்டார்.

விதானையார் அந்தக் கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஒருவாறு சமாளித்தவாறே "இன்னும் நான் அதைப் பற்றி ஒரு முடிவும் எடுக்கேல்லை" என்றார்.

அதிபர் "பரவாயில்லை, பருத்தித்துறை மெதடிஸ் நல்ல பள்ளிக் கூடம். அங்கை சேர்க்க நான் எல்லா ஏற்பாடும் செய்துவிடுறன்" என்றார்.

விதானையார் தான் ஒரு இக்கட்டுக்குள் அகப்பட்டு விட்டதாகவே கருதினார். மெல்ல அவர் பருத்தித்துறை தூரம் போக்குவரத்தும் பிரச்சினை" என இழுத்தார்.

"அது பெரிய பிரச்சினையில்லை. அங்கை நல்ல [illegible] இருக்கு. [illegible] மக்கு ஒருக்கால் வந்து போகலாம்" என்றார்.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விதானையார் சில கணங்கள் தடுமாறினார். எனினும் அந்த சில கணங்களில் அவருக்கு அடுத்த பதில் தயாராகி விட்டது.

"எங்கடை ஆக்கள் சைவப் பழங்கள்.. மச்ச மாமிசம் புழங்கிற இடங்களை விரும்பமாட்டினம். அதாலை தான் யோசிக்கிறன்" என்றார். தான் கள்ளுப்பட்டி போறதும் ஆடு பங்கு போடுறதும் அவர்களுக்குத் தெரிந்திருக்காது என்றே நம்பினார்.

ஆனால், திடீரென சுந்தரமூர்த்தி குறுக்கறுத்து "இந்து லேடீஸ் நல்ல சைவப்பள்ளிக் கூடம். அங்கை ஹொஸ்டலும் நல்ல கட்டுப்பாடானது. நானும் மகளை யவ்னா இந்துவிலை தான் சேர்க்கப் போறன்" என்றார்.

சொர்ணம் நிலைமை தனக்குச் சாதகமாக மெல்ல மெல்ல மாறி வருவதாகவே நம்பினாள். ஆனால், விதானையார் உடனடியாக மசிந்து விடவில்லை. "இப்ப என்ன அவசரம். நாள் இருக்குத்தானே. அதுக்குப் பிறகு முடிவு செய்வம்" என்றார் அவர்.

சொர்ணம் பரிதாபமாக தங்கவேலைப் பார்த்தாள். அவனால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

அசெம்பிளியில் அதிபர் தங்கவேலையும், சொர்ணலட்சுமியையும் மேடையில் அழைத்துப் பாராட்டியதுடன் எதிர்காலப் பொறியியலாளர், மருத்துவர் எனப் புகழ்ந்துரைத்தார். மாணவர்களும் கைதட்டி தங்கள் மகிழ்வைத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வுகள் விதானையார் மனதில் அவரையறியாமலே ஒரு இன்பக் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. தன் மகள் மருத்துவராக வருவது தனக்குப் பெருமை தான் என அவருக்குத் தோன்றியது. ஆனால் தனது தாயாரின் பிடிவாதத்தை உடைக்க முடியுமென்றோ அல்லது அதை மீறிச் செயற்பட்டு விட முடியுமோ என்ற நம்பிக்கை அவருள் எழ மறுத்தது.

அசெம்பிளி முடிந்த பின்பும் விதானையார் சுந்தரமூர்த்தியுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டார். சொர்ணமும் வெளிப்படுத்த முடியாத சோகத்துடன் தங்கவேலிடம் விடைபெற்றாள்.

அன்று இரவு முழுவதும் அவளால் தூங்கவே முடியவில்லை. படிப்பை இடை நிறுத்துவது என்பதை அவளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. இரவு வெகு நேரத்தின் பின்பு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாகத் தூங்கிப் போனாள்.

அடுத்த நாள் இளையவன் வரும் வரை பூக்கன்றுக்கு நீர் ஊற்றும் சாட்டில் சங்கடப்படலையடியில் நின்றாள். அவன் வந்ததுமே ..... அவனருகில் போய் அவனது இடைக் கூட்டுக்குள் ஒட்டப்பட்ட ஒரு கடித உறையைப் போட்டாள்.

இளையவன் திடுக்கிட்டுப் போய் "இது... இது என்ன பிள்ளை..?" என்றான்.

அவள் "கடிதம்" என்றாள் உறுதியுடன்.

இளையவனுக்கு நரம்புகள் கூட நடுங்குவது போலிருந்தது. அவன் தடுமாறியபடி "கடிதமோ... என்னத்துக்கு...?" எனக் கேட்டான்.

"அது என்னோடை படிக்கிற ஒருத்தருக்கு... நீ ஒரு பத்துச் சத முத்திரை ஒட்டி பெட்டியிலை போட்டு விடுவியே?"

திடீரென இளையவனின் முகம் ஓடிக் கறுத்தது. ஒரு கணத்தில் தான் எல்லாவற்றையுமே இழந்து விட்டது போல் உணர்ந்தான். அப்போது தான் தன்னுள் சொர்ணத்தின் மீதான ஆசை வளர்ந்திருப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அடுத்த கணத்திலேயே இது வெறும் முட்டாள்தனம் என்பதாகவும் நினைத்துக் கொண்டான்.

எனினும் "பிள்ளை அது என்ன பழக்கம்" என்றான் அவன்.

சொர்ணத்தின் சோகமான முகத்திலும் ஒரு புன்னகை படர்ந்தது. அவள், "நீ யோசிக்கிறமாதிரி ஒண்டுமில்லை, இது வேறை விஷயம்.." என்று சொன்னவள் இடைநிறுத்தி விட்டுப் பின் "நான் ஒரே ஒருத்தனைத்தான் விரும்பிறன். அது ஆரெண்டும் உனக்குத் தெரியும். பிறகு ஏன் உனக்கு வீண் ஐமிச்சங்கள்" எனக் கத்த வேண்டும் போலிருந்தது. எனினும் அவள் அதை வலிந்து அடக்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## நெருக்கடி நிலைக்குள் நாடு

தேர்தல் கால வாக்குறுதி
சில நிமிட மவு
நிசமாகிய புதுமைகளாயின!

சீர்ற செயலொராகர
செயத் திட்டங்களால்
தேர்வை சிந்தி உழைக்கும்
பாட்டாளி வர்க்கமின்று
சுமையை யும் துர்ப்பாக்கியம்
வாழ்க்கைச் சுமைகள்
ஏரம்ப நிதி உயர்த்தப்பட்டதால்!

சோர்வைக் குந்தச் சாபடுக்கள்
மீண்டும் புதுப்பிக்கப்படுவது வெறு
நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும்
செல்வந்தர் தறிகள் தரும்
தலைவிடி நம்நாட்டுக்கு நெருக்கடி தான்!

எதிர்க்கட்சிகள் ஒரு புறமும்
எரிபொருள் மின்சாரக் கட்டண உயர்வும்
மறுபுறமும் நெருக்கடி தருவதும்
நம் நாட்டுக்குத் தலையிடிதான்!

-சேனையூரன்-
மூதூர் கிழக்கு

ஓர் அழகான மழை நாளில் மு
மழைத்துளிகளை ழ
ரசித்தபடி நீயும் க்
உன்னை ரசித்தபடி நானும். கா
கரையும் ல
அந்த மழைத்துளிகளில் ம்
உன்னைச் சுற்றி
விரிந்து கிடக்கிறது
என் இதயம்.
மழைநின்ற பின்னும்
நனைந்து கொண்டு
இருக்கிறேன்.
நீ என்னைக் கடந்து
போனது கூடத் தெரியாமல்
மீண்டும் வருமா
என் வாழ்வில்
மழைக் காலம்......



## ஏமாற்றம்



சாலையோரம் நீ நடந்தாய்
உன் பின்னால் நான் நடந்தேன்!
திரும்பி நின்று புன்னகைத்தாய்
என் இதயத்தினுள்ளே ஓர் நீரூற்று........
அருகில் வர எத்தனித்தேன்
அப்போது தான் புரிந்து கொண்டேன்
நீ– புன்னகைத்தது
எனக்காக அல்ல
என் பின்னால் வரும்
உனது காதலனுக்காகவென்பதை.....!

ச.செல்வமலர்
விநாயகபுரம்-02, திருக்கோவில்.

## வியர்வைத் துளிகளிற்கு விருது கொடுங்கள்.

நினைவு கூரும் நிகழ்வுகளாய் மட்டும்
மாறிவரும் மேதினம்
இப்போதெல்லாம்
களியாட்ட ஊர்கோலமாய்
கவிழ்ந்து போகிறது.


புரிதல் என்ற ஒன்று குழிதோண்டிப்
புதைக்கப்பட்டதால்
தொழிலாளர் கண்ணீரும்
வியர்வையும் கரியும் இரத்தமும்
மௌனமாய் சிந்திப் போகின்றன.
இந்தச் சிந்தல்களை
தூக்கமாய் தாரைவார்க்கப்பட்ட
தன்னிர் அலையாய் எண்ணி
மேல் இருப்போரெல்லாம்
மெதுவாய் தூங்கிப் போகிறார்.

ஒன்றை மட்டும்
உணர வேண்டும்.
ஏழைகளின் இருப்பு
பணக்காரனுக்கு வெளிப்படை.
முட்டாள்களின் இருப்பு
அறிவாளிக்கு பிரசித்தம்.
கஞ்சனின் இருப்பு
வள்ளலுக்குப் பிழைப்பு.
அடிமையின் இருப்பு
ஆண்டவனுக்கு நீட்சி.
பக்தனின் இருப்பு
சாமிக்கு மதிப்பு.
தொழிலாளியின் இருப்பு
முதலாளிக்கு வாழ்வு.
இங்கே எதையும்
ஒப்பிட வரவில்லை
ஒன்றின் இருப்பு
இன்னொன்றின் சிறப்பென்று
இயம்ப வருகிறேன்.
அதற்காய் அப்படியே
இருங்களென்று
சபிக்கவுமில்லை.


மேதினங்களே உழைப்பாளிகளின்
தோள்களைக் கொஞ்சம்
தடவிக் கொடுங்கள்.
கரங்களைக் கொஞ்சம்
பற்றிக் கொள்ளுங்கள்.
மனங்களைக் கொஞ்சம்
நீவி விடுங்கள்.
கூலியை முற்றாக
நிறுத்தி விடுங்கள்.

தொழிலாளர்கள் வியர்வையில்
கட்டடம் கட்ட முடிந்திருந்தால்
அவர்களது கட்டிடமே
உலகின் உயர்ந்த கட்டடம்.
தொழிலாளர்கள் கண்ணீரையில்
செல்வம் செய்ய
முடிந்திருந்தால்
தொழிலாளிகள் தான்
உலகின் முதற்தரப் பணக்காரர்.
எந்தப் புதுமையும்
தொழிலாளி இல்லாமல்
வந்தது இல்லை
எந்த முதலாளியும்
தொழிலாளி இல்லாமல்
உயிர் பெற்று போனதில்லை
உணர்ந்தால் உலகம்
ஊமையாகப் போவதில்லை.

அகநிகா



## வாழும் காதல்!



காதல் ஒரு பூஞ்சோலை – உயிரை
காவு கொள்ளும் வரைக்கும்.
காதல் ஒரு சொர்க்கம் – இதயம்
காய்ந்து சருகாகும் வரைக்கும்.

காதல் என்பது கண்ணீர்த்
துளிகள் அல்ல
கரைபுரண்டோடும்
காட்டாறு
காதல் காவியம்
உயிரின் உணர்வை
காதல்கள் – நிதமும்
பல கதைகள் சொல்லி
பல யுகங்கள் வாழும்.

வேல் மகள்
புளியம் பொக்கணை.

## நீ தமிழனா?

முகமாலை கடக்கும் போது
உன் கண்கள் கலங்குமானால்
நீ தமிழன் என்பதை
ஒப்புக் கொள்கிறேன்.

முதுமைவரை ஒழுக்கமாய்
முடித்திடுவாயானால்
நீ தமிழன் என்பதை
ஒப்புக் கொள்கிறேன்.

சந்தர்ப்பங்களுக்காக
வாழாதவன் என்றால்
நீ தமிழன் என்பதை
ஒப்புக் கொள்கிறேன்.

விலைக்கு வாங்க
முடியாத
வீரன் என்றால்
நீ தமிழன் என்பதை
ஒப்புக் கொள்கிறேன்.

புறம் பேசத் தெரியாத
புண்ணியவான் என்றால்
நீ தமிழன் என்பதை
ஒப்புக் கொள்கிறேன்.

மொழிக்காக உயிர்நாடி
துடித்திடுமென்றால்
நீ தமிழன் என்பதை
ஒப்புக் கொள்கிறேன்.

நெடுந்தீவு க.யோகேஸ்வரன்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணைய கில்லாடிகள்

குற்றம் கண்டு பிடித்தே பெயர் வாங்கும் புலவர்கள் என்பதைப் போல, கிண்டல் அடித்தே புகழ் பெற்று விடும் நபர்களும் இருக்கவே செய்கின்றனர். அமெரிக்காவை சேர்ந்த இரண்டு இளைஞர்கள் இப்படி தான் கிண்டல் மூலம் புகழ் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றனர். இணைய உலகில் பரவலாக தங்களைப் பற்றி பேச வைத்து இணைய நட்சத்திரங்களாகி இருக்கிறார்கள்.

ஆடம் ஸ்மித், ஸ்டேசி லேம்ப் என்னும் அந்த இரண்டு இளைஞர்களும் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை கிண்டல் செய்து இணைய நட்சத்திரங்களாக உருவாகி இருக்கின்றனர். ஆனால் அவர்களின் கிண்டல் நாகரீகமாகவும் அதைவிட நேர்த்தியாகவும் அமைந்திருந்தன என்பதை கவனிக்க வேண்டும்.

ஹிலாரியோ உலகறிந்த பெண்மணி! திருமதி கிளின்டனாக அறிமுகமான அவர், ஒபாமா அமைச்சரவையில் இடம்பெற்று இன்று நட்சத்திர அந்தஸ்து பெற்ற அமைச்சராக புகழ் பெற்றிருக்கிறார்.

ஹிலாரி பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் சளைக்காமல் பேட்டி கொடுக்கிறார். எந்த பிரச்னையானாலும் கருத்து தெரிவிக்கிறார். ஹிலாரி சொல்வதை அமெரிக்கா மட்டும் அல்ல உலகமே உற்றுக் கவனிக்கிறது. இத்தகைய தலைவர்களுக்கு அனுப்பும் எஸ்.எம்.எஸ் செய்திகளை படிக்க முடிந்தால் எப்படி இருக்கும்?

அதைத் தான் ஸ்மித்தும் லேம்பும் செய்தனர். டம்ப்லர் (www.tumblr.com) இணையத்தில் ஒரு தளத்தை ஆரம்பித்து அதில் ஹிலாரி அனுப்பும் எஸ்.எம்.எஸ் செய்திகளை இடம்பெற வைத்தனர். அதாவது ஹிலாரி அனுப்புவது போல செய்திகளை இவர்களே உருவாக்கி தளத்தில் இடம் பெற வைத்தனர். அதுவும் ஹிலாரி கறுப்பு நிறக் கண்ணாடியோடு காட்சி தரும் (கையில் செல்போனோடும் தான்) அசத்தலான புகைப்படத்தைப் போட்டு அதில் புகைப்பட குறிப்பு போல ஹிலாரியின் செய்திகளை இடம் பெற வைத்தனர்.

உதாரணத்திற்கு ஒரு பதிவில் ஹிலாரியிடம் அமெரிக்க அதிபர் ஒபாமா, ஹேஹ ஹில்.. என்ன செய்கிறீர்கள்? என்று கேட்க, ஹிலாரியோ கூலாக உலகை இயக்கி கொண்டிருக்கிறேன் என பதில் சொல்வது போல அமைந்திருந்தது.

இதேபோல இன்னும் பல தலைவர்களுடனும் பிரபல்ங்களுடனும் ஹிலாரி குறுஞ்செய்தி வடிவில் உரையாடுவது போல படங்களை உருவாக்கி புதுப்புது பதிவாக வெளியிட்டு வந்தனர்.

கற்பனை தான் என்றாலும் இதில் இருந்த நகைச்சுவை உணர்வும் நேர்த்தியும் படித்தவர்களை கவர்ந்தது. இதனை ரசித்தவர்கள் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டனர். அவர்கள் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டனர். அவ்வளவு தான்.. இணைய உலகம் முழுவதும் textsfromhillaryclinton என்னும் இந்த தளம் பற்றி தான் பேச்சானது.

நண்பர்கள் அந்த பதிவுகளை ஃபேஸ்புக்கில் பகிர்ந்து கொண்டனர்; டிவிட்டரில் பகிர்ந்து கொண்டனர். நாளிதழ்களும் பத்திரிகைகளும் இந்த பரபரப்பு பற்றி செய்தி வெளியிட்டு மேலும் பரபரப்பை உண்டாக்கின. நண்பர்கள் ஸ்மித்தும், லேம்பும் தங்கள் ஐடியா இந்த அளவுக்கு ஹிட்டாகும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர்களைப் பொறுத்தவரை ஜாலியாக பேசிக்கொண்டிருந்த போது விளையாட்டாக உருவான எண்ணம் இது.

இருவருமே வாஷிங்டன் நகரைச் சேர்ந்தவர்கள். சமீபத்தில் ஒரு நாள் இருவரும் பார் ஒன்றில் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது ஸ்மித், தனது நண்பரிடம் ஹிலாரியின் கறுப்புக் கண்ணாடி அணிந்த அசத்தலான புகைப்படத்தை காண்பித்து, இந்த புகைப்படத்தை பார்த்திருக்கிறாயா? கண்ணாடியும் செல்போனுமாக எவ்வளவு கம்பீரமாக கச்சிதமாக இருக்கிறது என்று கேட்டிருக்கிறார். நண்பர் லேம்பும் அதனை ஆமோதிக்க, அந்த நொடியில் ஹிலாரியை எஸ்.எம்.எஸ் செய்தி அனுப்ப வைத்தால் என்ன என்று தோன்றியிருக்கிறது.

உடனே டெக்ஸ்ட் ஃப்ரம் ஹிலாரி கிளின்டன் என்னும் பெயரில் வலைப் பதிவு செய்தனர். அடுத்த ஒரு வாரத்தில் அந்த தளம் சூப்பர் ஹிட்டாகிவிட்டது. கற்பனையான செய்திகள் தான் என்றாலும் அவற்றை கண்ணியத்தோடே வெளியிட்டனர். நகைச் சுவையில் எல்லை தாண்டாமலும் பார்த்துக் கொண்டனர். எனவே அந்த பதிவுகள் ரசிக்கும்படியே இருந்தன.

இதனால் இருவரும் இணைய உலகில் புகழ் பெற்றது ஒரு ஆச்சரியம் என்றால் அதைவிட ஆச்சரியம் ஒன்று அவர்களுக்கு காத்திருந்தது. அவர்கள் தளத்தின் நாயகி ஹிலாரியிடம் இருந்தே இருவருக்கும் அழைப்பு வந்தது. ஆம்.. யாரை கிண்டல் செய்து குறுஞ்செய்தி வெளியிட்டு கொண்டிருந்தன்ரே அவரே நண்பர்களை சந்திக்க விரும்புவதாக தெரிவிக்கப்பட்டது.

நேரில் ஹிலாரியை சந்தித்தபோது ஹிலாரி தானும் அந்த தளத்தின் ரசிகர் என்று கூறி, நண்பர்களை பிரம்மிப்பில் ஆழத்திவிட்டார். சில நிமிடங்களே அந்த சந்திப்பு நீடித்தாலும் நண்பர்கள் இரு வரும் ஹிலாரியுடன் புகைப்படம் எடுத்து கொண்டனர். அதனை பெருமையோடு தங்கள் தளத்தில் வெளியிட்டனர். ஹிலாரியை நையாண்டி செய்து ஹிலாரியையே ரசிகையாக்கிக் கொண்ட இந்த இருவரும் இணைய கில்லாடிகள் தான். ஆனால் ஒரு சின்ன வருத்தம். இருவரும் புதிய பதிவுகள் வெளியிடுவதை நிறுத்திக் கொண்டு விட்டனர்.

இந்த புகழே போதும் என நினைத்து விட்டனர் போலும். ஆனால் இதுவும் கூட புத்திசாலித்தனம் தான். இனி எப்படி தொடர்வது என தடுமாற்றம் வந்து தரம் குறையும் முன்னே குட்பை சொல்லிவிட்டனர்.

அந்த தளம் அப்படியே இருக்கிறது. இப்போதும் பழைய படங்களையும் குறுஞ்செய்திகளையும் பார்க்கலாம்! ரசிக்கலாம்!!

# அஜித் மீண்டும் கார் பந்தயத்தில்...??

ஸ்பான்ஸர் செய்ய துடிக்கின்றன நிறுவனங்கள்!

ஹீரோ என்ற சொற்பதம், நிஜவாழ்க்கையிலும் பொருந்தக்கூடிய ஒரே கொலிவுட் ஹீரோ என்றால் சந்தேகமில்லாமல் அது தல அஜித்! காரணம் மிகவும் வெளிபடையானது! பார்முலா கார் பந்தயத்தில், உயிரை துச்சமாக மதித்து, தொடந்து கலந்து கொண்டதன் மூலம் நிஜ வாழ்க்கையிலும் ஹீரோவாகி தனது ரசிகர்களுக்கு மரியாதை சேர்த்தவர்! ஒரு கட்டத்தில் கஷ்டப்பட்டு நடித்து சம்பாதித்த பணத்தை, ஸ்பான்ஸர்ஷிப் கிடைக்காததால் தனது சர்வதேச ஃபார்முலா கார் பந்தயத்துக்கு தண்ணீர் மாதிரி செலவழித்தார்.

கார் பந்தயத்தால் விழுந்த இடைவெளி பற்றி கலங்காத அஜித், சினிமாவில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவேண்டிய கட்டாயத்தை உணர்ந்தார்! இதனால் கார் பந்தயத்தை தற்காலிகமாக ஓரம் கட்டியவர், தமிழ் சினிமாவில் தனது இடத்தை தன்னைத் தவிர வேறு யாராலும் நிரப்ப முடியாதது என்பதைப் புரிந்து கொண்டார். அதன்பிறகு அஜித் வேகமெடுத்தது பில்லா ரீமேக்கில் இருந்துதான்!

அசல் தோல்விப் படம் என்று சொல்லப்பட்டாலும் தியேட்டர் உரிமையாளர்களை நோகடிக்காமல் படம் ஓரளவு வசூலைத் தந்தது. அதன்பிறகு மங்காத்தா வசூல் மழையால் நனைந்தது. தற்போது பில்லா 2 ஒட்டுமொத்த சினிமா வியாபாரத்தில் மங்காத்தாவை பின்னுக்கு தள்ளிவிட்டு நிற்கிறது. அஜித் எந்தக் காரணத்துக்காகவும் தற்போது காத்திருக்க தயாரில்லை!

விஷ்ணுவர்த்தன் இயக்கத்தில் மற்றொரு முன்னனி ஹீரோவான ஆர்யாவுக்கும் தனது படத்தில் திரைவெளியை பகிந்துகொள்ளும் மாஸ் ஹீரோவாக அஜித்தின் ஃபார்முலா வேகம் யாரை பதட்டமடைய வைத்திருக்கிறதோ இல்லையோ!? இளையதளபதி விஜயை பதட்டமடைய வைத்திருக்கிறது! அஜித்தின் இந்த வேகத்தை கண்டிப்பாக எதிர்பார்த்திருக்க மாட்டார் விஜய்!

விளைவு! அஜித்துக்கு ஒரே அதிரடி போட்டியாளராக இருக்கும் விஜய் தொடர்ச்சியாக படங்களை ஒப்புக்கொண்டு வருகிறார். வழக்கமாக ஒரு படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது, அந்தப் படத்தின் இறுதி கட்ட படப்பிடிப்பு நடக்கும்போதுதான், தனது அடுத்த படம் எது என்பதை அறிவிப்பார் விஜய்! ஆனால் இம்முறை அஜித்தின் வேகத்துக்கு ஈடுகொடுக்க, தனது அடுத்த இரண்டு படங்கள் எது என்பதை தனது ரசிகர்களுக்கு மன்ற நிர்வாகிகள் வழியே தொடர்புபடுத்தியுள்ளார்.

தற்போது ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் துப்பாக்கி படத்தில் நடித்து வரும் விஜய், இந்தப்படம் முடிந்ததும் கவுதம் மேனன் இயக்கும் யோஹன் அத்தியாயம் ஒன்று படத்தில் நடிக்க இருக்கிறார். இந்தப்படம் முடிவடைந்த பிறகு மதராசபட்டினம் விஜய் இயக்கும் படத்தில் நடிக்க உள்ளார். இந்தப் படத்துக்கு தலைவன்என்று தலைப்பு வைக்கமுடிவு செய்திருகிறார்கள். யோஹன் அத்தியாயம் ஒன்று படத்தை அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட ஐந்து முதல் உலக நாடுகளில் படமாக்கப்பட இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைக்கிறது. மொத்தத்தில் தல, தளபதி இருவருமே ஆரோக்கியமான தொழில் போட்டிக்கு அதிரடி உதாரணமாக இருக்கிறார்கள்!






இந்த போட்டி தமிழ்நாட்டு எல்லைக்குள் மட்டுதான்! ஆனால் தல அஜித், தனது அதிவேக சினிமா பயணம் எவ்வகையிலும் பாதிக்காத வண்ணம் மீண்டும் ஃபார்முலா கார் பந்தயத்தில் பங்கெடுக்க ஆயத்தமாகி வருகிறார் என்பதுதான் தற்போது கிடைக்கும் அதிரடியான தகவல். இம்முறை அஜித்துக்கு ஸ்பான்ஸ்ஷிப் தர இந்தியாவின் இரண்டு முன்னனி வர்த்தக நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன. ஆனால் அதில் ஒன்று புகையிலை தயாரிப்புகளில் கொடிகட்டிப் பறக்கும் நிறுவனம் என்பதால் அதனை அதிரடியாக மறுத்திருக்கிறார். மற்றொரு நிறுவனம் சென்னையின் மிகப்பெரிய கார்ப்பரேட் ஹாஸ்பிடல் நிறுவனம் என்கிறார்கள்.

இந்த நிறுவனத்தின் பிராண்ட் அம்பசிடராகவும் இருந்து கொண்டு ஸ்பான்சர்ஷிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அந்த நிறுவனத்தின் எதிர்பார்ப்பு என்கிறார்கள்.

முடிவு தல அஜித் கையில் இருக்கிறது என்கிறார்கள்! அழுத்தம் திருத்தமாக முடிவெடுக்க தல அஜித்துக்கு சொல்லித்தர வேண்டுமா..??




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி.. பிட்ஸ்

## மீண்டும் சினிமாவுக்கு ஜோதிகா?

ஜோதிகா ஒரு நல்ல நடிகை அவர் தொடர்ந்து நடிக்க வேண்டும் என்பது தான் எனக்கு ஆசை என்று திருமணத்தின் போது சொல்லி இருந்தார் சூர்யா. ஆனால் திருமணத்திற்கு பிறகும் தொடர்ந்து நடிக்க ஜோதிகா விரும்பவில்லை. இவர்களுக்கு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் இருக்கிறார்கள்.

மலையாளத்தில் 'சீதா கல்யாணம்' என்ற படம் தான் ஜோதிகாவின் கடைசி படம். தமிழில் கடைசி படமாக அமைந்தது மொழி. திருமணத்திற்கு பின்னர் சூர்யாவின் அகரம் தொண்டு நிறுவனம் தயாரித்த குறும்படத்திலும், சூர்யாவுடன் சேர்ந்து சில விளம்பரப் படங்களிலும் நடித்தார் ஜோதிகா.

இது பற்றி சூர்யா மனம் திறக்கையில், ஜோதிகாவுக்கு மீண்டும் சினிமாவில் நடிக்க ஆசை இருக்கிறது. விளம்பரப் படங்களில் நடிக்க இரண்டு மூன்று நாள்கள் தான் கால்ஷீட் தேவைப்படுகிறது. ஆனால் சினிமாவில் நடிக்க நிறைய நாள்கள் தேவைப்படும். அத்தனை நாள்கள் குழந்தைகளை விட்டு பிரிந்து இருக்கும் சூழ்நிலை வரும். குழந்தைகளின் நலனுக்காகவே தன் நடிப்பு ஆசையை அப்படியே அழித்துவிட்டார் ஜோதிகா.

ஆனால், காலம் என்ன முடிவு செய்யும் என்பதை நாம் சொல்ல முடியாது. ஒரு சரியான நேரம் அமைந்தால் ஜோதிகா மீண்டும் வலம் வரும் காலம் வரும் என்று சொல்கிறார் சூர்யா.

## விஜயின் ஆட்டத்தில் அசந்த பாலிவூட்

பிரபுதேவா இயக்கும் இந்தி படமான ரவுடி ரத்தோரில் ஒரு பாட்டுக்கு ஆட்டம் போட வந்த இளைய தளபதி விஜயை பார்த்த அக்ஷய் குமார் அவருக்கு என்ன 17 வயதா என்று கேட்டுள்ளார். சஞ்சய் லீலா பன்சாலி தயாரிப்பில் பிரவுதேவா இயக்கி வரும் இந்தி படம் ரவுடி ரத்தோர்.

கொலிவுட்டில் கார்த்தி நடித்த சிறுத்தையின் ரீமேக். இதில் அக்ஷய் குமார், சோனாக்ஷி சின்ஹா நடிக்கின்றனர். இதில் ஒரு பாடலுக்கு இளைய தளபதி விஜய் ஆடியுள்ளார்.

ஆனால் கொலிவுட்டில் பெரிய ஹீரோவான விஜயை எப்படி ஒரு பாட்டுக்கு வந்து ஆடுங்க என்று சொல்வது என்று பிரபுதேவா முதலில் தயங்கினாராம். பிறகு சரி கேட்டுத் தான் பார்ப்போம் என்று விஜயிடம் கேட்டுள்ளார்.

பிரபுதேவா சற்றும் எதிர்பாராவிதமாக ஓ.கே. சொன்ன விஜய் அடுத்த 1 மணி நேரத்தில் ஷூட்டிங் ஸ்பாட் வந்துவிட்டாராம்.

விஜயை பார்த்தவுடன் படத்தின் ஹீரோ அக்ஷய்க்கு ஒரே ஆச்சரியமாம். உடனே வந்து விஜயை ஆரத் தழுவி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். அதன் பிறகு பிரபுதேவாவைப் பார்த்து விஜய்க்கு என்ன 17 வயசா என்று அக்ஷய் கேட்டுள்ளார்.

இது குறித்து பிரபுதேவா கூறுகையில், இந்த பாடல் மூலம் விஜயை பாலிவூட்டில் அறிமுகம் செய்ய முயற்சிக்கவில்லை. அவரை யாரும் பாலிவுட்டுக்கு சிபாரிசு செய்யத் தேவையில்லை. பாலிவுட்டே அவரை வரவேற்கும் என்றார்.

## விஸ்வரூபத்தில் ஹாலிவுட்டுக்கு இணையான கிராபிக்ஸ்..?

உலகநாயகன் கமல் நடித்து வரும் புதிய படம் விஸ்வரூபம். இப்படத்தின் கிராபக்ஸ் காட்சிகளுக்கான மேற்பார்வையாளராக பணியாற்றுபவர் மதுசூதனன், இவர் ஏற்கனவே கமலுடன் தெனாலி, ஆளவந்தான், உன்னைப் போல் ஒருவன் படங்களுடன் இணைந்து பணியாற்றிவர். தற்போது 4ஆவது முறையாக விஸ்வரூபம் படத்தில் இருவரும் இணைகின்றனர்.

விஸ்வரூபம் படம் குறித்து கிராபக் டிசைனர் மது சூதனன் அளித்துள்ள பேட்டியில், விஸ்வரூபத்தில் பல காட்சிகளில் சிறப்பு கிராபிக்ஸ் இணைக்கப்பட்டிருக்கிறது. எந்த காட்சியில் கிராபிக்ஸ் செய்துள்ளார்கள் என்பதே தெரியாத அளவிற்கு இருக்கும். இதனால் படத்தின் கதையையோ, காட்சிகளின் இயல்புத் தன்மையையோ எந்த விதத்திலும் பாதிக்காது. இப்படத்திற்காக மிகவும் கடினமாக உழைத்துள்ளோம். அதிகமான பணிகள் இருந்ததால் தான் இதன் வெளியீடு காலதாமதமானது என்று கூறியுள்ளார்.

## ஆக்ஷன் ராணியாக எமி ஜாக்சன்

இயக்குநர் ஏ.எல்.விஜய் இயக்கத்தில், விக்ரம் நடிப்பில் உருவாகி வரும் தாண்டவம் படத்தில் அனுஷ்கா, எமி ஜாக்சன் மற்றும் லட்சுமிராய் நடிக்கின்றனர். இப்படத்தின் படப்படிப்பு இங்கிலாந்தில் நடந்து வருகிறது. ஆக்ஷன் படமாக உருவாகி வரும் இப்படத்தில் எமி ஜாக்சனும் ஆக்ஷனில் கலக்கியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

குறிப்பாக ஒரு காட்சியில் அடுக்குமாடி கட்டிடத்தில் இருந்து பாரசூட் மூலம் குதித்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளாராம் எமி ஜாக்சன். அத்துடன் மேலும் பல ஆக்ஷன் காட்சிகளில் நடித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

## இலங்கை அகதியாக அஜித்

பில்லா - 2 படத்தில், இலங்கை அகதியாக அஜித் நடிக்கிறார். இதனால், இலங்கை தமிழர்கள் மத்தியில் வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், பில்லா - 2 யூனிட்டோ, இந்த செய்தியால், படத்துக்கு, ஏதாவது ரூபத்தில் அச்சுறுத்தல் நிகழலாம் என்று மறுத்து வருகின்றனர். இதனால், இலங்கை அகதியாக அஜித் நடித்துள்ள ப்ளாஷ் பேக் காட்சிகளை குறைத்துள்ளனர்.

## பஞ்சதந்திரம்-2

கொலிவுட்டில் விஸ்வரூபம் திரைப்படத்திற்கு பின்பு உலகநாயகன் கமல், கே.எஸ்.ரவிக்குமாருடன் இணைய உள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு கமல், சிம்ரன், ரம்யாகிருஷ்ணன் நடித்து வெளிவந்த படம் பஞ்சதந்திரம். இப்படத்தை கே.எஸ். ரவிக்குமார் இயக்கினார்.

இந்நிலையில் பஞ்சதந்திரம்-2 தயாராக உள்ளது. இதிலும் கமல்-ரவிக்குமார் கூட்டணி அமைக்கின்றனர்.

தற்போது உலக நாயகன் விஸ்வரூபம் திரைப்பட வேலைகளில் தீவிரம் காட்டி வருகின்றார். அநேகமாக இப்படத்திற்கான பணிகள் முடிவடைந்ததும் பஞ்சதந்திரம் படப்பிடிப்புகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொலிவுட்டில் அவ்வை சண்முகி, தெனாலி, தசாவதாரம் என கமல்-ரவிக்குமார் இணைந்த கூட்டணிப் படங்கள் அபார வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

பஞ்சதந்திரம்-2 வை ஒஸ்கர் ரவிச்சந்திரன் தயாரிக்கின்றார். நாயகி, நடிகர்கள் குறித்த தகவல் எதுவும் வெளிவரவில்லை.

## பிரியங்காவை உசுப்பேற்றிய ரசிகர்

பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா, தனக்கு ஐ லவ் யூ சொன்ன ரசிகரை திட்டித் தீர்த்துள்ளார். பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா தேரி மேரி கஹானி என்னும் இந்தி படத்தில் முன்னாள் காதலர் ஷாஹித் கபூருடன் நடித்து வருகிறார்.

இந்த படத்தின் படப்பிடிப்பு ஔரங்காபாத்தில் உள்ள ஆற்றங்கரையோரம் நடந்தது. அப்போது அக்கரையில் நின்று கொண்டிருந்த ரசிகர் ஒருவர் பிரியங்காவைப் பார்த்த குஷியில் அங்கிருந்து ஐ லவ் யூ பரியங்கா என்று கத்தியுள்ளார்.

இதை கேட்ட பிரியங்கா கடுப்பாகி அந்த நபரை அழைத்து வரச் சொல்லியுள்ளார். அவர் இக்கரைக்கு வந்ததும் பிரியங்கா கண்டபடி ஏசியுள்ளார்.

அதன் பிறகு தனது தவறை உணர்ந்த அந்த ரசிகர் மன்னிப்பு கேட்டதோடு ஒரு ஆட்டோகிராப் போடுங்களேன் என்று கேட்டுள்ளார்.

பிரியங்காவும் இப்படியும் ஒரு ரசிகரா என்று சிரித்துவிட்டு ஆட்டோகிராப் போட்டுக் கொடுத்துள்ளார்.

## தேனிலவு ரத்து;; மீண்டும் நடிக்க வந்தார் சினேகா

கொலிவுட்டில் சினேகா- பிரசன்னா திருமணம் அண்மையில் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்பு, சினேகா சினிமாவில் நடிப்பாரா மாட்டாரா என்ற எதிர்பார்ப்பு நிலவியது. அவர் விரும்பினால் தொடர்ந்து நடிக்கலாம் என்று பிரசன்னா கூறினார்.

ஆனால் நடிப்பது பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என்று சினேகா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் திருமணம் முடிந்து ஓரிரு வாரங்கள் ஆன நிலையில் சினேகா தற்போது மீண்டும் நடிக்க வந்துள்ளார். ஜி.என். ஆர். குமாரவேலன் இயக்கும் ஹரிதாஸ் படத்தில் நடிக்கிறார். அதில் சினேகாவுக்கு வித்தியாசமான வேடம் உள்ளதாக தகவல் வெளிவந்துள்ளது.

தற்போது ஹரிதாஸ் படத்திற்கான படப்பிடிப்புகள் விறு விறுப்பாக நடைபெற்று வருகின்றது. மீண்டும் சினிமாவில் நடிக்க தொடங்கியுள்ளதால் தேனிலவுக்குப் போவதை சினேகாவும், பிரசன்னாவும் தள்ளி வைத்துள்ளனர்.

## திரௌபதி வேடத்தில் நயன்தாரா

தெலுங்கில் சீதை வேடத்தில் நயன்தாரா நடித்த, ஸ்ரீராம ராஜ்ஜியம் படம், அவரது நடிப்புக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தது. அதனால், இப்போது தெலுங்கில் உருவாகும், நர்த்தன சாலா என்ற பக்தி படத்திற்கும் நயன்தாராவை ஒப்பந்தம் செய்துள்ளனர். இதில், திரௌபதி வேடத்தில் நடிப்பதற்கு, நயன்தாரா தான் பொருத்தமாக இருப்பார்... என்று, அவருக்கு நடிகர் பாலகிருஷ்ணாவே சிபாரிசு செய்துள்ளார்.

## நடிகர் திலீப் மரணம்

நடிகர் திலீப் (52) உடல் நலக்குறைவால் மரணமடைந்தார். கர்நாடகத்தைச் சேர்ந்த இவர் சமீபகாலமாக உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் சொந்த ஊரான மைசூரில் காலமானார். தமிழ் திரையுலகில் 1980களில் முன்னணி நடிகராக இருந்தவர் திலீப். வறுமையின் நிறம் சிவப்பு, தூங்காதே தம்பி தூங்காதே, சம்சாரம் அது மின்சாரம், பெண்மணி அவள் கண்மணி, மாப்பிள்ளை உள்ளிட்ட படங்களில் முக்கிய கேரக்டரில் நடித்தவர். சென்னை வளசரவாக்கத்தில் வசித்து வந்த திலீப் பின்னர் குடும்பத்தோடு மைசூரில் வசித்து வந்தார். சில நாள்களாக சிறுநீரக கோளாறும் காரணமாக மைசூரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சையளித்து வந்தனர். இந்நிலையில் உடல்நிலை மோசமாகி திடீர் மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்தார்.

## சித்தார்த்துக்காக பாடிய சிம்பு

சித்தார்த், ஸ்ருதிஹாசன், ஹன்சிகா மோத்வானி ஆகியோர் இணைந்து நடித்த தெலுங்கு படம், ஓ மை ப்ரண்ட்!

இப்படம், ஸ்ரீதர் என்ற பெயரில் தமிழுக்கு டப்பாகிறது. இதில், தெலுங்கு பதிப்பில் சித்தார்த்துக் காக பாடகர் பென்னிதயாள் என்பவர் பாடிய பாடலை, தமிழில் நடிகர் சிம்பு பாடியுள்ளார். இப்படத்தின் இசையமைப்பாளர் ராகுல்ராஜ் பாட அழைத்தபோது மறுத்த சிம்பு, பின்னர் சித்தார்த் அழைத்ததும், அவரது நட்புக்காக பாடிக் கொடுத்துள்ளார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ராட்டினம்

எளிமையான கதை, நேர்மையான காட்சியமைப்பு, எந்த இடத்திலும் சினிமாத்தனமில்லாத இயல்பு...இவைதான் ராட்டினத்தின் சிறப்புகள்.

தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளை இதற்கு முன் வேறு எந்தப் படத்திலும் இத்தனை சிறப்பாக கதைக்களமாக்கியதில்லை என்பதற்காகவே இயக்குநர் தங்கசாமியைப் பாராட்ட வேண்டும்.

பள்ளி முடித்த ஜெயத்துக்கும் (லகுபரன்) பள்ளியில் படிக்கும் தனத்துக்கும் (ஸ்வாதி) காதல். ஜெயத்தின் அண்ணன் வளரும் இளம் அரசியல்வாதி. அண்ணி லோக்கல் கவுன்சிலர். தனத்தின் அப்பா தூத்துக்குடி துறைமுகத்தின் சேர்மன். தாய் மாமா பெரிய 'க்ரிமினல்'... சட்டத்தரணி. அரசியல் தொடர்புகள் எக்கச்சக்கம்!

காதலர்கள் இருவரும் அன்பையும் பரிசுகளையும் பரிமாறிக்கொள்வதோடு நில்லாமல், ஒரு முறை திருச்செந்தூர் வரை ஜாலியாக மோட்டார்சைக்கிளில் போகிறார்கள். வரும்போது ஆத்தூர் பாலத்தில் பொலீஸ் மடக்கி விசாரிக்கிறது. அதோடு நில்லாமல் பெண்ணின் வீட்டில் போட்டுக் கொடுத்துவிடுகிறார் இன்ஸ்பெக்டர்.

பிரச்சினையை பக்குவமாகக் கையாள நினைக்கும் பெண்வீட்டுத் தரப்பு, நேராக ஜெயம் வீட்டுக்கு வந்து விஷயத்தைச் சொல்லி கண்டித்து வைக்கச் சொல்கிறார்கள். பெண்ணை கொஞ்ச நாள் வெளியூருக்கு அழைத்துப் போய் வைத்திருந்து, மீண்டும் வருகிறார்கள். ஆனால் காதலர்கள் மீண்டும் சந்திக்கிறார்கள். தனத்தின் அண்ணன் பார்த்துவிட பிரச்சினை வெடிக்கிறது.

பெற்றோரின் வெறுப்பு தாங்காமல் வீட்டைவிட்டு வெளியேறும் தனம், தன்னை அழைத்துப் போய் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துகிறாள். குலசை தசரா விழாவில் வைத்து தாலி கட்டுகிறான் ஜெயம்.

அதற்குள் விஷயத்தை இருவீட்டாரும் அரசியலாக்கிவிடுகிறார்கள். ஜெயத்தின் அண்ணன் அசோக்கை, கட்சியின் அண்ணாச்சி அழைத்து எச்சரிக்க, பதிலுக்கு இவரும் கையை உயர்த்த, அது அசோக் கொலையில் முடிகிறது.

விஷயம் கேள்விப்பட்டு கதறிக்கொண்டு புது மனைவியுடன் வீடு திரும்புகிறான் ஜெயம். அங்கே விதவை அண்ணி வெறுப்பை உமிழ, இன்னொரு பக்கம் காத்திருக்கும் தனத்தின் வீட்டினர், அவளை தரதரவென இழுத்துப் போகிறார்கள்.

ஜெயம் கட்டிய தாலி என்ன ஆனது? என்பது க்ளைமாக்ஸ்!

ஜெயம் - தனம் திருமணம், அசோக் கொலை போன்ற சில காட்சிகள், திருப்பங்களை யூகிக்க முடிந்தாலும் எந்தக் காட்சியிலும், அட இது சினிமாத்தனமா இருக்கே என்று சொல்ல முடியாததுதான் இந்தப் படத்தின் மிகப் பெரிய பிளஸ்.

லகுபரன், ஸ்வாதி இருவருக்குமே இது முதல் படம் என்றாலும் நம்ப முடியாத அளவு இயல்பாக நடித்திருக்கிறார்கள். ஒரு இம்மி கூட மிகைப்படுத்தல் இல்லாத காதலையும் சோகத்தையும் திரையில் பார்ப்பது, நம்மை நாமே பார்த்துக் கொள்வதைப் போல புதிதாக உள்ளது.

புதிய இயக்குநர்களில் தங்கசாமி நம்பிக்கை தரும் படைப்பாளியாக வலம் வருவார் என்பதில் ஐயமில்லை.




# சினி துளிகள்

- ★ சிங்கம்-2 படத்தில் பள்ளி மாணவியாக நடி பதால் நாயகி ஹன்சிகா, தனது உடல் எடைை குறைத்துள்ளார்.
- ★ பிரபல சமூக வலைத்தளமான ஃபேஸ்புக்கி உலக நாயகன் நடிகர் கமல்ஹாசன் இணை துள்ளார்.
- ★ பிறமொழி கதாநாயகர்கள் தமிழில் கதை கேட் தால் தமிழ் இயக்குநர்கள் பிறமொழியில் ஜெயிக் முடிகிறது என்றார் பி.வாசு.
- ★ சூர்யா, காஜல் இணைந்து நடிக்கும் 'மாற்றான் படத்தை கோ பட இயக்குனர் கே.வி.ஆனந் இயக்கி வருகிறார்.
- ★ பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் அச்சமின்றி பாதுகாப்பான இடத்திலிருந்து படத்தின் சி காட்சிகளை படமாக்கியுள்ளது மாற்றான் பட குழு.
- ★ சீமான் இயக்கத்தில் உருவாக இருந்த பகலவ படத்தில் இருந்து இளைய தளபதி விஜய் விலக் விட்டார். இதனால், பகலவன் படத்தில் யா நடிப்பார்கள் என்பது குறித்து கொலிவுட்டி எதிர்பார்ப்புகள் நிலவி வருகின்றது
- ★ மலையாளத்தில் தயாராகி, தமிழில் ட செய்யப்பட்டு வெளியாகும் உருமி தமிழக மற்றும் உலகெங்கும் 250 அரங்குகளி வெளியாகிறது
- ★ அசின், இலியானா, டாப்சி, காஜல் அகர்வாலை தொடர்ந்து, இந்தி சினிமாவில் நடிக்க, ப தென்னிந்திய நடிகைகள் முயற்சித்து வருகி றனர். அஜய் தேவ்கான் நடிக்கும் ஒரு படத்தி ஒப்பந்தமாகியுள்ளார். அதோடு, பாலிவுட் நடிகை கள் ரேஞ்சுக்கு, படு கவர்ச்சியாக நடிக்கவும் ஓ.கே., சொல்லியிருக்கிறார்.
- ★ இந்தியில் முதல், 3டி படம் உருவாகிறது. இதி முக்கியத்துவம் வாய்ந்த வேடத்தில் நடிக்கிறா பிரபுதேவா. இதைத் தொடர்ந்து ஒரு பாடலுக் நடனமாட சான்ஸ் கிடைத்தாலும் ஆடுவே என்கிறார் பிரபுதேவா.
- ★ கஜினி, ரெடி ஆகிய இந்திப் படங்களுக் அடுத்து 'ஹவுஸ்ஃபுல் 2' படத்தின் வசூலு ரூ.100 கோடியைத் தாண்டியுள்ளது. இந் மூன்று படங்களிலும் அஸின்தான் கதாநாயகி இதையடுத்து ரூ.100 கோடிக்கு மேல் வசூ செய்த மூன்று படங்களின் நாயகி என்ற அந்தஸ் அஸினுக்குக் கிடைத்துள்ளது.
- ★ மறைந்த நடிகர் ரகுவரனின் பெயரில் இந் ஆண்டு முதல் விருது வழங்கத் திட்டமிட்டுள்ளா அவரது மனைவியும் நடிகையுமான ரோகினி ரகுவரனின் பிறந்த தினமான டிசம்பர் 11 ஆ திகதி விருதுகள் வழங்கப்படும்.
- ★ பிரபல ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலியு நடிகர் பிராட் பட்டும் ஆறு குழந்தைகள் பெற் பின்பும் இதுவரை திருமணம் செய்யாம வாழ்ந்து வரும் இந்த ஜோடி, குழந்தைகளி வற்புறுத்தலுக்கு இணங்கி விரைவில் திருமண முடிக்கவுள்ளது. இதைக் கொண்டாடும் வகையி தன்னுடைய அன்புக் காதலரும் வருங்கால கணவருமான பிராட் பட்டுக்கு ரூ.9 கோடியி ஒரு ஹெலிகாப்டரை வாங்கி பரிசளித்துள்ளா ஏஞ்சலினா ஜோலி.
- ★ வைகைப்புயல், கறுப்பு நாகேஷ், சின்ன கலைவாணர், சனங்களின் கலைஞன் என றெல்லாம் அடமொழி வைத்துக்கொண்டுள் வடிவேலு, விவேக் உள்ளிட்ட நகைச்சுவை நடிகர்களைப்போலதனக்கும்ஓர்அடைமொழியை வைத்துக்கொள்ள முடிவெடுத்துள்ளார் சந்தானம் இதற்காக தன்னுடைய உதவியாளர்களிடமு நண்பர்களிடமும்தனக்கு ஏற்ற அடைமொழியைத் தேர்ந்தெடுக்க அன்புக் கட்டளையிட்டிருக்கிறார்.
- ★ வெளுத்துக்கட்டு படத்தின் மூலம் அறிமுகமான அருந்ததி, விமானப் பணிப்பெண் வேலைக்கான பயிற்சியை முடித்தவர். இவருக்கு திடீரென அதிர்ஷ்டக் காற்று வீசியிருக்கிறது. வி.சேக இயக்கத்தில்சரவணப்பொய்கை,விமலுடன்கூட்டு கனா காணும் காலங்கள் என மூன்று படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

## றைக்கு ஹவுஸ்ஃபுள்ள..



மிரட்டல்
நடிகர் : வினய், நடிகை : ஷர்மிளா மந்த்ரே
இயக்குனர் : மாதேஷ்



நான் ஈ
நடிகர் : நானி நடிகை : சமந்தா
இயக்குனர் : எஸ்.எஸ்.ராஜமவுலி






பட்டிக்காட்டு மாப்பிள்ளை
நடிகர் : புதுமுகம்
நடிகை : அக்[illegible]
இயக்குனர் : [illegible]



நீதானே என் பொன்வசந்தம்
நடிகர் : ஜீவா
நடிகை : சமந்தா
இயக்குனர் : கௌதம் மேனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு நடனம்!



ஒரு குரங்காட்டி சில குரங்குகளை வாங்கி அவற்றிற்கு நடனமாடக் கற்றுக் கொடுத்தான். அவை மிகவும் அற்புதமாக நடனமாடும் திறனைப் பெற்றன. குரங்காட்டி குரங்குகளை நாட்டின் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று அவற்றை மக்கள் முன் நாட்டியமாட வைத்தான். மக்கள் அவற்றைக் கண்டு மிகவும் ரசித்துப் பாராட்டினர். நடனக் குரங்குகளின் பெருமையை நாட்டின் மன்னன் கேள்விப்பட்டான்.

குரங்குகள் நடனக்காட்சிக்கு நாட்டின் முக்கியமான பிரமுகர்கள் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். குறிப்பட்ட நேரத்தில் குரங்குகளின் நடன நிகழ்ச்சி ஆரம்பமாகியது. குரங்காட்டி குரங்குகளுக்கு அழகான பட்டாடை அளித்திருந்தான். மனிதர்களை விட சிறப்பாக, அழகாக குரங்குகள் நடனமாடின.

அதைக் கண்ட மன்னன், மனிதர்களைவிட விலங்குகள் எவ்வளவு மேம்பட்டவை. கொஞ்ச காலம் சென்றால் மனிதனை விட விலங்குகளே உயர்ந்தவை என்ற நிலை ஏற்பட்டு விடும் போலிருக்கிறதே... என்றான் மந்திரியிடம். இதைக் கேட்ட மந்திரி, இல்லை மன்னா... குரங்குகள் குரங்குகள்தான். மனிதர்கள் மனிதர்கள்தான் என்றான்.

அது எப்படி... நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். பழக்கப்படுத்தினால் விலங்குகளும் மனிதரையே விஞ்சிவிடும், என்றான் மன்னன்.

அப்போது முன் வரிசையில் அமர்ந்து வேர்க்கடலை சாப்பிட்டுக் கொண்டிருந்த சிறுமியின் வேர்க்கடலையில் சிறிது எடுத்து குரங்குகள் முன் வீசினார் மந்திரி.

அவ்வளவுதான். ஆடிக் கொண்டிருந்த நடனத்தை விட்டுவிட்டு ஓடிவந்து கடலை பொறுக்குவதில் சண்டை போட்டுக் கொண்டன. குரங்காட்டி எவ்வளோ கத்தியும் கேட்க வில்லை குரங்குகள். இந்தச் சண்டையில் அழகாக உடுத்தியிருந்த பட்டுப்பாவாடை, தலை அலங்காரம் எல்லாம் கலைந்து போனது.

இதைப் பார்த்த அரசன், மனிதன் மனிதன்தான். குரங்கு குரங்குதான். பிறவிக்குணம் யாரை விட்டுப் போகும்! என்று மந்திரியிடம் சொன்னான்!

## உங்களுக்குத் தெரியுமா?

01. ஆயிரம் ஏரிகளின் பூமி என்றழைக்கப்படுவது பின்லாந்து
02. கங்காரு பூமி என்றழைக்கப்படுவது ஆஸ்திரேலியா
03. அதிகாலையின் அமைதி பூமி என்றழைக்கப்படுவது - கொரியா
04. உதய சூரியனின் பூமி என்றழைக்கப்படுவது ஜப்பான்
05. நள்ளிரவு சூரியனின் பூமி என்றழைக்கப்படுவது நோர்வே
06. அல்லிமலர்களின் பூமி என்றழைக்கப்படுவது கனடா
07. கேக்குகளின் பூமி என்றழைக்கப்படுவது ஸ்காட்லாந்து
08. உலகின் புனித பூமி என்றழைக்கப்படுவது பாலஸ்தீனம்


## விடுகதைகள்

1. பறக்கும்போது வால் உண்டு, இறக்கும்போது வால் இல்லை - அவன் யார்?
2. ஒன்பது பிள்ளைகளுக்கும் ஒரே குடுமி - அது என்ன?
3. பிச்சு எறிந்தாலும் பின்னாலேயே முளைக்கிறான், வெட்டி எறிந்தாலும் வேகமாக முளைக்கிறான் - அவன் யார்?
4. தொப்பைப் பையனுக்கு ஒரு வாசல், தோழனுக்கு இரு வாசல் - அவன் யார்?
5. காற்றால் உயிர் பெறும், காதுக்கு இனிமை தரும் - அது என்ன?

## பழமொழிகள்

01. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா?
02. கசடறக் கல்லார்க்கு இசை உறல் இல்லை.
03. கட்டக் கரிய இல்லாமற் போனாலும் பேர் பொன்னம்மாள்.
04. கட்டிக்கொடுத்த சோறும் கற்றுக்கொடுத்த சொல்லும் எத்தனை நாள் நிற்கும்.
05. கட்டின வீட்டுக்கு எட்டு வக்கனை.
06. கட்டினவனுக்கு ஒரு வீடானால் கட்டாதவனுக்கு பல வீடு.
07. கடல் கொதித்தால் விளாவ நீர் ஏது?
08. கடல் திடலாகும், திடல் கடலாகும்.
09. கடல் மீனுக்கு நீச்சுப் பழக்க வேண்டுமா?
10. கடலுக்குக் கரை போடுவார் உண்டா?

## யாருடைய பலூன்...?



மாலா கரன் லீலா

## அறிவியல்

நட்சத்திரங்கள் பறக்கின்றன, அவை அழிந்தும் போகின்றன. நட்சத்திரங் களுக்கு சக்தி அளிப்பது அதில் உள்ள ஹைட்ராஜன் தான். அது தீரும் போது நட்சத்திரங்கள் பலம் இழக்கின்றன. இதனால் ஈர்ப்பு விசை அதிகமாகி கொஞ்சம் கொஞ்சமாக தாமாக அழியும் நிலை ஏற்படுகிறது.

ஒரு நட்சத்திரம் அழிந்து போவதோ, அல்லது உடைந்து நொறுங்குவதோ என்பது அதன் எடையைப்பொறுத்து அமைகிறது. சூரியனை விட 1.4 மடங்கு எடை அதிகமாக இருக்கும் நட்சத்திரமாக இருந்தால் அது வெடித்து சிதறி சூப்பர் நோவா எனப்படும் ஒளிரும் நட்சத்திரமாகிறது. சூரியனை விட எடை குறைவாக இருந்தால் அது பலமற்றதாக சுருங்கி விடுகிறது.

இவ்வாறு ஒரு நட்சத்திரம் அழிந்து போவதற்கு உரிய 1.4 சூரியனின் எடை என்ற கணக்குத்தான் சந்திரசேகர் வரையறை அல்லது சந்திரசேகர் லிமிட் என்று அழைக்கப்படுகிறது. இதை அவர் 1930 ஆம் ஆண்டுகளில் கண்டுபிடித்தார். இதற்காக அவருக்கு நோபல் பரிசும் வழங்கப்பட்டது.


★ ★ ★

உலகிலேயே அதிக எண்ணிக்கையில் இஸ்லாமியர்கள் வாழும் நாடு இந்தோனேசியா. இருந்தாலும் இந்த நாட்டில் உள்ள பாலி என்ற தீவில் 5 சதவீதம் இஸ்லாமியர்கள் மட்டுமே வசிக்கின்றனர். மீதி உள்ள அனைவரும் இந்துக்களே. இங்குள்ளவர்கள் பாலி இந்துக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்து மத நம்பிக்கையும் பாலி பகுதியில் உள்ள நம்பிக்கையும் இணைந்து கடைப்பிடிக்கப்படுவதால் இந்த பெயர் வந்தது.

விடுகதை - விடைகள்! 1. தவளை 2. வெள்ளைப்பூண்டு 3. நகம் 4. சட்டை 5. புல்லாங்குழல்

# சிறுவர் சுடர்





### வரலாறு

அமெரிக்காவைச் சேர்ந்த உடற்பயிற்சி ஆசிரியர் வில்லியம் மார்கன் 1800 ஆம் ஆண்டின் இறுதியில் கைப்பந்து விளையாட்டை கண்டுபிடித்தார். சர்வதேச கைப்பந்து அமைப்பு சார்பில் 1949 ஆம் ஆண்டு முதல் ஆண்களுக்கான உலக சம்பியன் போட்டிகளை நடத்தி வருகிறது. பின்னர் 3 ஆண்டுகள் கழித்து பெண்களுக்கான உலக சம்பியன் போட்டிகள் தொடங்கின. 1964 டோக்யோ ஒலிம்பிக்போட்டியில் இருந்து கைப்பந்து போட்டிகளும் இடம்பெறத் தொடங்கின.

### விதிமுறைகள்

18 மீற்றர் நீளம் 9 மீற்றர் அகலம் கொண்ட உள்ளரங்க மைதானத்தில் கைப்பந்து ஆட்டம் நடைபெறுகிறது. இந்த மைதானம் வலை ஒன்றின் மூலம் சமமாக பிரிக்கப்பட்டு இருக்கும். ஆண்கள் போட்டியின் போது வலையின் உயரம் 2.43 மீற்றர் ஆகவும், பெண்களுக்கான போட்டியின் போது இதன் உயரம் 2.24 மீற்றர் ஆகவும் இருக்கும்.

ஒரு அணியில் தலா 6 பேர் இருப்பார்கள். பெரும்பாலும் வலையின் அருகே 3 பேர் நின்று பந்து தனது பகுதிக்கு வராமல் தடுப்பார்கள். ஒவ்வொரு அணியும் தங்கள் பகுதிக்குள் வரும் பந்தை 3 முறை மட்டுமே தொட முடியும். அதற்குள் எதிர் அணியின் பகுதிக்கு அனுப்பி விட வேண்டும்.

கை விரல்களை பயன்படுத்தி தான் பந்தை தடுக்க வேண்டும், அடிக்க வேண்டும். சில நேரங்களில் கையின் முன் பகுதியை பயன்படுத்துவதும் உண்டு.


எதிர் அணியின் தரைப்பகுதியை பந்து தொட்டு விட்டால் ஒரு வெற்றி புள்ளி அளிக்கப்படும். 25 புள்ளிகள் வரை ஒரு ஆட்டம் நடைபெறும். 3 அல்லது 5 ஆட்டங்களில் எந்த அணி அதிக வெற்றி பெறுகிறதோ அந்த அணி வெற்றி பெற்ற அணியாக கருதப்படும்.

[illegible] ஆட்டமும் ஒலிம்பிக் பந்தயமாகும். இது திறந்த வெளியில் நடைபெறும் போட்டியாகும்.

கைப் பந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்மனத்திற்குத் தொடர்ந்து கட்டளை இடுங்கள்



உங்களுக்குத் தேவையானதெல்லாம் கிடைத்தால் உங்களுக்கு என்ன லாபம்?

நீங்கள் விரும்பியபடி ஆவதால் என்ன பயன்?

உங்கள் வாழ்க்கையின் இலட்சியங்களை அடைந்தால் என்ன பலன்?

இவை உங்களுக்குத் தேவை என்றால் அதற்கான விலையைக் கொடுக்கத்தான் வேண்டும்.

உங்கள் வாழ்க்கையின் இலக்குப் பற்றிய கட்டளைகளைத் திரும்பத் திரும்ப தொடர்ந்து அழுத்தமான, பரவசமான மனக்காட்சிகளாகப் பதியச் செய்து, வார்த்தைகளாலும் கட்டளை இடுங்கள்.

*திரும்பத் திரும்ப தொடர்ச்சியாய்க் கொடுக்கும் கட்டளைகளே வெற்றிக்கு அடிப்படை.*

தொடர்ந்து செய்ய வேண்டும் என்பது அழுத்திச் சொல்லத்தான். வேறு எந்த எண்ணமும் இல்லாத போது இதைச் செய்ய வேண்டும்.

*உங்கள் வாழ்க்கையின் இலட்சியங்களுக்குத் தேவையான கட்டளையை மூன்று முதல் ஆறு சொற்களுக்குள் அமைத்துக் கொள்ளுங்கள்.*

உதாரணமாகச் செல்வம் வேண்டும் என்றால் இலட்சாதிபதி ஆக வேண்டும் என்று சக்தி வாய்ந்த சிறு சொற் தொடரைக் கட்டளை ஆக்குங்கள்.

இதனால் இரண்டு நொடி தான் கட்டளை.

தொடர்ந்து ஒவ்வொரு நாளும் இரண்டு நொடிக் கட்டளைகளை உள் மனத்தில் எப்படிப் பதியச் செய்வது என்பதை இப்போது பார்க்கலாம்.

உங்கள் வேலைக்கு இடையே கிடைக்கும் இடைவேளையின் போது இதைச் செய்ய வேண்டும்.

உடற் பயிற்சி செய்யும் போது கட்டளை இட்டுக் கொண்டே இருக்கலாம். ஒரு நாளைக்கு இருபது நிமிஷம் பயிற்சி செய்கிறீர்கள் என்றால் இரண்டு நொடிக் கட்டளையை அறுநூறு தடவை சொல்ல முடியும்.

உடையணியும் போது, குளிக்கும் போது, முகச்சவரம் செய்யும் போது இப்படி எப்போதெல்லாம் மனத்துக்கு வேலையில்லையோ அப்போதெல்லாம் கட்டளை இட்டுக் கொண்டே இருக்கிறேன்.

நீங்கள் எப்படிப்பட்ட வேலையில் இருந்தாலும், பயண நேரம், காத்திருக்கும் நேரம் போன்ற பல இடைவேளைகளில் ஆயிரக் கணக்கான கட்டளைகளை இட முடியும். மனக் கூர்மை இல்லாத நபர்களானாலும் நூற்றுக்கணக்கான கட்டளைகளைப் பிறப்பிக்க முடியும்.

உங்கள் கட்டளைகளைப் பொறுத்து உங்கள் மனம் வாய்ப்புகளை ஏற்படுத்தும். அப்போது சந்தர்ப்பங்களையும், நிலைகளையும் தொடர்புகளையும் பயன்படுத்தி, உங்கள் இலட்சியத்தை சாதித்துக் கொள்ள வேண்டும்.

இதைச் செய்தால் எதிர்பார்த்தது கிடைக்கும்.

உங்கள் வாழ்வில் அற்புதமான ஆச்சரியமான நிகழ்ச்சிகள் நிகழும்.

*கமராவைத் திறக்காமல் படம் எடுக்க முடியுமா?*

கமராவை திறக்காவிட்டால் படம் எப்படிப் பதிவாகும்?

உங்கள் மனத்தைத் திறக்காவிட்டால் மனக் காட்சிகள் எப்படி ஏற்படும்?

எவற்றைக் காண்கிறீர்களோ அவற்றை மனம் படம் எடுக்கிறது. அது காட்சிகளாக வாழ்க்கையின் பகுதியாகிறது.


ஆகவே உங்களுக்குத் தேவையானவற்றைக் காண்பதற்கு முயற்சி செய்யுங்கள். உங்கள் மனம் படம் எடுக்கப்படும்.

1. __பொருள்கள்:__

பணக்காரனாக வேண்டும் என்றால் செல்வம் தொடர்புடைய பணம், காசு, ரூபாய் நோட்டு போன்றவற்றைக் காணுங்கள். விலை உயர்ந்த கார்கள், பங்களாக்கள், நல்ல சாமான்கள், நகைகள் போன்ற செல்வம் பற்றிய படங்களைப் புத்தகங்களில் இருந்து வெட்டி ஒரு நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி வைக்கவும். இந்த நோட்டுப் புத்தகத்தை அடிக்கடி கண்ணில் படும்படி பிரித்து வைத்துக் கொள்ளுங்கள். இப்படிப்பட்ட பொருள்களை நீங்கள் வாங்கி மற்றவர்களுக்கு எப்படி உதவலாம் என்று கற்பனை செய்யுங்கள்.

2. __தொடர்புடைய செயல்கள்:__

உங்கள் வங்கிக் கணக்கில் பணம் கட்டுவதாகக் கற்பனை செய்யுங்கள். கம்பெனி பங்குச் சீட்டுகள் வாங்குவது போல நினைத்துப் பாருங்கள். அந்த பங்குகளின் விலையைப் பத்திரிகையில் பார்த்து கற்பனையில் எவ்வளவு பணம்



கூடி இருக்கிறது என்று பார்க்கவும். நிதி சம்பந்தப்பட்ட பத்திரிகைகளைப் படியுங்கள். இப்படி திரவியம், பணம், செல்வம் பற்றி மனத்தைத் திறந்து வைக்கவும்.

3. __தனிப்பட்டவருடன் தொடர்பு:__

வங்கி, நிதி நிறுவனங்களின் தலைவர்களுடன் தொடர்பு கொள்வது போலக் கற்பனை செய்யவும். முடிந்தால் நேரில் சென்று பார்க்கவும். உங்கள் வங்கி முகாமையாளரை அணுகுங்கள். உங்கள் ஊரில் உள்ள பணக்கார வியாபாரிகளைச் சந்திக்கவும். முடிந்தால், அவர்களுடன் கூடிப் பேசவும். மற்றவர்களுக்கு உதவும் பொதுச் சங்கத்தில் சேர்ந்து கூடிப் பழகவும்.

இதுபோல நூற்றுக் கணக்கான வழிகளில் உங்கள் மனத்தை பணக்கார வாழ்விற்குத் திறந்துவிட முடியும்.

உங்கள் தேவைக்கு சம்பந்தப்பட்ட பொருள், செயல், மக்கள் பற்றி தீவிரமாய் மனக் காட்சிகளை உண்டாக்க வேண்டும்.

இவ்வாறு மனத்தை அந்தக் காட்சிகளைக் கண்டு அனுபவிக்கப் பழக்க வேண்டும்.

கமரா உடன் படம் எடுத்து விடும். ஆனால் தொடர்ந்து பார்த்தால் தான் மனத்தில் பதியும்.

உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான இலட்சியத்தின் தொடர்பான பொருள்கள், செயல்கள், மக்கள், கருத்துகள், எண்ணங்கள், திட்டங்கள் போன்ற அது சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் மனம் காண்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

உங்கள் இலட்சியத்திற்குச் சம்பந்தப்பட்டதாக உங்கள் காட்சிகள் இருக்க வேண்டும். தோல்வி பற்றிய காட்சிகளைக் காணக் கூடாது. அப்போது வெற்றி எப்படிக் கிடைக்கும்?

உங்கள் செயல்கள், படிப்பு, நட்பு போன்றவற்றை நல்ல முறையில் தேர்ந்தெடுத்து மனக் காட்சி ஆக்க வேண்டும்.

"மனக் காட்சிகள் அல்லது விருப்பங்கள் தீர்மானமாக இருந்தால் விளைவுகளையும், நிலைமைகளையும் கட்டுப்படுத்தும்" என்கிறார் உலகப் புகழ் பெற்ற மனோதத்துவ நிபுணர் டொக்டர் நார்மன் வின்சன்ட் பீல்.

அதை நம்புங்கள்.

உங்களுக்குத் தேவையானதைப் பெற ஏன் மனக் காட்சி தேவை?

உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டி உங்களைக் கவர உங்கள் உள் மனம் மனக்காட்சியை நோக்குகிறது.

வெற்றிக்கு உங்களைத் தயாராக்குவது இந்த அத்தியாயம்.

வெற்றியைக் கண்டால் மேலும் பல சந்தர்ப்பங்கள் உண்டாகும். வேகமாக வெற்றியடையுங்கள்.

வெற்றி பெற்ற மனிதர்களுடன் தொடர்பு கொண்டு வேகமாக உழைக்கவும்.

'வெற்றியும் பணமும் உள்ள இடத்திற்குச் செல்லவும்' என்று நிதி பற்றிய ஆலோசகர்கள் சொல்கிறார்கள்.

வெற்றி வாய்ப்புகளுக்கு நேரில் செல்லுங்கள்; தபால், தந்தி, டெலிபோன் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

மனத்தைத் திறந்துவிட எழுந்து வெளியே சென்று தேவையானவற்றோடு சேர வேண்டும்.

தோல்வி பற்றிய பயம் வராமல் இருக்க நூற்றுக்கணக்கான வெற்றி வாய்ப்புக்களைப் படம் பிடியுங்கள். மனத் திரைப்படத்தில் தொடர்ந்து காட்சிகளை ஓட விட்டு உள் மனத்தை உந்தச் செய்யுங்கள்.

அடிக்கடி நூற்றுக்கணக்கான மனக் காட்சிகளைப் படமாக அளித்தால் தான் உள்மனம் செயலாற்றும். எப்போதாவது கொடுக்கும் காட்சிக்கு உள் மனம் மதிப்பளிக்காது.

தீர்மானம் இல்லாமல் உதாசீனமாய் இருந்தால் உங்கள் உள் மனதும் வாழ்க்கை இலட்சியத்திற்கு வழி காட்டாது.

ஆகவே, எந்த வெற்றி வாய்ப்பையும் மனத்திற்குத் திறந்து விடுங்கள். வாழ்க்கை இலட்சியத்திற்குத் தொடர்ந்து வாய்ப்புகளை உற்பத்தி செய்ய வேண்டும்.

அந்த நிலை மனத்தோடு உள் மனத்திற்குத் தொடர்பு உண்டு. உள் மனத்தை வெற்றி வாய்ப்புகளால் நிரப்புங்கள். உங்கள் வாழ்வு வளமானதாக இருக்கும்.

*வெற்றியின் படிகள் தொடரும்....*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாப்பிடும் போது என்ன நடக்கிறது......

தினமும் நாம் சாப்பிடுகிறோம். ஒரு நாள் முழுவதும் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். சாப்பிடாமல் நாம் உயிர்வாழ முடியாது என்பது நமக்கு மறுப்பதில்லை.

ஆனால் சாப்பிடும்போது செய்ய வேண்டிய சில விஷயங்களைத்தான் நாம் மறந்து விடுகிறோம்.

சிலர் மிக வேகமாகச் சாப்பிடுவார்கள். சிலர் மிக மெதுவாகச் சாப்பிடுவார்கள். எப்படி சாப்பிட்டாலும் சரி, வாயில் போடப்பட்ட உணவு நன்றாகக் கடிக்கப்பட்டு மெல்லப்பட்டு, கலைக்கப்பட்டு, கூழாக்கப்பட்டு. அதன் பின் வயிற்றுக்குள் போக வேண்டும். அது தான் முக்கியம். அப்படி அப்படியே விழுங்கக் கூடாது.

சிலர் இரண்டே நிமிடத்தில் சாப்பிட்டு முடித்து விடுவர். இன்னும் சிலர் ஒவ்வொரு வேளையும் சுமார் முக்கால் மணி நேரம் சாப்பிடுவர். அதுவும் தவறு, இதுவும் தவறு.

சைவ உணவை சீக்கிரம் சாப்பிட்டு முடித்து விடலாம். அசைவ உணவு சாப்பிடும்போது கொஞ்சம் தாமதமாகத்தான் செய்யும். குறைந்தது சுமார் 5 நிமிடங்களும், கூடுதலாக சுமார் பதினைந்து நிமிடங்களும் சாப்பிடுவதற்காக ஒதுக்குவது நல்லது. ஐந்து நிமிடங்களுக்கு குறைவாகச் சாப்பிடுவதும் நல்லதல்ல. பதினைந்து நிமிடங்களுக்கு அதிகமாகச் சாப்பிட்டுக் கொண்டிருப்பதும் நல்லதல்ல.

எந்த உணவை நாம் சாப்பிட்டாலும் கடித்து சுவைத்து அதன்பின்தான் விழுங்க வேண்டும். கோழி விழுங்குவதைப்போல வாயில் போடும் உணவை அப்படியே விழுங்கக்கூடாது. நிறையபேர் இப்படித் தான் சாப்பிடுகிறார்கள்.

ஒரு முழு நெல்லை கோழி அப்படியே விழுங்குகிறது. கோழிக்கு பற்கள் கிடையாது. அதனால் மெல்லுவது கிடையாது. அதற்கு அலகு அதாவது மூக்கும், நாக்கும்தான் உள்ளது. கோழி உண்ணும் உணவு அதனுடைய அலகாலும், வயிற்றினாலும் தான் சிறுசிறு துண்டுகளாகவும் கூழாகவும் ஆக்கப்படுகிறது. அந்த பச்சை நெல்லை ஜீரணிக்க வைக்கக்கூடிய அளவுக்கு மிக சக்தியான என்சைம் மற்றும் உணவு மண்டல அமைப்பு கோழிக்கு இருக்கிறது. நமக்கு அப்படி இல்லை.

நாம் சாப்பிடும் உணவு ஜீரணம் ஆவதற்கு வாயிலுள்ள உமிழ் நீர் முக்கிய பங்கு வகிக்கின்றது. மனிதனின் வாயின் இரண்டு பக்கங்களிலும் மூன்று ஜோடி உமிழ்நீர் சுரப்பிகள் இருக்கின்றன. அவையாவன. 1.பரோட்டிட சுரப்பி. 2.சப்மேண்டி புலார் சுரப்பி. 3.சப்லிங்குவல் சுரப்பி. இந்த மூன்று சுரப்பிகளிலிருந்தும் வரும் குழாய்கள் வாயினுள் வந்துதான் திறக்கின்றன.

பரோட்டிட் சுரப்பிதான் இந்த மூன்றில் மிகப்பெரியது. அடுத்ததாக உள்ள சப்மேண்டிபுலார் சுரப்பி தான் 70 சதவீத உமிழ்நீரை சுரக்கிறது. ஐந்து சதவீத உமிழ்நீர், மூன்றாவதாக உள்ள சப்லிங்குவல் சுரப்பியிலிருந்து சுரக்கின்றது.

உணவைப் பார்த்தவுடன், உணவை நினைத்தவுடன், உணவின் வாசனையை நுகர்ந்தவுடன் உமிழ்நீர் அதிகமாகச் சுரக்க ஆரம்பிக்கிறது. உமிழ்நீரில் மியூகஸ், புரோட்டீன், தாது உப்புக்கள் மற்றும் அமைலேஸ் என்கிற என்சைம் ஆகியவை இருக்கின்றன.


எல்லா நேரமும் நம்மை அறியாமலேயே நாம் வாயில் சுரக்கும் உமிழ்நீரை உள்ளே விழுங்கிக் கொண்டுதான் இருக்கிறோம். உமிழ்நீரிலுள்ள என்சைம் நாம் சாப்பிடும் உணவில் ரசாயன மாற்றங்களை வேகமாக ஏற்படுத்த உதவி செய்கிறது. இந்த என்சைம் இல்லாவிட்டால் நாம் சாப்பிடும் உணவு ஜீரணம் ஆகாது. அப்படியானால் நம் உடலிலுள்ள தசைகள், நரம்புகள், எலும்புகள் இவையெல்லாம் ஒழுங்காக வேலை செய்யாது. இவையெல்லாம் வேலை செய்யாவிட்டால் நம்மால் உயிர்வாழ முடியாது.

உமிழ்நீரிலுள்ள அமைலேஸ் என்கிற நொதி (என்சைம்) நாம் சாப்பிடும் உணவிலுள்ள ஸ்டார்ச் மற்றும் கார்போஹைட்ரேட்டை மால்டோஸ் என்கிற சர்க்கரைப் பொருளாக மாற்றுவதற்கு உதவி செய்கிறது. உணவு சிறுகுடலில் போய்ச் சேரும்போது இன்னும் அதிகமாக அமைலேஸ் என்சைம் கணையத்திலிருந்து சுரக்கப்பட்டு உணவில் மிச்சம் மீதியிருக்கும் ஸ்டார்ச்சையும், மால்டோசாக மாற்றிவிடுகிறது. மால்டோஸ் என்கிற இன்னொரு என்சைம் எல்லா மால்டோசையும் குளுக்கோசாக மாற்றிவிடுகிறது. இந்த குளுகோஸ்தான் கடைசியாக ரத்தத்தில் கலக்கிறது. என்னவென்று புரியவில்லையா? ஒன்றுமில்லை நாம் சாப்பிடும் உணவிலுள்ள சர்க்கரையை வாயிலுள்ள என்சைம் குளுகோசாக மாற்றி ரத்தத்தில் கலக்கச் செய்கிறது. அவ்வளவுதான்.

நமது உமிழ்நீரிலுள்ள மிசின் என்கிற பொருள் வாய் எப்பொழுதும் ஈரமாக இருக்கும்படி பார்த்துக் கொள்கிறது. அதேமாதிரி உமிழ் நீரிலுள்ள லைசோசைம் என்கிற பொருள் நாம் சாப்பிடும் உணவிலுள்ள கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை அழித்துவிடுகிறது.

வயிற்றுக்குள் போய் எல்லா உணவும் ஜீரணம் ஆகிவிடும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இது தவறு. உணவு வாயில் போடப்பட்டவுடன் உதடு, கன்னம், நாக்கு ஆகியவற்றிலுள்ள தசைகள் ஒன்று சேர்ந்து வாயினுள் போடப்பட்ட உணவை வாயினுள்ளேயே சிறிது நேரம் வைத்துக் கொண்டிருக்கும்படி செய்கிறது. அதே நேரத்தில் வாயிலுள்ள 3 உமிழ்நீர் சுரப்பிகள் சுரக்கும் திரவம் வாயில் போடப்பட்ட உணவுக் கவளத்தைச் சூழ்ந்து செரிமானத்திற்குத் தயாராகிறது. பற்களுக்கிடையில் மாட்டிய உணவு துண்டு துண்டாக வெட்டப்பட்டு பின்பக்கத்திலுள்ள பற்களால் மிகச்சிறிய துண்டுகளாக ஆக்கப்பட்டு விழுங்குவதற்கு ஏதுவாகத் தயாராகிறது.

நாக்கிலுள்ள சுவை நரம்புகள் நாக்கில் வந்து தொடும் உணவானது இனிப்பா, புளிப்பா, உப்பா, துவர்ப்பா என்பதைக் கண்டுபிடித்து அதற்குத் தேவையான சரியான என்சைம்களை சுரக்கச் செய்கிறது. நாக்கு இப்படியும் அப்படியும் புரளும்போது நாக்குக்கு இடையில் உணவுத் துண்டுகள் பாதி நிலையில் ஜீரணமாகி ஒரு உருண்டையாக ஆக்கப்பட்டு நாக்கு மூலமாகவே அந்த உணவு உருண்டை தொண்டைக்குள் தள்ளப்படுகிறது. தொண்டையிலிருந்து வயிற்றுக்குள் இறங்கிய உணவு அங்குள்ள 5 என்சைம்களுடன் சேர்ந்து மேற்கொண்டு ஜீரணமாகும் வேலையை ஆரம்பிக்கிறது.




வெற்றிலை, பாக்கு, புகையிலை, பான், ஜர்தா போன்றவற்றைத் தொடர்ந்து போடும் பழக்கமுள்ளவர்களுக்கு வாயினுள் வந்து முடியும் உமிழ் நீர் சுரப்பிகளின் குழாய் பாதிக்கப்பட்டு அடைபடும் வாய்ப்பு அதிகம். எனவேதான் இந்த கைய பழக்கம் உள்ளவர்களுக்கு சரிவர உமிழ்நீர் சுரக்காமல் அடிக்கடி தொண்டை காய்ந்து போய் விடுகிறது.

இதேபோல் பற்களை இழந்த ஒருவருக்கு சரியான சத்தான உணவு கிடைக்காது. காரணம் அவரால் நன்றாக மெல்ல முடியாததால் அவர் சாப்பிடும் உணவு சரியான முறையில் ஜீரணம் ஆகாமல் உணவிலுள்ள சத்தான பொருட்கள் உடலுக்குப் போய்ச் சேருவதில்லை. எனவே இவர்களுக்குத் தேக ஆரோக்கியமும் குறைந்துவிடும்.

ஆகவே சாப்பிடுங்கள். நன்றாகச் சாப்பிடுங்கள். உணவை நன்கு மென்று சாப்பிடுங்கள். உணவை அள்ளிப்போட்டு வயிற்றின் உள்ளே தள்ளுவதற்கு மட்டும்தான் வாய் உபயோகப்படுகிறது என்று தவறாக நினைத்து விடாதீர்கள். சாப்பிடும் உணவு ஜீரணம் ஆகும் வேலை வாயிலேயே ஆரம்பித்துவிடுகிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.

# ஸோரியாசிஸ் எனும் சரும நோய்



ஸோரியாசிஸ் (psoriasis) இது ஒரு சரும நோய். இந்த நோய் வம்சா வழியாக வரும் வாய்ப்பு அதிகம். தலையில் உள்ள பொடுகு அத்துடன் நின்று விடுவதில்லை, சிலர் பொடுகுதானே எனக் கருதிக் கொண்டு மருந்து எடுத்துக்கொள்ளாமல் அலட்சியம் காட்டி வருவது வழக்கம். இது கூடாது.

பொடுகுக்கும் ஸோரியாஸிசுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. பொடுகு தலை அடி சருமத்தை பாதிக்காது. அதனுடைய துகள்கள் மிகவும் சன்னமாகவும், தூசி போலவும் இருக்கும்.

இதற்கு மாறாக ஸோரியாஸிஸ் ஏற்பட்டால் தலைமுடியில் உள்ள அடிச்சருமம் பாதிப்படையும், சருமம் தடிப்பாகவும், ரோஸ் நிறத்திலும் இருக்கும். இதில் வரும் துகள்கள் பருமனாகவும், மெழுகிலிருந்து உருகி வருவதை உரித்தாற் போல் காணப்படும்.

பொடுகுக்கு உரிய ஷெம்பூவோ அல்லது மருந்தையோ உபயோகித்தால் அது குணமாகி விடும். ஆனால் ஸோரியாஸிசை ஸ்டீராய்டு கொண்ட திரவங்கள் மற்றும் Salicylix அமிலம் கொண்ட ஷெம்புகளால் மட்டுமே குறைக்க இயலும்.

நடுத்தர வயதினருக்கு கை மூட்டு, கால் மூட்டு மற்றும் பிருஷ்டம் ஆகிய இடங்களில் தோல் பகுதியில் ஸோரியாஸிஸ் ஏற்பட வாய்ப்பு உண்டு. இந்த இடங்களில் தோல் தடிப்பாகி பெரிய துகள்களாகி உதிரும். இரத்த அழுத்தத்தைக் குறைக்கப் பயன்படுத்தும் மாத்திரைகள் மற்றும் வலியைக் குறைக்கப் பயன்படுத்தும் சில மாத்திரைகள் ஸோரியாஸிஸை அதிகப்படுத்தும். அடிபடும் இடங்களிலும் இந்த நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

**குணப்படுத்தும் முறை :**

உடம்பிற்கு ஸ்டீராய்ட் ஆயின்மெண்ட் உபயோகப்படுத்தலாம். இது வீரியம் குறைந்ததாக இருக்க வேண்டும். Liquid Paraffin மற்றும் மீன் எண்ணெய்களை உபயோகித்து சருமத்தை வழவழ என வைத்துக் கொள்ளலாம். இதைத் தடுப்பதற்கு என்றே உள்ள மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனையுடன் எடுத்துக் கொள்ளலாம்.

# ஒற்றைத் தலைவலிக்குக் காரணம்

ஒற்றைத் தலைவலி வரக் காரணம் அதிகமான மன அழுத்தமே ஆகும். ஒற்றைத் தலைவலி உள்ளவர்கள் பிறந்த கஷ்டப்படுவதும், வளைந்து கொடுக்காமலும் இருப்பார்கள். மேலும் ஒருவரது தலைவலியானது வயிறு மற்றும் பார்வை சம்பந்தப்பட்டது. எனவே அவற்றைச் சுத்தமாக வைத்திருப்பது முக்கியம்.

காரணம்: குறைவான சர்க்கரை அளவு, ஒவ்வாமை, சில மருந்துகளை அதிகமாக எடுத்துக் கொள்வது, சத்துக் குறைபாடு, அதிகபடியான வேலை, சரியான தூக்கம் மற்றும் ஓய்வு இல்லாமை, அதிகப்படியான குடிப்பழக்கம், புகைப்பழக்கம் மற்றும் பாலுணர்வு என்பன.

அறிகுறிகள்: இடைவிடாத தலைவலி, வாந்தி, உடல்வலி, கண் மங்குதல், வயிறு சம்பந்தமான பிரச்சினைகள்.

தீர்வுகள்: பொதுவாக ஒற்றைத் தலைவலி பல காரணங்களால் ஏற்படுகிறது. எனவே எது தங்களுக்குப் பொருந்துகிறது எனக் கண்டறிந்து தீர்வுகளை செயல்படுத்தவும்.

எலுமிச்சை தோலை நன்கு காய வைத்து அரைத்து நெற்றியில் பற்றுப் போடுவது நல்ல பலனை தரும். நன்கு கனிந்த திராட்சைகளை நன்கு அரைத்து தண்ணீர் சேர்க்காமல் அருந்த வேண்டும்.

கோஸ் இலைகளை நன்கு நசுக்கி ஒரு சுத்தமான துணியில் கட்டி தலையின் மீது ஒத்தடம் தரலாம். கோஸ் உலர்ந்து விட்டால் புதிதாக இலைகளை நசுக்கி துணியில் கட்டவும். குளிர்ந்த நீரை துண்டில் நனைத்து தலையிலும் கழுத்திலும் கட்டவும் பின் கைகளையும் கால்களையும் சுடு நீரில் விடவும். இந்த முறை ஒற்றை தலைவலிக்கு நல்ல பலனைத் தரும்.

இலவங்கப்பட்டை சுக்குப் பொடியை முறையே தேக்கரண்டி தண்ணீரில் கலந்து இந்தக் கலவையை நெற்றியில் விட ஒற்றைத் தலைவலி தீரும். அல்லது 12 பாதாம் பருப்புகளை தலைவலியின் போது சாப்பிடலாம்.

200மிலி. பசலைக்கீரைச் சாறு மற்றும் 300மிலி. கேரட் சாறு, 100மிலி. பீட்ரூட் சாறு, 100மிலி. வெள்ளரிச்சாறு மற்றும் 300 மிலி. கேரட் சாறு இந்த இரண்டு கலவைகளில் ஒன்றை தினமும் பருகவேண்டும்.

செய்ய வேண்டியவை:

1) விட்டமின் பி நிறைந்த அதிகமுள்ள உணவு வகைகளை முழுகோதுமை, ஈஸ்ட், பச்சைஇலைகளுடன் கூடிய காய்கறிகள், சூரியகாந்தி விதைகள், கொட்டைகள், தக்காளி, காய், மீன் போன்றவற்றை உண்ண வேண்டும்.

2) 2-3 நாட்களுக்கு வெறும் பழச்சாறு மற்றும் காய்கறிச்சாறை (கேரட், கீரை, வெள்ளரிக்காய்) மட்டும் உண்ணலாம். நீர் அதிகமாக பருகவேண்டும்.

3. தூங்குவதற்கு முன் சூடான நீரால் குளிப்பது நல்லது. தலையில் இறுக்கமான துணியோ அல்லது பட்டையோ கட்டிக் கொள்ள வேண்டும்.


தவிர்க்க வேண்டியவை

1. புகைத்தல் மற்றும் மது இவை தலைவலியைத் தூண்டக் கூடியவை. வெயிலில் அலைவது, காரமான உணவு வகைகள், வயிறு முட்ட சாப்பிடுதல், தேவையில்லாத மனஅழுத்தம் மற்றும் கவலை ஆகியவற்றையும் தவிர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டை உருவாக்குபவள் தாய்தான்!



பள்ளிப் படிப்பு என்பது வீட்டிலிருந்துதான் தொடங்குகிறது. (சூடாரத்னா என்ற கவனட கவியின் கூற்றுப்படி) ஒரு தகப்பன் தன் குழந்தையைப் படிக்க வைக்க வில்லை என்றால், அக் குழந்தையை அவர் கொலை செய்வதாக ஆகும். தந்தை தன் குழந்தையைக் குறிப்பிட்ட வயதிற்குப் பின் பள்ளியில் சேர்க்க வேண்டும். ஆனால் சரியாகச் சொல்ல வேண்டுமாயின் வீடுதான் ஒரு குழந்தையின் முதல் பள்ளிக்கூடம் எனலாம்.

கடவுள் ஒவ்வொருவருக்காகவும் வந்து நம்மை காப்பார் என்று எண்ணக் கூடாது. கடவுள் ஒவ்வொரு குழந்தைக்கும் தாயைக் கொடுத்துள்ளார். பெண்கள் தான் கடவுளின் முழுப் படைப்பு என்று சொல்லலாம். தாய்தான் பொறுமையின் பிறப்பிடம். அவளது தியாகம் பூமாதேவியின் தியாகத்திற்கு ஒப்பானதாகும். தாய் தான் வீட்டை உருவாக்குபவள். தாயின் முயற்சிதான் மனிதனை முழு ஆளுமை உடையவனாகவும் தனித்துவம் பெற்றவனாகவும் மாற்றிவிடுகிறது. நீங்கள் ஒரு தாயைப் பற்றி தெரிந்துகொள்ள, அவளது குழந்தைகளைப் பாருங்கள் என்பது பழமொழி. தாயானவள் குழந்தையின் எதிர்கால வாழ்வுக்கு அடிக்கல் நடுபவள் எனலாம். (சத்ரபதி சிவாஜி இந்து சாம்ராஜ்யத்தை உருவாக்க அவர் தாயார் ஜீஜாபாயின் ஊக்கம்தான் ஒரு காரணம் ஆகும்.) ஒரு பெண்ணின் (மகளின்) நல்ல நண்பர் என்பவர் அவரது தாயார் மட்டுமே என்றால் மிகையாகாது.

குழந்தையின் சுற்றுப்புறச் சூழலின் முதல் எதிர்வினை அதன் தாயாரிடம் இருந்துதான் தொடங்குகிறது. தாய்தான் குழந்தைகளின் மனதில் என்றும் அழி யாத எண்ணங்களை உருவாக்குகிறார். தனது குழந்தைகளை தனது விருப்பத் திற்கேற்ப மாற்றியமைத்து வருகிறாள். (வித்யாவதி தேவி பிரிட்டிஷாரை எதிர்த்து தன் மகன் பகத்சிங் போராட எண்ணினாள். அதன்படி நடந்தது) தனது மகன் ஒரு கதாநாயகனாக வர வேண்டும்; வாழ வேண்டும் என்று எண்ணினாள். கோழை போல் நடக்கக் கூடாது என்று விரும்பினாள். அது நடந்தது. தாய் ஸ்தானம் என்பது அவளது குணங்களைக் கொண்டதுதான். இது ஒரு கலை. இதில் எல்லாப் பெண் களும் சிறந்து விளங்க வேண்டும். தாயும் தாய்மை ஸ்தானமும் பெண்களுக்கான ஆடல் சார்ந்த பாடலாகும். தாய் என்பவள் சுயநலம் கொண்டவள் அல்ல. அவள் தன் குழந்தைகள் யாவரும் தனது உரிமைக்குரியவர் என்று நினைப்பதில்லை. தன் குழந்தைகளை அன்புடன் நேசிக்கிறாள். ஆனால் அவர்கள் தனது உரிமை என்று எப்போதும் சொன்னதில்லை.

குழந்தையை சொந்தம் கொண்டாடுவது நன் தற்காப்பிற்கில்லை. குழந்தை களை உலகிற்கு கொண்டு வர பெண்களுக்கு கடவுள் சந்தர்ப்பமளித்தார். கலீல் ஜிப்ரான் என்ற பெரிய மதத் தலைவர் கூற்றுப்படி உங்களது குழந்தைகள் உங்க ளுடையதல்ல. மனிதப் பிறவி எடுத்து வாழ விரும்பிய ஜீவன்களின் மறு உருவம் தான் அவை.

தாய் தன் குழந்தை மீது அபரிமிதமான அன்பைப் பொழிகிறாள். எனவே, வீடுதான் குழந்தையின் முதல் பள்ளியாகும். வீட்டை நிர்வகிப்பவர்தான் குழந்தை யின் முதல் ஆசிரியர்.

குழந்தைகளுக்குச் சுதந்திரம் கொடுத்து அவர்கள் புதியனவற்றையும் பல விஷயங்களையும் கற்றுக்கொள்ள வாய்ப்பு வசதிகள் செய்து தர வேண்டும். தாங்கள் குழந்தைகள் எந்த வேலையையும் செய்யும் திறன் படைத்தவர்களாக இருக்க வேண்டும்.

அவர்கள் சுதந்திரத்தை அனுபவிக்கட்டும். அவர்களுக்குத் துணையாகவும் பாதுகாவலர்களாகவும், அவர்களது புதிய முயற்சியில் உடன் இருக்க வேண்டும்.

குழந்தைகளின் செயல்பாட்டில் குறுக்கீடு செய்ய வேண்டாம். அவர்களுக்கு சுதந்திரம் கொடுப்பது அவர்களை தவறான வழிக்கு அழைத்துச் சென்றுவிடும் என்று எண்ண வேண்டாம். இது அப்படியல்ல. அவர்களைக் கட்டுப்படுத்தினால் அவர்கள் அடம்பிடிப்பார்கள்.

தாய் - குழந்தை சொந்தம் கருப்பறையிலேயே தொடங்கி விடுகிறது. இங்கு நல்ல அரவணைப்பு அன்பு நிலவும். உண்மையில் குழந்தைகளுக்குச் சுதந்திரம் கொடுப் பதால் குழந்தைகள் கெட்டுவிடலாம் என்ற பொருள் இல்லை. கெட்ட குழந்தை தாயைப் போல செயல்படும் என்பதும் உண்மையன்று.

சிறு குழந்தைகளின் வளர்ச்சியில் வீடு பெரும் பங்கு வகிக்கிறது. வீட்டிற்கு அடுத்த நிலையில் வருவது பள்ளியாகும். வீடு என்பது ஒரு பரிசாகும். ஆனால் பள்ளி என்பது அவ்வாறு அமையாது. பள்ளி என்பது நாம் தேர்வு செய்த இடம். உறுதியாக, பள்ளியில்தான் குழந்தைகள் தங்கள் திறமைகளைக் கண்டு விருத்தி செய்யவும் வெளிக்காட்டவும் முடியும்.

தாய்மார்கள், பெரியவர்களுக்கு மரியாதை தர கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் கீழ்படிந்து நடக்கவும் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண் டும்.

குழந்தைகளுக்குப் பொதுவான இடங்களில் பயன்படுத்த வேண்டிய வார்த்தை கள் பற்றியும் கற்றுத் தர வேண்டும்.

# அழகு என்பது....



அழகு என்ற சொல் தமிழுக்கு அழகு சேர்க்கும் சொல்லாகும். இயற்கை அழகு, மனை அழகு, உடல் அழகு என அழகை வர்ணித்துக் கொண்டே போகலாம். அது போல மனிதர்களில் அழகு என்பது புற அழகை வைத்து நிர்ணயிக்கப் படுகிறது. காரணம் உடலின் அகத் துள்ளே பூரிப்பு உண்டானால் அது புற அழகில் மெருகேறிவிடும்.

அதுபோல அகத்துள் பாதிப்பு உண்டானால் அது முகத்தில் தெரிய வரும். இதைத்தான் நம் முன்னோர் கள் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள்.

முக அழகையும், உடலையும் பேணிப் பாதுகாப்பது அவசியம். உடல் தான் மனித உயிரின் அஸ்திவாரம் ஆகும். ஒவ்வொருவரும் செயற்கை அழகை விட இயற்கை அழகை மேம்படுத்துவதே மிகச் சிறந்தது.

செயற்கை அழகு சாதனப் பொருட்கள் உடலுக்கு ஒவ்வாமையை ஏற்படுத் தக் கூடியவை. ஆனால் மூலிகைப் பொருட்களால் ஆன அழகு சாதனப் பொருட்களே மேனியை மெருகூட்டும்.

**வறண்ட சருமம்**

சிலருக்கு உடலில் ஒவ்வாமை காரணமாக சருமத்தில் பாதிப்பு உண்டாகி வறட்சி ஏற்படும். இதனால் புற அழகு குறைந்து காணப்படுவார்கள். இந்தச் சரும வறட்சியை நீக்க,

பயிற்ற மாவு 50 கிராம், மஞ்சள் தூள் 5 கிராம், எலுமிச்சம் பழச்சாறு 50 மிலி. இவற்றைச் சேர்த்து நன்றாகக் கலக்கி சருமம் எங்கும் பூசி 10 நிமிடம் ஊற வைத்துப் பின் இளம் சூடான நீரில் குளித்து வரவேண்டும். இக்காலங்களில் குளியல் சோப்புகளை பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது. மேற்கண்ட முறை வாரம் இருமுறையாவது செய்து வந்தால், வறட்சி நீங்கி சருமம் பள பளக்கும்.

**குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு வயிற்றில் விழும் கோடுகள் மறைய**

கருவுற்றிருக்கும்போது வயிறு பருக்கும். குழந்தை பிறந்த பின் வயிற்றில் சிலருக்கு வெள்ளையாகக் கோடுகள் விழும். இக்கோடுகள் மறைய,

கற்றாழை 1 துண்டு, பப்பாளி 1 துண்டு, சந்தன பவுடர் 1 கரண்டி, பன்னீர் 1 கரண்டி, பாதாம் எண்ணெய் 1 கரண்டி, அல்லது தேங்காய் எண்ணெய். பாலாடை - 1 கரண்டி

சேர்த்து நன்றாக கலக்கி இரவு படுக்கைக்கு செல்லும் முன் வயிற்றில் பூசி வர வேண்டும். காலை எழுந்தவுடன் இளம் சூடான நீரில் குளிக்க வேண்டும். இவ்வாறு வாரம் இருமுறை செய்து வந்தால் வயிற்றில் உண்டான கோடுகள் மறையும்.

**வெயிலில் செல்லும்போது ஏற்படும் கருமை மாற**

வெயிலில் அலைந்து வேலை செய்யும் ஆண், பெண் இருபாலருக்கும் உடம் பில் வெயில் படும் இடங்களில் கருமை உண்டாகும். உடல் எண்ணெய் பசை போல் காணப்படும். இவர்கள்,

உருளைக்கிழங்கு சாறு 1 கரண்டி, சர்க்கரை 1 கரண்டி, எலுமிச்சம் பழச்சாறு 1 கரண்டி.

இவற்றை ஒன்றாக சேர்த்து குழைத்து கருமை உள்ள இடத்தில் பூசி 15 நிமிடம் கழித்து குளித்து வந்தால் கருமை நீங்கும்.

இளநீரை முகத்தில் தடவி வந்தால் சின்னம்மையினால் உண்டான வடுக்கள் விரைவில் மறையும்.


**முடி உதிர்தல், செம்பட்டை முடி மாற**

தேங்காய் எண்ணெய் 1 லிட்டர், நெல்லிக்காய் பொடி 10 கிராம், தான்றிக்காய் பொடி 10 கிராம், வெட்டிவேர் 10 கிராம், ரோஜா இதழ் காய்ந்தது 10 கிராம், மரு தாணிப் பொடி 10 கிராம், கறிவேப்பிலைப் பொடி 10 கிராம், கரிசலாங்கண்ணி பொடி 10 கிராம், செம்பருத்தி பொடி 10 கிராம், பதினா பொடி 10 கிராம், சந்தனப் பொடி 10 கிராம்

இவற்றை கலந்து கொதிக்க வைத்து15 நாட்கள் வெயிலில் காயவைத்து தலை யில் தேய்த்து வந்தால் முடி உதிர்தல் மாறி, பொடுகு நீங்கும், கேசம் கருமையடையும்.



# அரிசிமாரொட்டி



**தேவையான பொருட்கள் :**

அரிசி மாவு - 4 கப்
தேங்காய் துருவல் - 1 1/2 கப்
பச்சை மிளகாய்
நறுக்கியது - தேவையான அளவு
கொத்தமல்லி நறுக்கியது - 1 கப்
வெங்காயம் - நறுக்கியது - 1 1/2 கப்
சீரகம் - 2 தே.கரண்டி
கேரட் அல்லது அவரைக்காய்
அல்லது பீன்ஸ் - நறுக்கியது 1/2 கப்
சமையல் எண்ணெய் - 1/2 கப்
உப்பு - தேவையான அளவு

**செய்முறை :**

அரிசிமாவுடன் 1/2 கப் சமையல் எண்ணெய், தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், கொத்தமல்லி, வெங்காயம், சீரகம், உப்பு மற்றும் மேலே குறிப்பிட்ட காய்கறிகளில் ஒன்றைச் சேர்த்து சப்பாத்தி மாவைப் போல பிசைந்து கொள்ள வும்.

அதைச் சிறு சிறு உருண்டைகளாக்கி, தோசைக் கல்லின் மேல் அடை போன்று தட்டி எண்ணெய் ஊற்றி சுடவும்.

சுடும்போது, ரொட்டியின் நடுவில் சிறு சிறு துளைகள் போடவும். ரொட்டி நன்றாக வேக இது உதவும். இதை உங்களுக்கு விருப்பமான சட்னியுடன் சேர்த்துச் சாப்பிடவும்.

வெறும் அரிசி மாவுடன் உப்பு, துருவிய தேங்காயையும் சேர்த்து வெறும ரொட்டியாகவும் செய்யலாம்.

கோதுமை மாவையே நாம் ரொட்டி தயாரிப்பதற்குப் பயன்படுத்துகின்றோம். இவ்வாறு அரிசி மாவில் தயாரிக்கப்படும் ரொட்டி உடலுக்கும் ஆரோக்கிய மானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.ஜே.பிக்குள் உட்கட்சி மோதல் உச்சத்தில்...!


மோடி


அத்வானி


சுஷ்மா ஸ்வராஜ்

இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக்கட்சியின் எதிர்காலம் இனிமேல்தான் என்று கருதப்பட்டநிலையில் அக்கட்சிக்குள் உட்கட்சி மோதல் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. ஆட்சியிலுள்ள காங்கிரசின் செல்வாக்கு சரிவடைந்து வருவதால் எதிர்வரும் 2014 லோக்சபா தேர்தலில் காங்கிரசுக்கு மாற்றாக ஆட்சியமைக்கும் விதமாக பி.ஜே.பி. மேலெழும்பும் என்றே கருதப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்தக்கட்சியின் உட்கட்சி மோதல் கடந்த பலமாதங்களாக நீறுபூத்த நெருப்பாக இருந்து, கடந்தவாரம் மோதல்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. 1998 - 2004 காலப்பகுதியில் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது பிரதமர் பதவிக்கு ஒரே ஒரு தகுதிவாய்ந்த நபராக அவர் மட்டுமே கருதப்பட்டார். அத்வானி அவருக்கு இணையானவராக ஓரளவு இருந்தாலும் இவ்விருவருக்கும் அப்பால் பிரதமர் பதவிக்கு வேட்பாளர் அந்தஸ்துக்குரியவர் என வேறு எவரும் கருதப்பட்டிருக்கவில்லை.

மேலும், கட்சி ஆட்சியில் இருந்ததால் பல மூத்த தலைவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் ஏதோ ஒரு பதவி வழங்கப்பட்டு திருப்தியடையச் செய்யப்பட்டிருந்ததால் எவரும் கலகம் விளைவிக்க முன்வராமல் தவிர்க்கப்பட்டது. இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. இது இருவிதமாக ஏற்பட்டுள்ளது எனலாம்.

வாஜ்பாய் ஓய்வுபெற்று இரண்டாம் நிலைத்தலைவர்கள் முன்னணிக்கு வந்துள்ளனர். இரண்டாவதாக கட்சி மிக நீண்ட காலமாக ஆட்சியில் இல்லாது எதிர்க்கட்சி வரிசையில் வெறுங்கைகளாக இருந்துவருகிறது. இதனால் கட்சியின் பல இரண்டாம் மூன்றாம் மட்டத் தலைவர்களின் பதவிப்பசிக்கு இரைபோடமுடியாத நிலை உள்ளது. கட்சிக்குள் பதவிகளைப் பெறுவதற்கு பலரும் முண்டியடிக்கும் சிக்கல் ஏற்பட இதுவே பிரதான காரணமாகும்.

கடந்த வாரம் மும்பையில் நடந்த கட்சியின் தேசிய செயற்குழுவில் இந்த முரண்பாடுகள் வெட்டவெளிச்சமாகத் தெரிந்தன. கட்சியின் தலைவர் நிதின் கட்காரிக்கு தொடர்ச்சியாக இரண்டு பதவிக்காலங்களுக்குத் தலைவர் பதவி வழங்கும் விதமாக கட்சியின் யாப்பைத் திருத்தவேண்டியிருந்தது. இதற்கு அத்வானி, சுஷ்மா ஸ்வராஜ் இருவரும் இணங்கி இருந்தாலும் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி இதற்கு முட்டுக்கட்டையாக இருந்துவந்தார்.

பி.ஜே.பியின் பிரதமர் வேட்பாளர் எனக் கருதப்படும் மோடியின் இணக்கம் கட்காரி தலைவராவதற்கு அவசியமாகும். ஆனால், மோடியின் பரம வைரியாக கருதப்பட்ட சஞ்சய் ஜோஷியை கடந்த வருடம் கட்காரி பொதுச் செயலராக நியமித்ததுடன் அவர் உத்தரப்பிரதேச தேர்தலுக்கு கட்சியின் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். எரிச்சலடைந்த மோடி உத்தரப் பிரதேசத் தேர்தலில் பிரசாரம் செய்ய மறுத்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சஞ்சய் ஜோஷியை அகற்றினால் தான் கட்காரி பதவியில் தொடர அனுமதிப்பேன் என மோடி அடம்பிடித்து வந்தார். வேறு வழியின்றி தலைமைப்பதவியில் தான் நீடிக்க வேண்டும் என்ற ஆசையில் ஜோஷியை பலிக்கடாவாக்கி அவரை கட்காரி பதவி விலகவைத்தது மூத்த தலைவர்களான அத்வானியையும் சுஷ்மாவையும் அதிருப்தியடையச் செய்தது. இதன் விளைவாக கடந்த வாரம் தேசிய செயற்குழுவில் அத்வானியும் சுஷ்மாவும் எதிர்பாராதவிதமாக புறக்கணிப்பை வெளிக்காட்டினர்.

மோடி முக்கிய நபராகக் கூட்டத்தில் கலந்து கொண்டதும் கவனிக்கத்தக்கது. மோடி, அருண் ஜேட்லி, சுஷ்மா எனப் பெரும் பட்டாளமே பி.ஜே.பியின் பிரதமர் வேட்பாளராகும் கனவில் மிதப்பது கட்சியின் இமேஜை அதலபாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளது முக்கிய பாதிப்பாகும். மோடி பிரதமராக வேண்டுமென பி.ஜே.பியின் கடும்போக்குத் தரப்பினர் விரும்புகின்றனர். முஸ்லிம்களுக்கெதிரான முட்டாள்த் தனமான நிலைப்பாடுடைய பி.ஜே.பி.கட்சியினரே இவ்வாறு மோடியின் பிரதமர் கனவுக்கு அடிகால் அமைத்துத் தந்து வருபவர்களாவர். ஆனால், இந்தக் கடும்போக்கு பி.ஜே.பி.தொண்டர்களும் மூன்றாம் நான்காம் நிலைத்தலைவர்களும் நினைப்பதுபோல் மோடி பிரதமராவது என்பது அவ்வளவு இலேசான காரியமல்ல. அவர் பிரதமராவதை பி.ஜே.பியிலேயே பாதிப்பேர் விரும்பவில்லை. அவரை பி.ஜே.பி. பிரதமர் வேட்பாளராக அறிவித்தால் காங்கிரசை விரும்பாத முஸ்லிம்கள் கூட மோடியைத் தடுக்க வேறு வழியின்றி காங்கிரசுக்கு வாக்களிப்பர். சிறுபான்மை வாக்குகளை மொத்தமாக காங்கிரஸ் அள்ளிச் செல்லவே இது உதவும். இதுகாறும் பி.ஜே.பியிலிருந்து பிரதமராக வந்தவர் வாஜ்பாய் மட்டுமே. அவர் ஒரு போதும் முஸ்லிம்களுக்கெதிரான கடும்போக்குக் கொண்டவரல்ல.

பி.ஜே.பியிலிருந்து மிதவாத தலைவர் பிரதமர் வேட்பாளரானால் மட்டுமே காங்கிரசுக்கு முஸ்லிம் வாக்குகள் நூறு சதவீதம் செல்வதைத் தடுக்கலாம். மேலும் மிதவாதியை விட்டுவிட்டு மோடியை வேட்பாளராக்கினால் பி.ஜே.பியின் கூட்டணிக்கட்சிகள் பி.ஜே.பியை விட்டுத்தூரமாகிப் போய்விடும். பீஹார் முதல்வர் நிதிஷ்குமாரும் ஆந்திராவின் சந்திரபாபு நாயுடுவும் மோடியை பிரதமராக ஆதரிக்கவே மாட்டார்கள்.

ஒரிசாவின் முதல்வர் நவீன் பட்நாயக்கும் இந்தநிலைப்பாட்டிலேயே உள்ளார். எனவே மோடியை பிரதமராக்குவது ஆனை [illegible] விட சிரமமான காரியமாகும். இந்த இலட்சணத்தில் பி.ஜே.பிக்குள் மோடியின் கை ஓங்குவது நல்லதல்ல என்பதை அத்வானியும் சுஷ்மாவும் நன்கறிவர். பிரதமர் பதவிக்கு மோடியுடன் மோத சுஷ்மா தயாராகி வருவதையே அவரது நகர்வுகள் காட்டுகின்றன. அத்வானியுடன் ஒப்பிட வாஜ்பாய் எப்படி மிதவாதியோ மோடியுடன் ஒப்பிட சுஷ்மா மிதவாதியே ஆவார்.

அத்வானி கடைசிவரை பிரதமராக முடியாது போனமைக்கு மோடி போன்று கடும்போக்கு இந்துவாதத்தைப் பின்பற்றியதே காரணம் என்பது சொல்லாமலே விளங்கும். இத்தனைக்கும் அத்வானியா மோடியா கொடிய கொலைகாரன் என இந்திய முஸ்லிம்களிடம் கேட்டால் "மோடியே கொலைகாரன்" என சகலரும் தயங்காமல் பதிலளிப்பர். அத்வானியே பிரதமராக முடியவில்லை; அவரை விட முஸ்லிம்களை அதிகம் கொன்ற மோடியாவது பிரதமராவதாவது.

இலங்கை போன்ற ஜனநாயகமற்ற நாடுகளில் சிறுபான்மையினரை எவர் அதிகம் கொல்கிறாரோ அவர் நாட்டின் தலைவராவார். இனவாதிகளான சம்பிக்க ரணவக்கவும் விமல் வீரவன்சவும் நிச்சயம் ஒருநாள் இலங்கையின் ஜனாதிபதியாக ஆகுவார்கள். ஆனால் இந்தியா போன்ற பக்குவப்பட்ட ஒரு ஜனநாயகத்தில் சிறுபான்மையினரை வதைபடுவதோ கொல்வதோ பிரதமர் பதவியைப் பெறாதபடி செய்துவிடும். அந்தளவுக்கு ஜனநாயகம் கட்டி அமைக்கப்பட்டிருக்கிறது என்ற விடயம் நரேந்திர மோடிக்குத் தெரியாததல்ல. அவருமே கூட பிரதமர் பதவியைப் பெற முஸ்லிம்களின் நண்பனாக நடிக்கத் தயார்தான்.

ஆனால், அவரது புகழ் இந்துக்களிடையே வானளாவி உயரக் காரணமான அவரது முஸ்லிம் எதிர்ப்புவெறியையே அவரது ஆதரவாளர்கள் அவரிடம் தொடர்ந்தும் எதிர்பார்ப்பார்கள் என்பது நிச்சயம். அதுவே அவரது அங்கீகாரம். அதை உதறி மோடி பிரதமராகிவிடமுடியாது. எனவே நடைமுறைசாத்தியமற்ற "மோடியைப் பிரதமராக்கு" என்ற கோஷத்தை எதிர்க்க சுஷ்மா ஸ்வராஜ் மட்டுமல்ல நேர வழியில் தலைமைக்கு வந்த அத்வானியுமே இன்று எதிர்க்கத்தலைப்பட்டுள்ளார்.

அதன் வெளிப்பாடே கடந்த வார மும்பை பி.ஜே.பி.தேசிய செயற்குழுவுக்கு அத்வானியும் சுஷ்மாவும் மட்டம் போட்டமையாகும். சுஷ்மா ஸ்வராஜ் பிரதமர் பதவியைப் பிடிக்க வாஜ்பாயின் அதே தந்திரத்தைக் கையாண்டு வருகிறார். ஒரு மிதவாதி என்ற போர்வைக்குள்ளேயே அவரது [illegible] பி.ஜே.பியின் கூட்டணிக் கட்சிகளும் கண்ணை மூடிக்கொண்டு சுஷ்மாவை பிரதமராக்கத் தயாராகவே உள்ளன. இங்கே மற்றொரு சுவாரஸ்யமான விடயம் யாதெனில் தன்னை பிரதமராக விடாது தடுக்க சுஷ்மா மீது ஆத்திரம் காட்ட சுஷ்மாவுக்கு எதிராக அருண் ஜேட்லியை பிரதமராக்க மோடி இணங்கலாம். லோக்சபா எதிர்க்கட்சித் தலைவராக சுஷ்மாவும் ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவராக அருண் ஜேட்லியும் தற்போது பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மோடிக்கு எதிர்ப்புக் காட்ட சுஷ்மாவும் அத்வானியும் பகிஷ்கரிப்புச் செய்தபோதும் அருண் ஜேட்லி ஜோராக கூட்டத்தில் ஆஜராகி தனது மோடி விசுவாசத்தைக் காண்பித்துக் கொண்டுள்ளார். ஒரு பிரதமர் பதவிக்கு இப்படி நான்கு ஐந்து பேர் பி.ஜே.பிக்குள் ஆசைப்படுவது கட்சியின் நற்பெயரை வெகுவாகவே பாதித்துவிட்டிருக்கிறது. ஒன்றுபட்டு முழு மூச்சாக காங்கிரசை எதிர்க்கவேண்டிய தருணத்தில் பி.ஜே.பியிலுள்ள பெரிசுகள் இப்படி தங்களுக்குள் அடித்துக் கொள்வதை திருவாளர் பொதுஜனம் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. வாஜ்பாய் யுகத்தில் அவர் மட்டுமே பிரதமர் பதவிக்கான பி.ஜே.பியின் ஒரே வேட்பாளராக இருந்தார். கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு பி.ஜே.பி. வந்துவிட்டதையே சமீப நிகழ்வுகள் காட்டி நிற்கின்றன.


மறுபுறத்தில் ஆளும் காங்கிரசின் தள்ளாட்டமும் உச்சக் கட்டமாக உள்ளது. அதைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிக்க வேண்டிய பி.ஜே.பியோ காங்கிரஸை விட பரிதாபநிலையில் உட்கட்சிப்பூசலில் ஊறித்திளைத்து நிற்கிறது. இந்தப்பின்னணியில் ஜெயலலிதா போன்றோர் இடையில் புகுந்து பிரதமர் பரிசைத் தட்டிச் செல்லமுடியாது சரிதான் எனும்படியே பி.ஜே.பியின் நிலை உள்ளது எனலாம். மோடி போன்றோர் தமது கட்சியின் சுஷ்மா பிரதமராவதைவிட ஜெயலலிதா பிரதமராவது தேவலாம் என்று நினைக்கவும் கூடும். ஒருபுறம் வலதுசாரி பி.ஜே.பியினதும் மறுபுறம் இடதுசாரிகளினதும் ஆதரவைப் பெறும் உன்னத நிலையில் சில மாதங்களுக்கு முன் ஜெயலலிதா இருந்தார்.


ஆனால், மாநில அளவில் கம்யூனிஸ்ட்களை ஜெயலலிதா எடுத்தெறிந்ததால் தேசிய அளவில் அவர்களின் ஆதரவை தார்மீக ரீதியில் இழந்துவிட்ட ஒருவராகவே இன்றைய ஜெயலலிதா காட்சியளிக்கிறார். எடுத்தெறிந்து நடக்கும் அரசியல் ஒருபோதும் உதவாது என்பதற்கு இது நல்ல சான்று. மோடி குஜராத் மாநிலத்தில் அசைக்க முடியாத தலைவரே தான். தமிழகத்தில் ஜெயலலிதாவும் அசைக்கமுடியாத நிலையில் தான் உள்ளார். ஆனால் அகில இந்தியாவின் பிரதமராவது என்பது குஜராத், தமிழகம் தாண்டி பலபடிகள் செல்லவேண்டி இருக்கும்.

அபிநீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருத்துவ விழிப்புணர்வு காலத்தின் தேவை!

இன்று மருத்துவத்துறை புதிய பாதை நோக்கி பயணிக்க ஆரம்பித்திருக்கின்றது. புதிய புதிய ஆய்வுகள், கண்டுபிடிப்புகள் உலகமெங்கும் நாள்தோறும் இடம்பெற்று வருகின்றன. ஆனால் அது தொடர்பான விழிப்புணர்வு எமது சமூகத்தின் மத்தியில் பூச்சியமாகவே உள்ளது. குறிப்பாக போரால் கட்டுண்டு போயிருந்த தமிழ் பிரதேசங்களில் இது பற்றிய விழிப்புணர்வுகள், கண்காட்சிகள், கருத்தரங்குகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன. மருத்துவம் சம்பந்தமான அறிவூட்டல்கள் இன்றைய சமூகத்திற்கு மிகவும் தேவைப்பாடான ஒன்றாக உள்ளது.

அந்த வகையில், இன்று பல்வேறுபட்ட காரணிகளாலும், அதனால் ஏற்பட்ட பக்க விளைவுகளாலும், பரவி வரும் பல்வேறு விதமான நோய்களுக்கு அப்பாவி மக்கள் பலியாகி வருகின்றனர். இனந்தெரியாத காய்ச்சல் என்ற ஒரே ஒரு அறிகுறியுடன் மக்களை பலியெடுக்கும் நோய்கள் இன்று வேகமாகப் பரவி வருகின்றன. போரின் கரங்கள் தேசத்தை மூடியிருந்ததால் ஏற்பட்டிருந்த காலத்தில் கந்தகப் புகையினாலும் விதவிதமான நோய் நோய்களும் அறிமுகமாகின. அத்தோடு இன்று ஏற்பட்டுள்ள வாகனப் பெருக்கம், புனரமைக்கப்படாத வீதிகள், கவனயீனத்தினால் விபத்துக்கள் ஏற்பட்டு குருதிப் பெருக்கினாலும் பல மரணங்கள் ஏற்படுகின்றன.

மருத்துவ விழிப்புணர்வின்மை காரணமாகவே பெரும்பாலான மரணங்கள் ஏற்படக் காரணமாகின்றது. மருத்துவம் தொடர்பான பொது அறிவு இல்லாமை. சாதாரண மக்கள் மத்தியில் பொதுவான நிலையே காணப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் அத்தகைய தவிர்க்க முடியுமான உயிரிழப்புகளைத் தடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு இன்றைய சூழலில் மருத்துவத்துறை சார்ந்தவர்களிடம் தங்கியுள்ளது.

அந்தவகையில், யாழ்.பல்கலைக்கழக மருத்துவப்பீடத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மருத்துவக் கண்காட்சி சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்திருக்கிறது. கடந்த வருடம் இக்கண்காட்சி யாழ்ப்பாண நகரத்தில் இருந்து பல கிலோ மீற்றர்கள் தொலைவில், சாதாரண மக்கள் செறிந்து வாழும் பிரதேசமான பருத்தித்துறையில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் வெகுசிறப்பாக இடம்பெற்றது.

இக்கண்காட்சியைப் பார்வையிட்ட அனைவரும் இக்கண்காட்சி புறநகர் பகுதியில் இடம்பெற்றதை வெகுவாகப் பாராட்டியிருந்தனர். இது மக்கள் சமூகத்தினருக்கு இலகுவாகச் சென்றடைவதாக பலர் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் இம்முறை இக்கண்காட்சி யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இடம்பெற்றது. புறநகர் பகுதிகளிலும் வன்னி போன்ற போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் இக்கண்காட்சியை நடாத்தியிருக்கலாமே என்ற கேள்வி அனைவர் மனதிலும் எழுந்தபோதிலும் அதிகபார்வையாளர்கள் கலந்து கொள்ள வசதியாக யாழ்.பல்கலைக்கழகம் விளங்கியதாலும் வசதிவாய்ப்புகள், கண்காட்சி ஒழுங்கமைப்புகள் பொருட்களின் பாதுகாப்பு, அவற்றை வாகனங்களில் கொண்டு திரிவதில் ஏற்படும் போக்குவரத்து பிரச்சினை போன்ற நியாயமான காரணங்களும் ஏற்பாட்டாளர்கள் மத்தியில் இருந்தன. இவ்வாறான சூழ்நிலை கடந்த 21 ஆம் திகதி மருத்துவபீடத்தில் ஆரம்பமாகி சுமார் ஏழு நாட்கள் பார்வையாளர்கள் மத்தியில் மருத்துவ அறிவை வளர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.


யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களால் நடத்தப்பட்ட இக்கண்காட்சி நவீன வசதிகளுடன் கூடிய காட்சிக் கூடங்களை நிறுவியும் உரிய விளக்க முறைகள் விழிப்புணர்வு தரும் காட்சிப் பொருட்களை உள்ளடக்கியும் மிகச் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருந்ததாக பார்வையாளர்கள் பலரும் தெரிவிக்கின்றனர்.

இக்கண்காட்சியைப் பொறுத்தவரையில் 10 காட்சிக் கூடங்களை உள்ளடக்கியிருந்தது. குருதிச் சுற்றோட்டத் தொகுதி, மைய நரம்புத் தொகுதி, சமிபாட்டுத் தொகுதி, சுவாசத் தொகுதி, சிறுநீர்த் தொகுதி, புற்றுநோயியல் தொகுதி, வெப்ப மண்டலவியல் தொகுதி, மகப்பேறு மற்றும் குழந்தை மருத்துவத் தொகுதி போன்ற காட்சிக் கூடங்கள் இவற்றில் முக்கிய இடம்பிடித்தன. இக்காட்சிக் கூடங்களில் விபரிக்கப்பட்ட விளக்கங்கள் பார்வையாளர்கள் மத்தியில் தெளிவையும் மருத்துவம் சம்பந்தமான விரிவான அறிவையும் ஏற்படுத்தியிருந்ததாக பார்வையாளர்கள் தெரிவித்தனர். அத்துடன் விபத்து மற்றும் குற்றங்கள் நடைபெறும் இடங்களில் பொதுமக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று வழிப்படுத்தல்களை ஒரு காட்சிக் கூடமாக நிறுவி அக்காட்சிக் கூடத்தில் அத்துறை சார்ந்த யாழ்.பொலிஸாரின் தடயவியல் புலனாய்வுப் பிரிவினர் நேரடியாக தமிழில் விளக்கமளித்தனர். அத்துடன் இக்கண்காட்சியில் இலவச மருத்துவப் பரிசோதனைகள் வழங்கப்பட்டமை பல பொதுமக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

போரால் மோசமாகப் பாதிக்கப்பட்டு பாரிய பின்னடைவைச் சந்தித்திருக்கும் தமிழ் பிரதேசங்களிலும் இத்தகைய மருத்துவக் கண்காட்சிகள் அவசர தேவைகளாகவுள்ளது.

ஆகவே, இத்தகைய விழிப்புணர்வு நடவடிக்கைகளை நகரப் பகுதிகளோடு நிறுத்திவிடாது வன்னி போன்ற போரால் பாதிக்கப்பட்ட மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் மேற்கொள்வது காலத்தின் தேவையாக உள்ளது. அத்துடன் கண்காட்சியுடன் மாத்திரம் நின்றுவிடாது பிரதேச வாரியாக தொற்று நோய்கள் முதலுதவிகள் சம்பந்தமான கருத்துக்கள் பொதுமக்களைச் சென்றடைவதை மருத்துவத்துறை சார்ந்தோர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே இன்றைய காலத்தின் தேவையாகும்.

ஜனநாயகன்







## விஜய் அன்டனியின் இசையில் ஈழத்துக் கவிஞரின் பாடல்!

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லரின் விசுவாசிகளும் துரோகிகளும்!



அடோல்ப ஹிட்லர், இரண்டாம் உலகப் போரைத் தொடங்கி வைத்து ஜெர்மானியர் அல்லாதவர்களை, குறிப்பாக யூதர், ஸ்லாவியர் மற்றும் கம்யூனிஸ்ட்களை லட்சக் கணக்கில் கொலை செய்ய உத்தரவிட்டவர். நாஜிக் கட்சியைத் தொடங்கி 1933 -இல் ஆட்சியைப் பிடித்தவர். முதலாம் உலகப்போரில் இளநிலை படைவீரனாகப் பணிபுரிந்தார். புரட்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு 1923 -இல் சிறைப் பிடிக்கப்பட்டார். தனது சுயசரிதையில் ஜெர்மன் இனத்தைப் பற்றி உயர்வாக மதிப்பிட்டு அவர்கள் பிறரை ஆளப்பிறந்தவர்கள் என்று கூறியுள்ளார். முதல் உலகப் போரின் விளைவாக ஜெர்மனி மீது திணிக்கப்பட்ட நிபந்தனைகளை உடைத்து ஆயுத உற்பத்தியை அதிகரித்தார். ரைன்லேண்ட், ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா, பிரான்ஸ், போலந்து, சோவியத் என்று அவரது ஆக்கிரமிப்புகள் தொடர்ந்தன. பேர்லினை சோவியத் படைகள் முற்று கையிட்டதைத் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்டார். இது தான் ஹிட்லரின் வரலாறு.

ஆனால், ஹிட்லருக்கு முதுகெலும்பாக இருந்து உழைத்த சில வீரர்களையும், அவருடனே இருந்து ஹிட்லருக்கே குழி பறிக்க முயன்ற சில துரோகிகளையும் பற்றியும் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

**போர்மென் (1900 – 1945) :**

ஹிட்லரின் செயலாளர். ஆரம்ப காலத்திலிருந்தே நாஜிக்கட்சியில் தீவிரமாகப் பங்கேற்று தேசிய அளவிலான பொறுப்புக்கு உயர்த்தப்பட்டவர். ஹிட்லரைச் சந்திப்பதற்கு இவரிடம் முன் அனுமதி பெற வேண்டும். ஹிட்லரின் பேரில் ராணுவத் தளபதிகளிடம் செல்வாக்கு செலுத்தியவர். இறுதிக் காலத்தில் ஹிட்லருடன் சுரங்க அறையில் இருந்தார். ஹிட்லர் தற்கொலைக்குப் பிறகு சோவியத்துடன் சமாதான முயற்சி மேற்கொண்டார். ஆனால் அதே நாளில் அவர் கொல்லப்பட்டார்.

**கோயபல்ஸ் (1897 – 1945) :**

ஹிட்லருக்கு நெருக்கமான நாஜிகளில் ஒருவர். கொள்கை பிரசார அமைச்சராக இருந்தார். இறுதி வரை தனது பிரசார உத்தியினால் நாசிப்



மார்டின் போர்மென்



கோயபல்ஸ்



கோயரிங்



ஹிம்லர்



கெய்டல்

படைக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியவர். பல பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டங்கள் பெற்றவர். கடைசிக் காலத்தில் சுரங்க அறையில் ஹிட்லருடன் இருந்தார். ஹிட்லரின் திருமணத்தில் ஒரு சாட்சியாகவும் இருந்தார். ஹிட்லர் தற்கொலை செய்து கொண்ட மறுநாள் தனது ஆறு குழந்தைகளுக்கு விஷம் கொடுத்துக் கொன்று விட்டு தன் மனைவியையும் சுட்டுவிட்டு தானும் சுட்டுக் கொண்டு இறந்து விட்டார். இறுதி வரை ஹிட்லரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தார். காலில் சிறிது ஊனம் இருந்ததால் ராணுவத்தில் பணிபுரியும் கனவு நனவாகாமல் கொள்கை பிரசாரப் பணியை மேற்கொண்டிருந்தார்.

**கோயரிங் (1893 – 1946) :**

நாஜிக்கட்சியில் தொடக்கத்திலேயே தன்னை இணைத்துக்கொண்டார். ஹிட்லர் ஆட்சிக்கு வந்தபிறகு பிரஷ்யாவின் உள்துறை அமைச்சரானார். ரகசிய போலீஸ் துறையை உருவாக்கினார். இரண்டாம் உலகப் போரின் போது லூப்ட்வாபே என்ற ஜெர்மன் விமானப் படையின் தலைவரானார். தற்பெருமையும் ஆடம்பரமும் நிறைந்தவர். ஹிட்லர் பிடிபட்டாலோ அல்லது இறந்து விட்டாலோ தான் ஜெர்மன் தலைவராகப் பொறுப்பேற்க விரும்புவதாக ஹிட்லருக்கே ஒரு செய்தி அனுப்பியிருந்தார். இதனால் எரிச்சலடைந்த ஹிட்லர் இவரைக் கைது செய்ய உத்தரவிட்டார். போருக்குப் பிறகு அமெரிக்கப் படையினரால் பிடிபட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். போர்க் குற்றங்களுக்கு தாமே பொறுப்பேற்பதாக துணிச்சலாகக் கூறினார். தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. அதற்கு முன்பே விஷத்தை விழுங்கி தற்கொலை செய்து கொண்டார்.

**ஹிம்லர் (1900 – 1945) :**

ஹிட்லருக்கு நெருக்கமான நாசித் தளபதி. எஸ்.எஸ். என்ற பாதுகாப்புப் படையின் தலைவர். எஸ். ஏ. என்ற சூறாவளிப் படையிலிருந்த ஹிட்லருக்கு எதிரானவர்களை சுமார் 1000 பேரைத் தீர்த்துக் கட்டியவர். உள்துறை அமைச்சராகவும் பதவி வகித்தார். மரண முகாம்களின் நடவடிக்கைகளை முன்னின்று நடத்தியவர். விஸ்டுலா படையின் கமாண்டராகவும் நியமிக்கப்பட்டார். நாஜிக் கொள்கையில் மிகுந்த பற்றுள்ளவர். ஹிட்லர் இவரைத் துரோகி என்று கூறியதைத் தொடர்ந்து மனமுடைந்து விட்டார். போருக்குப் பிறகு பிரிட்டிஷ் துருப்புகளால் பிடிபட்டு விசாரணைக்கு உட்படும் முன்பே விஷத்தை விழுங்கி தற்கொலை செய்து கொண்டார்.

**கெய்டல் (1882 – 1946) :**

ஜெர்மன் படைத் தளபதி. ஹிட்லர் இவரை நெருக்கமாக வைத்திருந்ததற்கு ஒரு காரணம் உண்டு. ஏன் என்று கேள்வி எழுப்பாமல் ஹிட்லரின் கட்டளையை அப்படியே நிறைவேற்றுவார். போருக்குப் பிறகு நியூரெம்பெர்க் விசாரணையில் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

**கடேரியன் (1888 – 1954) :**

ஜெர்மனியின் பன்சர் என்ற டாங்கிப் படை வெற்றிக்கு மூல காரணமாக இருந்தவர். டாங்கிகளை போரில் பயன்படுத்துவதைப் பற்றி 1937 -இல் ஒரு நூல் எழுதினார். போலந்து, பிரான்ஸ், சோவியத் ஆகிய பகுதிகளில் டாங்கிப் படையைத் திறமையாக செயல்படுத்தினார். தனது மேலதிகாரி குளுஜ் என்பவரின் கட்டளையை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஹிட்லரால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். மீண்டும் பதவியமர்த்தப்பட்டு முக்கிய பொறுப்பில் நியமிக்கப்பட்டார். துருப்புகளை நகர்த்துவதில் இவர் திறமையாகச் செயல்பட்ட போதிலும் ஹிட்லர் இவரது திட்டங்களை சில நேரங்களில் ஏற்கவில்லை. போர் முடிவுக்கு வரும் வேளையில் மீண்டும் ஒரு முறை பதவி நீக்கம் செய்யப்பட்டார். கமாண்டர் மட்டுமின்றி ஒரு சிந்தனையாளராகவும் இவர் இருந்தார்.

**ரீடர் (1891 – 1980) :**

ஜெர்மன் கடற்படைத் தலைவர். அட்லாண்டிக் பகுதியில் யு-போட்களின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர். ஹிட்லரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். தனக்குப் பிறகு ஜெர்மனியை ஆட்சி செய்யும் பொறுப்பை இவருக்கு ஹிட்லர் அளித்திருந்தார். போருக்குப் பிறகு நேசநாடுகளின் விசாரணைக் குழுவால் பத்தாண்டு சிறைத் தண்டனை அளிக்கப்பட்டார்.

**ஹால்டர் (1884 – 1971) :**

முதல் உலகப் போரின்போது பவேரியா அரண்மனையில் அதிகாரியாக இருந்தார். 1938 இல் ராணுவத் தளபதியாக ஹிட்லர் இவரை நியமித்தார். ஹிட்லரைப் பற்றி இவருக்கு நல்ல கருத்து கிடையாது. இருந்த போதிலும், போலந்து, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவற்றின் மீது போர்தொடுக்கும் திட்டத்தைத் தயார் செய்து கொடுத்தார். ஹிட்லரை வீழ்த்துவதற்கு பல சதிகளில் ஈடுபட்டவர். ஹிட்லரைக் கொல்ல சதி செய்த குற்றத்திற்காக 1944 -இல் பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட்டார். போருக்குப் பிறகு விடுவிக்கப்பட்டார். ஹிட்லருக்கு எதிரான சாட்சியாக மாறி நேச நாடுகளின் விசாரணையில் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தினார்.

மேலும், பவேரியாவில் ரோஜ்ப்படை அதிகாரியாக இருந்த ஜோடல் (1890-1940)

நாஜிக்களின் பாதுகாப்பு அதிகாரியாகயிருந்த வதை முகாம்களில் வைத்து யூதர்களை சித்திரவதை புரிந்ததில் முன்னணி வகித்த கால்டன் பிரன்னர் (1902-1946)

ஜெர்மன் படையின் திறமைவாய்ந்த அதிகாரியாக இருந்த கெஸல்ரிங் (1885-1960)

ஜெர்மனின் டாங்கிப்படை அதிகாரியாக இருந்த கிளைஸ்ட் (1881-1954)

ஜெர்மனியின் நான்காவது படையை வெற்றிகரமாக இயக்கிய குளுஜ் (1882-1944)

ஜெர்மனியின் யு-போட் கமாண்டர் நேசப்படையின் பல கப்பல்களை மூழ்கடித்த கிரீஷ்மர் (1912-1964)

போர்த்தளபாடங்களை உற்பத்தி செய்து கொடுத்த கொள்தக்ரூப் (1907-1967)

ஜெர்மனியப்படைகளைத் திட்டமிட்டு நகர்த்திய மான்ஸ்டைன் (1887-1973) ஹிட்லரின் நம்பிக்கையை அதிகம் பெற்றிருந்த கமாண்டர் மாடல் (1891-1945)

ஜெர்மன் கடற்படைக் கமாண்டர் ரேடர் (1876-1960)

ஜெர்மன் படைத்தலைவர் ருன்ஸ்டெட் (1875-1953)

தளபாட உற்பத்திக்கான அமைச்சர் ஸ்பியர் (1905-1944)

இராணுவ அதிகாரி ஸ்டாடென்பேர்க் (1907-1944)


ஹிட்லரின் வெளியுறவு அமைச்சர் ரிப்பன்ட்ராப் (1893-1946)

ஜெர்மன் கமாண்டர் ரோமல் (1891-1944) ஆகியோரும் இப்பட்டியலில் முக்கியமானவர்கள் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பச்சை குத்திய நயன்தாரா படும்பாடு!



அ.அகிலா,
கோண்டாவில்.
**கேள்வி:** தனது கையில் தாம் பச்சை குத்திக் கொண்டிருந்த பிரபுதேவாவின் பெயரை அழித்து விட நடிகை நயன்தாரா படாதபாடு படுகிறாராமே?
**பதில்:** தனது மனதிலிருந்தே பிரபுதேவாவின் நினைவை அழித்து விடத் தெரிந்தவருக்கு கையில் குத்தப்பட்டிருக்கும் பிரபுதேவாவின் பெயரை அழிக்கத் தெரியாதா என்ன?

சுகப்பிரமணியம்,
வெள்ளவத்தை.



**கேள்வி:** சிறைச்சாலை ஒரு குற்றவாளியை எந்த அளவுக்குத் திருத்தி அவனை மறுபடி புது மனிதனாக்கும்?
**பதில்:** நடைமுறையில் இன்று பாடசாலைகள் எல்லாம் ஒரு வகையில் சிறைக் கூடங்களாகவே இருக்கின்றன. சிறைக் கூடங்கள் இன்று குற்றவாளிகள் கூட்டுச் சேர்ந்து அடுத்த இலக்கை நிர்ணயிக்கும் இடங்களாகவல்லவா இருக்கின்றன.

ப.பேரானந்தா,
வவுனியா.
**கேள்வி:** போகிற போக்கைப் பார்த்தால் நடிகை ஹன்சிகா, குஷ்புவின் இடத்தைப் பிடித்து விடுவார் போல் தோன்றுகிறதே?
**பதில்:** உடல் எடையில் பிடித்து விடுவார் போலத் தான் தெரிகிறது.



ப.உதயகுமார்,
கொழும்பு-06.
**கேள்வி:** மனைவி சொல்லே மந்திரம் என்று வாழ்க்கை நடத்தும் ஆண்கள் குறித்து....
**பதில்:** மனைவியைப் 'பேய்'க்காட்டும் ஒரு தந்திரமாகவும் அது இருக்கக் கூடும்.

வே.நல்லதம்பி,
மட்டக்களப்பு.
**கேள்வி:** ஒரு ஆணுக்கு திருமணம் என்பது கொண்டாட்டமா? திண்டாட்டமா?
**பதில்:** கொள்ளும் வரை கொண்டாட்டம். கொண்டபின் தான் திண்டாட்டம் என்பதே யதார்த்தம்.

மு.தில்லைநாதன்,
திருகோணமலை.



**கேள்வி:** திருமண பந்தம் என்பது ஆண்களின் தலையெழுத்தா?
**பதில்:** நல்லாய் நொந்து போயுள்ளீர் போலத் தெரிகிறது. அது தான் நாரமும் குருவும் தலைவிதிப்படிதான் என்று சொன்ன வரும் அனுபவப்பட்டுத்தான சொல்லியிருப்பாரோ?


ம.வேல்நந்தன்,
பூநகரி.
**கேள்வி:** பித்தரே. நீர் அண்மையில படித்து ரசித்த 'ஜோக்' ஒன்று சொல்லுமேன்?
**பதில்:** மாதா கோயிலில் மணி அடிக்கும் பணியில் இளைஞன் ஒருவன் அமர்த்தப்பட்டான். சம்பள நாளன்று பற்றுச்சீட்டில் கையெழுத்துப் போடுமாறு கேட்கப்பட்டான் அவன். எனக்கு எழுத வாசிக்கத் தெரியாது என்றான் அவன். அதற்காக அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள்.



கொஞ்ச நாளில் அதே ஊரில் பெட்டிக் கடையொன்றை ஆரம்பித்த அவன், வியாபாரத்தில் படிப்படியாக முன்னேறி பணக்காரனாகி விட்டான். கையெழுத்துப் போடத் தெரியாத நீ எவ்வளவு பெரிய வியாபாரி ஆகிவிட்டாய். நீ மட்டும் படித்திருந்தால் பெரும் உச்சத்துக்குப் போயிருப்பாயல்லவா? என்று ஒரு நாள் அவனது நண்பரொருவர் கேட்டார்.
அப்படி எதுவும் ஆகியிருக்காது. நான் படித்திருந்தால், இப்போதும் கூட மாதா கோயிலில் வேளைக்கு வேளை மணி அடிப்பவனாகவே இருந்திருப்பேன் என்றான அவன் புன்னகையோடு.

ஓ.பஞ்சநாதன்,
வேலணை.
**கேள்வி:** ஒரு மனிதனது வெற்றி அவனது இரு கைகளில் தான் தங்கியிருப்பதாகச் சொல்கிறார்களே?
**பதில்:** இரு கைகள் உடைய எல்லோருமே வாழ்க்கையில் வெற்றியடைவதில்லையே? நம்பிக்கை என்ற மூன்றாவது கைதான் மனிதனுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தந்து வெற்றிபெற உதவுகிறது.

## சொற்சிலம்பம் போட்டி இல: 524



அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### மேலிருந்து கீழ்

01. மமதை
02. நீரப் பொருளிலிருந்து பிரித்து எடு
03. தகவல் கொண்டு வருபவன்
04. கத்திவகை
05. மிச்சம்
06. பல என்பதைக் குறிக்கும்
08. நூல்
11. இடம்
13. மடத்துக்குத் தலைவன்
15. ஒரு நட்சத்திரம்
16. வயிற்றைப் பிராண்டுவது
17. தோட்டப் பறவை
19. பிடி
20. தங்கம்

### இடமிருந்து வலம்

01. அபகீர்த்தி ஏற்படுத்தும் வசை
04. கிட்ட
07. கடினமான
08. பௌத்த சமயத்துக்கு வழிகாட்டி
09. சுகவீனம்
10. கரியில் உள்ள மூலகம்
12. இலாங்க
14. அழகு தேவதை
15. பூமியதிர்ச்சி
17. சுவாசத்துடன் தொடர்புடைய நோய்
18. புறாவுக்காகத் தன் உடலை அரிந்தவன்
19. ஆகாயத்தில் மிதப்பது
21. அதிகரிக்கும்
22. அரசன்

## சொற்சிலம்பம் போட்டி இல. 524

சொற்சிலம்பம் 524 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன் 24ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். சரியான விடைகளை எழுதியோரில் இருந்து அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
சுடர் ஒளி வாரம் இதழ் அலுவலகம்,
561, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 521 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.சாதகம், 02.தவறு, 03.கடுக்கன், 04.முயல், 05.குரு, 06.கும்பம், 08.உதவுதல், 10.குழி, 12.காது, 13.மிகமைல், 15.மகிதல், 16.மாதனி, 17.பன், 18.நாழிகை, 20.வானை, 22.கவி

**இடமிருந்து வலம்**

01.சாதகம், 04.முதுகு, 07.கவுடு, 08.உமருர், 09.சறுக்குதல், 11.கழிவு, 12.கால், 13.மின், 14.தாமு, 16.யான், 17.பல்லி, 19.தனவான், 21.துகழி, 23.விப்பனை, 24.மல்லிகை

## போட்டி இல. 521 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு**
ஸ்ரீ.பா.கௌசல்யா,
மே/பா. தில்லைநாதன் ஸ்ரீஞானவிகாஷ்,
கற்பகம் வீதி, பாண்டிருப்பு, கல்முனை.

**2 ஆம் பரிசு**
ப.காலமுநாதன்,
இல.16/1 கோணர் வீதி,
மட்டக்களப்பு.

**3 ஆம் பரிசு**
எஸ். முரளிதரன்,
இல.802/9.புதுமண்டபம் வீதி,
கொழும்பு-15

## பாராட்டுப் பெறுவோர்

(1) சு.வரர்ஸவர்தன்,
இல.176/10,ஜெம்பட்டாதெரு,
கொழும்பு-13.

(2) திரு.இ.வீரசிங்கம்,
இல-9/2, இராசதுரை வீதி,
வைரவபுளியங்குளம், வவுனியா.

(3) செல்வி அன்ரனி பாத்திமா,
இல. 112/02, மோகொட, கொலன்னாவை,
வெல்லம்பிட்டி,கொழும்பு.

(4) திருமதி. பா.செல்வராணி,
நூலகர், பெண்கள் கூட்டு விடுதி,
உள்வட்டவீதி, வவுனியா.

(5) அ.பவித்ரா,
B-1, அரசவிடுதி, சரவணா வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

(6) கோ.பிறேமாவதி,
கருவில் வீதி, உப்புக்குளம்,
ஊர்காவற்றுறை.

(7) அ.இ.பாக்கியராஜா,
இல.88/1பசல்ஸ் ஒழுங்கை,
கொழும்பு-06.

(8) திருமதி. எஸ். ஞானம்,
இல.11-5/1, சென்லோறன்ஸ் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-6.

(9) க.சூரியகுமாரன்,
இல.136, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(10) ப.சிவசூரியர் J.P,
ஆசிரியர், இல.17/2 பிரதான வீதி,
சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஜோதிடம் வென்றது



ஐபிஎல் 5 ஆவது தொடரின் இறுதியாட்டத்தில் கொல்கத்தா அணி அல்லது ராஜஸ்தான் அணியே கிண்ணத்தை வெல்லும் என ஜோதிடர்கள் கணித்திருந்தனர். கிரக ராசிப்படி கம்பிருக்கு தான் அதிக வாய்ப்புள்ளதாகவும் கூறியிருந்தனர்.

அத்துடன் அதிரடி வீரர்களும், சகலதுறை ஆட்டக்காரர்களுடனும் உள்ள மும்பை அணியும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் இம்முறை கிண்ணம் வெல்ல வாய்ப்பில்லை என மும்பை ஜோதிடர்கள் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஜோதிடர்களின் கணிப்பின்படி கம்பிர் தலைமையிலான கொல்கத்தா அணியே கிண்ணத்தை சுவீகரித்தது.

## இந்தியாவின் 'சுழல் புயல்' ஹர்பஜன் சிங் தன்னைப் பற்றி....




இந்தியாவின் 'சுழல் புயல்' ஹர்பஜன் சிங் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலிருந்து சில பகுதிகள்..

கே : மும்பை இந்தியன்ஸ் அணிக்குப் பிறகு உங்களுக்குப் பிடித்த ஐ.பி.எல். அணி?

ப : அப்படியெல்லாம் எதுவும் கிடையாது. முழுக்க முழுக்க மும்பை அணிதான்.

கே: நீங்கள் கிரிக்கெட் வீரர் ஆகாமல் இருந்தால் என்னவாகி இருப்பீர்கள்?

ப : கிரிக்கெட் இல்லாமல் என் வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஆனால் ஒருவேளை கிரிக்கெட் வீரனாக இல்லாவிட்டால், வேறு விளையாட்டில் பிரகாசித்திருப்பேன்.

கே: ஐ.பி.எல். அணி உரிமையாளர்களில் சினிமா நட்சத்திரங்களும் இருக்கிறார்கள். அவர்களில் எவரது படங்கள் உங்களுக்குப் பிடிக்கும்?

ப : ஷாருக்கான்தான். 'ரொமான்ஸ்' செய்வதில் அவர் கிங்.

கே: உங்களின் சொந்த ஊரான ஜலந்தர், மும்பை- இரண்டில் எது பிடிக்கும்?

ப : இதில் ஒப்பீட்டுக்கு இடமில்லை. சொந்த ஊர் போல வேறில்லை.

கே: நீங்கள் நடனம் ஆட விரும்பும் பஞ்சாப் பாடல்?

ப : குர்தாஸ் மான் பாடிய 'அப்னா பஞ்சாப் ஹோவ்' என்ற பாடல்.

கே: உங்களுக்கு பிடித்த சுற்றுலாத் தலம்?

ப : வெஸ்ட் இண்டீஸ்.

கே: நீங்கள் தவறாமல் கடைப்பிடிக்கும் உடற்பயிற்சி?

ப : 'ரீபோக் கிராஸ்பட்'டை நான் தவறாமல் மேற்கொள்கிறேன்.

கே: எப்போதும் உங்களுக்குப் பிடித்த படம்?

ப : படங்கள் பார்ப்பது எனக்கு ரொம்பப் பிடிக்கும். எனவே இந்த 'லிஸ்ட்' மிக நீளமானது. பட்டியலிட்டால் இடம் போதாது.

கே: என்ன சக்தியைப் பெற ஆசை?

ப : சிறகிருந்தால் நல்லது. அதன் மூலம் உலகை யெல்லாம் சுற்றி வருவேன்.

கே: நீங்கள் யாருக்கு நெருக்கம்?

ப : எனது குடும்பத்தினர், நண்பர்களுக்கு.

கே: நீங்கள் பார்க்க விரும்பும் விளையாட்டு?

ப : சிக்கலில் சிக்க வைக்கப் பார்க்கிறீங்களா? வேறென்ன, கிரிக்கெட்தான்.

கே: உங்கள் வாழ்வின் உச்சபட்சத் தருணம்?

ப : கடந்த ஆண்டு உலகக் கோப்பையை வென்றது. உலகக் கோப்பையை நான் கையில் ஏந்தியபோது எனது வாழ்நாள் கனவு நனவானது.

கே: உங்கள் வாழ்வின் மோசமான தருணம்?

ப : எங்கப்பா மறைந்தது.

## கொல்கொத்தா அணியின் வெற்றி ஊர்வலம்; 60 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்பு !

ஐபிஎல் 5 தொடரின் கோப்பை வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் வெற்றி ஊர்வலத்தில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிரிக்கெட் ரசிகர்கள் கலந்து கொண்டதால், கொல்கத்தாசாலைகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

ஐபிஎல் 5 தொடரின் இறுதிப் போட்டியில் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்று முதல் முறையாக கோப்பையை கைப்பற்றியுள்ளது. இதையடுத்து அணித்தலைவர் கம்பிர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு பாராட்டு விழா மேற்குவங்க மாநில முதல்வர் மமதா பானர்ஜி தலைமையில் நடத்தப்பட்டது.

இந்த பாராட்டு விழாவின் ஆரம்பத்தில் ஹவ்ரா சாலையில் ஆரம்பமாகிய வெற்றி ஊர்வலத்தில் அணித் தலைவர் கம்பிர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை சேர்ந்த வீரர்கள், பயிற்சியாளர்கள், அணியின் உரிமையாளர் ஷாருக்கான், மேற்வங்க முதல்வர் மமதா பானர்ஜி, மாநில அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெற்றி ஊர்வலத்திற்காக ஆயத்தம் செய்யப்பட்ட திறந்த பஸ் ஒன்றில் வீரர்கள் உலா வர, கிரிக்கெட் ரசிகர்கள் சாலை முழுவதும் குவிந்து ஆரவாரம் செய்தனர். இதனால் வாகனங்கள் மாற்று பாதையில் திருப்பி விடப்பட்டன.

மேலும் சாலை முழுவதும் இருந்த கிரிக்கெட் ரசிகர்கள் மேளம் தாளத்துடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வீரர்களை வரவேற்றனர். 5 கி.மீ. தூரம் கொண்ட வெற்றி ஊர்வலத்தில் சுமார் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிரிக்கெட் ரசிகர்கள் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தில் ரசிகர்கள் கைகளை தட்டியும், வீரர்களுக்கு கை கொடுத்தும் வாழ்த்து தெரிவித்தனர். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வீரர்கள் அவ்வப்போது ஐபிஎல் 5 கோப்பைக்கு முத்தம் கொடுத்து தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

வெற்றி ஊர்வலத்தில் வரும் வீரர்களை வரவேற்க ஈடன் கார்டன் மைதானத்தில் பிரபல பாடகர்களின் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. வீரர்கள் மற்றும் விஐபிக்களுக்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது.

கொல்கத்தா சாலைகளில் ஆங்காங்கே அணியின் வீரர்களுக்கு வரவேற்பு அளித்து தட்டிகள் வைக்கப் பட்டிருந்தது. மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி சாலையில் அமைச்சர்களுடன் வந்து வீரர்களை வரவேற்றார். அவருடன் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் வாசிம் அக்ரம் உடன் இருந்தார்.

ஈடன் கார்டன் மைதானத்திற்கு வந்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவர் கம்பிர் வீரர்களுடன் சேர்ந்து ஐபிஎல் 5 கோப்பையை, முதல்வர் மமதா பானர்ஜியிடம் கொடுத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அப்போது வீரர்களுக்கு மமதா பானர்ஜி பூ கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார். அமைச்சர்கள் சார்பில் வீரர்களுக்கு பொன்னாடை போர்த்தப்பட்டது.

## கம்பிர் சிறந்த தலைவர்; டோனி புகழாரம் !





கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவராக பதவி வகிக்கும் கம்பிர், என்னை விட தலைமைப் பொறுப்பில் சிறப்பாக செயல்படுகிறார் என்று சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது;

ஒரு தலைவரின் வெற்றி என்பது அவரது அணியை சார்ந்தது. இக்கட்டான நிலையில் உள்ளபோது அணியில் உள்ள வீரர்களின் செயல்பாடு முக்கியமானது. தலைமைப் பொறுப்பில் என்னை விட கௌதம் கம்பிர் சிறப்பாக செயல்படுகிறார். இதனால் நான் சிறப்பாக செயல்படவில்லை என்று கூறவில்லை. ஆடுகளத்தில் என்னை காட்டிலும் கம்பிர் சிறப்பாக செயல்படுகிறார்.

டுவென்டி20 போட்டி என்பது ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. எனவே நமக்கு கிடைக்கும் வாய்ப்புகளை தகுந்த முறையில் பயன்படுத்தி கொண்டால் மட்டுமே சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்த முடியும்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சாளர் சுனில் நரேனின் பந்துவீச்சை கணிப்பது மிகவும் கடினமானது. அவரது பந்து வலதுகை துடுப்பாட்ட வீரருக்கு சாதகமாக வீசப்படுகிறதா அல்லது வெளியே செல்கிறதா என்பதை எளிதில் கணிக்க முடிவதில்லை.

முரளி விஜய்யை முறையான வலைப் பயிற்சி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினேன். அதனை ஏற்றுக் கொண்ட அவர் பயிற்சிக்கு பிறகு அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். முரளி விஜய் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரர்.

தொடரின் ஆரம்பத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு அவர் தகுந்த ஆரம்பத்தை அளிக்கவில்லை. இதனால் அவருக்கு சில போட்டிகளில் ஓய்வு அளித்தோம் என்றார் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி.



ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நடிகர் ஷாருக்கானின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வெற்றி பெற்றால் 'நிர்வாண போஸ்' கொடுப்பதாக நடிகை பூனம் பாண்டே அறிவித்திருந்தார்.

இந்நிலையில் சென்னையில் நடைபெற்ற ஐ.பி.எல். இறுதிப்போட்டியில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை தோற்கடித்து 'கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி' வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

இதனால் இம்முறை தனது வாக்குறுதியை காப்பாற்றிய பூனம் பாண்டே டுவிட்டர் இணையத்தில் நிர்வாண போஸ் கொடுத்து இருக்கிறார். ஏற்கனவே ஒருமுறை இவ்வாறு வாக்குறுதி கொடுத்து ஏமாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிக்கெட் விற்று ரூ. 180 கோடி வசூலித்த ஐபிஎல்

5ஆவது ஐபிஎல் போட்டித் தொடரில் ரிக்கெட் விற்பனை மூலம் மட்டும் ரூ. 180 கோடி பணம் வசூலித்துள்ளது ஐபிஎல் நிர்வாகம். தொலைக்காட்சி மூலம் இந்தப் போட்டிகளை 16 கோடி பேர் பார்த்துள்ளனராம்.

கிரிக்கெட் என்றால் பணம், இந்திய கிரிக்கெட் என்றால் கோடான கோடி பணம், அதிலும் ஐபிஎல் என்றால் பண மழை என்றாகி விட்டது. உலகமே பார்த்து பொறாமைப்படும் அளவுக்கு காசு மழையில் புரண்டு கொண்டிருக்கிறது இந்திய கிரிக்கெட்.

பல சர்ச்சைகளையும் எதிர்கொள்ளத் தவறவில்லை ஐந்தாவது ஐபிஎல் தொடர். ஆனால் இதனால் ஐபிஎல்லுக்கு வர வேண்டிய வருவாயில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லையாம். காரணம், கிரிக்கெட் மீதான மக்களின் மோகம் அந்த அளவுக்கு இருப்பதால்.

டிவி ஒளிபரப்பு மூலம் 16 கோடி பேர் ஐபிஎல் போட்டிகளைப் கண்டு கழித்துள்ளனர்.

## இல்லறம் இனிக்க...



கூட்டுக்குடும்பங்கள் இன்றைக்கு அருகி வருகின்றன. ஒன்றாய் இருக்கும் குடும்பங்கள் சிதறுண்டு போவதற்குக் காரணம் நாம் பேசும் பேச்சும் நம் செயலும்தான். புதிதாகத் திருமணமான பெண்கள் கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்களுடன் எவ்வாறு பேசுவது என்பது பற்றி நிபுணர்கள் கூறும் ஆலோசனைகள் வருமாறு.

'பொடி லாங்விஜ்' என்பது நம்மைப் பற்றி பிறருக்கு உணர்த்தும் உன்னத மொழி. ஒருவரிடம் வார்த்தையால் நாம் பேசுவதற்கு முன்பே நம் கண், கை அசைவுகள், அமரும் விதம் போன்றவை நம்மைப் பற்றி அவரிடம் வெளிப்படுத்துகின்றன. இதனைத்தான் 'பொடி லாங்விஜ்' என்கின்றனர். புதிதாக திருமணமான பெண் அதிகம் பேசுவதை விட தன்னுடைய உடல்மொழிகளினாலேயே புகுந்த வீட்டு உறவுகளுடன் பிணைப்பை அதிகரிக்கலாம் என்கின்றனர் நிபுணர்கள்.

### புன்னகையுடன் பேசுங்கள்

புதிய இடம் புதிய உறவுகள் என திருமணமான பெண்கள் நிறைய புதியவைகளை சந்திக்க வேண்டியிருக்கும். யாராக இருந்தாலும் எதை சொல்வதாக இருந்தாலும் உங்கள் கைகளால் விரித்தபடி புன்னகை தவழ பேசுங்கள். 'பொடி லாங்விஜ்' எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்கே புரியும்!. நாம் மற்றவரிடம் பேசுவதற்கு முன்பே எங்கோ பார்த்துக் கொண்டு, நகத்தை கடித்துக் கொண்டு, முகத்தை கோபமாக வைத்துக் கொண்டு கைகளை கட்டிக் கொண்டு பேசிப் பாருங்கள். உங்கள் பேச்சைக் கேட்க ஆர்வமாக இருப்பவர்களும், ஆர்வம் இழந்து விடுவார்கள்.

### உறவுகளுடன் பிணைப்பு

புதிய உறவுகளுடன் பிணைப்பை அதிகரிக்க 'பொடி லாங்விஜ்' அவசியம். கணவர் வீட்டில் உள்ள பெரியவர்களுடனோ, அல்லது சிறியவர்களுடனோ கணவருடனோ அல்லது மாமியார், மாமனாருடனோ சரியான 'பொடி லாங்விஜ்' இல் பேசிப் பாருங்கள் நீங்கள் சொல்வதை அவர்கள் கண்டிப்பாக கேட்பார்கள்.

### குரலை உயர்த்த வேண்டாம்

நீங்கள் பேசுவதை மற்றவர் கேட்க வேண்டுமானால் அவர் முகத்தைப் பார்த்து பேசவும். நேராக அமர்ந்து அல்லது நின்று பேசவும். கூன் போட்டு அமர்ந்தால் மற்றவர் உங்களை சோம்பேறி என நினைக்கக்கூடும். மிகத்தொலைவிலிருந்து . மற்றவரோடு குரலை உயர்த்திப் பேசாதீர்கள் உங்கள் மீது தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். நகத்தையோ, பென்சில் / பேனா முனையையோ கடிப்பதை தவிர்க்கவும். அது உங்களை பயந்தவராக காட்டக்கூடும். பேசும்போது முடியை கோதிக் கொள்வதையோ அல்லது அடிக்கடி உடைகளை சரிப் படுத்துவதையோ தவிர்க்கவும். அது உங்களை நம்பிக்கையற்றவராகக் காட்டும்.

### கண்களைப் பார்த்து பேசுங்கள்

மற்றவரின் கண்களை நேராகப் பார்த்து பேசவும். அது உங்களை நேர்மையானவராகக் காட்டும். அதேபோல் மற்றவரிடம் பேசும்போது, கைகளை கட்டிக் கொள்ளாதீர்கள். அது உங்களை பலவீனமானவராக காட்டும். நம்பிக்கையோடு கூடிய புன்னகை, நீங்கள் சொல்வதை கேட்க விரும்பாதவரையும் கேட்கவைக்கும்.

### பரிவோடு பேசுங்கள்

வீட்டில் இருக்கும் தாத்தா, பாட்டி போன்ற பெரியவர்களிடம் பரிவோடு பேசுங்கள். அதே போல் குழந்தைகளோடு பேசும்போது, அருகில் அமர்ந்து பாசத்தோடு பேசவும். உங்கள் பேச்சை விளக்குவதற்கு, உங்கள் கைகளையும் பயன்படுத்தவும். சைகைகள் நீங்கள் சொல்வதை மேலும் விவரிக்கும்.

### ஈழ ஆதரவாளர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு

## விக்ரம் படத்திலிருந்து அசின் கழட்டப்பட்டார்



ஈழத் தமிழர்கள், ஈழ ஆதரவாளர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியதால் விக்ரம் நடிக்கும், ஷங்கர் இயக்கும் படத்திலிருந்து தூக்கப்பட்டார் அசின். அவருக்குப் பதில் பாணா காத்தாடி பட நாயகி சமந்தாவை ஒப்பந்தம் செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் போர் முடிந்து, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட பின்னர் இந்தியத் திரையுலகைச் சேர்ந்த பலரும் முண்டியடித்துக் கொண்டு இலங்கைக்கு வந்தனர். அத்தனை பேரையும் இலங்கை அரசு வரவேற்று விருந்துபசாரம் வைத்து அனுப்பினர். சல்மான் கான் முதல் பலரும் இதில் பங்குகொண்டனர். அவர்களில் ஒருவர் தான் அசின்.

சல்மானுடன் 'ரெடி' படத்தில் நடித்த அவர் அப்பட ஷூட்டிங் இலங்கையில் வைக்கப்பட்டதால் இங்கு வந்திருந்தனர். தமிழ்த் திரையுலகினர் யாரும் இலங்கைக்கு போகக் கூடாது என்று இங்குள்ள திரையுலக கூட்டமைப்பு உத்தரவிட்டபோதும் அதையும் மீறிப் போனார் அசின். இதற்கு கடும் கண்டனங்கள் எழுந்தன. ஆனால் அதை அசின் கண்டு கொள்ளவில்லை.

இந்த நிலையில் ஷங்கர் இயக்க, விக்ரம் நடிக்கவிருக்கும் புதிய படத்தில் அசினை நாயகியாகப் போவதாக தகவல்கள் வெளியாகின. இதற்கு ஈழ ஆதரவாளர்கள் கடும் கண்டனமும், எதிர்ப்பும் தெரிவித்தனர். ஷங்கர் வீட்டை முற்றுகையிடப் போவதாக இந்து மக்கள் கட்சியும் அறிவித்தது. இதையடுத்து தற்போது அசினை தூக்கி விட்டதாகவும், சமந்தா நாயகியாக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## இரத்ததானத்தை வலியுறுத்தி இப்படியும் ஊர்வலம்



லண்டனில், வரும் ஜூலையில் ஒலிம்பிக் போட்டி நடக்கவுள்ளது. போட்டி ஆரம்பித்து விட்டால், ஒட்டு மொத்த பிரிட்டன் மக்களின் கவனமும், அதில் சென்று விடும் என்பதால், பிரிட்டன் சுகாதார மையம், இப்போதே எச்சரிக்கை மணி அடித்துள்ளது. அந்த நேரத்தில், அபாய கட்டத்தில் இருக்கும் நோயாளிகளுக்கு, ரத்த தானம் செய்வதற்கு யாரும் முன்வர மாட்டார்கள். அப்போது வழக்கத்தை விட, 30 சதவீதம் அதிகம் ரத்தத்தை இருப்பு வைக்க வேண்டும். அதற்கு இப்போதே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்... என, சுகாதார மையம் கூறியது.

இந்த எச்சரிக்கை, லண்டனைச் சேர்ந்த சமூக ஆர்வலர்களின் காதுகளை எட்டி விட்டது போலும். உடனடியாக களத்தில் இறங்கினர். எட்டு பேர் கொண்ட ஒரு குழு, உள்ளாடைகளை மட்டும் அணிந்து, தங்கள் உடலில் வித்தியாசமான ஓவியத்தை வரைந்தனர். ரத்த நாளங்கள் மற்றும் இதயம் ஆகியவை, வெளியில் தெரிவது போன்ற ஓவியத்தை, தங்கள் உடலில் வரைந்து, தெற்கு லண்டனில், மிகவும் பிசியாக இருக்கும் தெருக்களில், ரத்த தானத்தை வலியுறுத்தி, விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தினர். இவர்களின் எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை. இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தை பார்த்து விட்டு, ஏராளமானோர் ரத்த தானம் செய்ய முன் வந்துள்ளனர்.

Study in GEORGIA
Transfer option available to Shenegen Countries Universities and Colleges
- Bachelor Degree in Nursing (BSN) - 4 years
- Bachelor of Business Administration (BBA) - 4 years
- Master of Business Administration (MBA) - 2 years
- Hospitality Management Certificate Program (HM) - 6 months
- Medicine (MD) - 6 years

Required Qualification - G.C.E. (O/L)
NO Need IELTS
Interview
Need Bank balance
Admission available
Fees: After completion of VISA
Further details contact
Sai Int'l Consultant Services
109/25, Gorakagaha Road, Borella, Colombo 08.
Tel : 0112 683005, 0725 687003
Email : info@saiconsultant.lk Web : www.saiconsultant.lk


Study in Lithuania
Visa Valid to travel Europe countries
Dear Student's
Lithuania College, one of the oldest academic institutions in Lithuania, Offers the following accredited programs of Study.
1. Administration of institutions & Enterprises
2. Applied Informatics
3. Business Management
4. Economics
5. Recreation & Tourism Management
6. Trade management
7. Constructions Business Management
8. Law
9. Accounting
intake June - July 2012
- Deadline for immigration - June 30th 2012
- Visa is Guaranteed
- Required qualifications - G.C.E. O/L Or G.C.E. A/L
- English 50% or IELTS
- Part time jobs after six months
- Pickup & Accommodation Services provided by our client in Lithuania

For Further details & Consultation contact:
Sai Int'l Consultant Services
109/25, Gorakagaha Road, Borella, Colombo 08.
Tel : 0112 683005, 0725 687003
e-mail : info@saiconsultant.lk
www.saiconsultant.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவில் உள்ள சில வீதியோர தொலைபேசி நிலையங்களை படத்தில் காணலாம்.










இரண்டாம் உலக யுத்தத்தில் பங்குபற்றிய அமெரிக்காவின் விமானத் தாங்கிக் கப்பல் தற்போது நியூயோக் நகரத்தில் மேற்குப் பகுதியில் மன்ஹாற்றன் எனும் பிரதேசத்திலுள்ள ஹட்சன் நதிக் கரைத் துறைமுகத்தில் தரித்து நிற்கும்போது....

# மயான விழா

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு கலாசாரம் உள்ளது. ஆனாலும், ஏதாவது ஒரு விஷயத்தில், ஒவ்வொரு நாட்டு கலாசாரங்களுக்கு இடையே, ஒரு ஒற்றுமை உள்ளது என்பது, ஆச்சரியமான விஷயம்தான். தமிழகத்தின் சில பகுதிகளில், மயான கொள்ளை என்ற ஒரு விழா நடப்பது, அனைவருக்கும் தெரிந்திருக்கும். குறிப்பிட்ட நாளில், இரவில் மயானத்துக்கு சென்று, ஆடு, கோழி போன்ற உயிரினங்களை பலி கொடுத்து, கலை ஆடி, அருள்வாக்கு கூறும் நிகழ்ச்சிகள் நடக்கும். இறந்தவர்களுக்கு பிடித்த 'பொருள்களை படையலிடும் நிகழ்வும் அன்றிரவு நடக்கும்.

இதேபோல் ஒரு விழா, ஆப்ரிக்க கண்டத்தின் தென் கிழக்கில் உள்ள மடகாஸ்கர் என்ற நாட்டிலும் நடக்கிறது. நம்ம ஊரைப் போல் இல்லாமல், இங்கு சற்று வித்தியாசமான நடைமுறை பின்பற்றப்படுகிறது. ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை, பமதிகானா என்ற பெயரில், ஒரு விழா நடத்தப்படுகிறது.

இந்த நாளில், இறந்தவர்களின் உறவினர்கள் அனைவரும், புத்தாடை அணிந்து, குடும்பத்துடன் கல்லறைத் தோட்டத்துக்கு செல்வர். இறந்தவர்களை புதைத்த இடங்களை தோண்டி, உடலை வெளியில் எடுத்து, அந்த உடலை, புதிய துணியால் சுற்றுவர். உடல்கள், எவ்வளவு மோசமான நிலையில் இருந்தாலும், அதைப் பற்றி இவர்கள் கவலைப்படுவது இல்லை.

இதன்பின், அந்த உடலை தூக்கி வைத்து, இசைக் கருவிகளில் ஒலி எழுப்பி, தாளத்துக்கு ஏற்ப, உற்சாகமாக நடனமாடுவர். விலங்குகளை பலியிட்டு, விருந்து சமைப்பர். அந்த உணவை, இறந்தவரின் உடலுக்கு முன் வைத்து, படையலிட்ட பின், அனைவரும் சாப்பிட்டு மகிழ்வர். மீண்டும் அந்த உடலை, அதே இடத்தில் புதைத்து விட்டு, கலைந்து சென்று விடுவர்.

மடகாஸ்கர் மக்களை பொறுத்த வரை, இறந்தவர்களின் உடல்களை, தங்களின் முன்னோர்களின் மறு வடிவமாக கருதுகின்றனர். முன்னோர்களை போற்றி வணங்கும் வகையில், ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை, இந்த விழாக்களை நடத்துகின்றனர். நீண்ட காலமாக பின்பற்றப்பட்டு வரும் இந்த நடைமுறைக்கு, தற்போது பரவலாக எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இறந்தவர்களின் உடல்களை தோண்டி வெளியில் எடுப்பது, மூடப் பழக்க வழக்கம் என்றும், இதற்காக ஏராளமான பணம் வீணடிக்கப்படுகிறது என்றும், ஒரு தரப்பினர் எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளனர். இந்த விழாவை நடத்துபவர்களோ, முன்னோர்களின் பெருமையை, இளைய தலை முறையினருக்கு நினைவுபடுத்தும் வகையில், இதைக் கொண்டாடி வருகிறோம். யார் நினைத்தாலும், இதை தடுக்க முடியாது... என, உறுதியுடன் கூறுகின்றனர்.




இந்திய மீன்பிடித் தொழில் அமைச்சகத்தின் மீன் வடிவக் கட்டிடம்

## சுவரோவிய வித்தகன் கெய்த் ஹாரிங்!

ஒப்பற்ற கலைஞனாகவும், சமூக ஆர்வலருமாக, அமெரிக்காவில் வலம் வந்த இளைஞர் கெய்த் ஹாரிங் (Keith Haring) சுவரோவியங்களில் வித்தகராகப் போற்றப்பட்டவர்.

பென்சில்வேனியாவில் 1958 ஆம் ஆண்டு பிறந்த இவர், நியூயோர்க்கில் கலையைக் கற்றார். பல்வேறு கண்காட்சிகளை நடத்திய தன் மூலம், 1980 இல் இருந்து 1987 வரையில், உலக அளவில் கவனிக்கப் பட்டார்.



சப்வே ஸ்டேஷன்களின் சாக் ஓவியங்களால் வசீகரித்த இவர், அமெரிக்காவில் கலையையும் கலாசாரத்தையும் வீதிகளுக்குக் கொண்டுவந்தவர்.

புகழின் உச்சத்தில் இருந்த இளம் கலைஞனான ஹாரிங், எயிட்ஸ் சம்மந்தமான நோயால் பாதிக்கப்பட்டார். அதன்பிறகு, தன்னார்வ நிறுவனம் ஒன்றைத் ஆரம்பித்து எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு தன்னால் இயன்ற அள வுக்கு உறுதுணையாக இருந்தார்.

இவர், 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதி, தனது 31 ஆவது வயதில் மறைந்தார்.

ஹாரிங்கின் கலைப் படைப்புகளுக்கு, உலகின் தலைசிறந்த அருங்காட்சியகங்களில் இன்றளவுக்கும் மிகுந்த வரவேற்பு உள்ளது.

புதுமைப்பித்தன் தொடங்கி கீட்ஸ் வரை... இளம் வயதிலேயே விண்ணுலகுக்குச் சென்றுவிட்ட போதிலும், இன்றும் மண்ணுலகில் நாயகனாக, மக்களின் மனங்களில் வாழ்க்கிறார், கெய்த் ஹாரிங்!

## ரோபோவுக்கு 'ஐ லவ் யூ' கூறும் இளைஞர்கள்!

ஜப்பானைச் சேர்ந்த ஹிரோசி இசிகுரோ என்ற விஞ்ஞானி, அச்சு அசலாக, பெண் போல் தோற்றமளிக்கும் ஒரு ரோபோவைத் தயாரித்துள்ளார். ஜப்பானில், இந்த ரோபோ, ஏற்கனவே பிரபலமாகி விட்டது. இந்தப் பெண் ரோபோ, சில படங்களில் நடித்துள்ளதுடன், சில விளம்பர படங்களிலும், மாடலாக நடித்துள்ளது.

தற்போது ஹொங்காங் சென்றுள்ள இந்த ரோபோ, அங்குள்ள மக்களை வெகுவாக கவர்ந்துவிட்டது. ஷொப்பிங் மால்களின் வரவேற்பறைகளில், ஆடம்பரமான சோபாவில், ஒய்யாரமாக அமர வைக்கப் பட்டுள்ள இந்த ரோபோவை பார்ப்பதற்கும், புகைப்படம் எடுப்பதற்கும், ஆயிரக்கணக்கானோர் குவிகின்றனர்.

இந்த பெண் ரோபோவிடம், அப்படி என்ன விசேஷம் என்கிறீர்களா. மனிதர்களைப் போல், 65 வகையான செயல்களை இந்த ரோபோ செய்யும். சிரிப்பது, சில குறிப்பிட்ட வார்த்தைகளை பேசுவது, பாடுவது, பார்வையாளர்களுக்கு ஆட்டோகிராப் போட்டுத் தருவது ஆகியவை, இதில் குறிப்பிடத்தக்கவை. சில குறும்புக்கார ஹொங்காங் இளைஞர்கள், இந்த ரோபோவின் அழகில் மயங்கி, அதனிடம், ஐ லவ் யூ என்று கூட, கூறியுள்ளனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.



பெற்ரோல் விலை உயர்வைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தலைமையில் சென்னையில் மாட்டுவண்டியில் சென்று ஆர்ப்பாட்டம் செய்தபோது.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2012. ஜூன் 03 ஆம் திகதி வெளியிடப்பட்டது.